348

# தமிழ்நாடு

## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

பிப்ரவரி ௨௦, 1999 தொகுதி ௩
எண். ௩

௧

D
V211,31'N99
N99.33.3
221088

வெளியீடு 19-1-2000 Issued 19-1-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**சனிக்கிழமை, பிப்ரவரி 20, 1999 - தொகுதி 63- எண் 3**

Saturday, **20th February, 1999 - Volume 63 - No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**

**Chennai - 600 009**

விலை ரூ. *3.00*] [Price Rs. 3.00

348/2000

20-2-1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 299 - 341 |
| 2. சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| திருவள்ளூர் மாவட்டம், புட்லூரில் விஷச் சாராயம் அருந்தியதால் மரணம் | 341 - 377 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 341 - 343 |
| * திரு. நா. பெரியசாமி | 344 - 346 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 346 - 350 |
| * திரு. இரா. தாமரைக்கனி | 350 - 355 |
| திரு. ஐ. கணேசன் | 355 - 357 |
| * திரு. வா. சந்தானம் | 357 - 358 |
| * திரு. டி. மணி | 358 - 365 |
| திரு. சி. வேலாயுதன் | 361 - 364 |
| திரு. பி. வெங்கடசாமி | 364 - 361 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 366 - 367 |
| * திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 367 - 368 |
| * மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 369 - 377 |

பக்கங்கள்

3. அறிவிப்பு—

இலங்கைத் தூதர் பேரவை நடவடிக்கைகளைப் பார்வையிடுகையில் தெரிவித்த வாழ்த்து — 378

4. சிறப்பு விதி 110-ன்கீழ் அறிக்கை—

கோவை சிறையில் தீவிரவாதிகள் அறைகளில் சோதனையிட்டபோது ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக வெளியாகியுள்ள செய்திபற்றி சட்டத் துறை அமைச்சரின் அறிக்கை — 378 - 380

5. அரசினர் தனித் தீர்மானம்—

மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையில் மாநில ஒதுக்கீடுகள் மாற்றம் செய்யப் படாமலிருக்க இந்திய அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கோருதல் — 380 - 381

6. அரசினர் தீர்மானம்—

விதி 32-ஐத் தளர்த்தல் — 381 - 382

7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்-தொடர்ச்சி— 382 - 428

திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் — 382 - 387

* திரு. ச. அழகுவேலு — 387 - 390

* திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் — 390 - 396

திரு. எஸ். திருநாவுக்கரசு — 396 - 412

* திரு. ம. சண்முகம் — 412 - 415

டாக்டர் க. கிருஷ்ணசாமி — 415 - 422

திரு. பி.ஆர். சுந்தரம் — 422 - 427

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 428 - 429

221088

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மாசி 8, வெகுதான்ய—திருவள்ளுவர் ஆண்டு 2030

## 1999 பிப்ரவரி 20, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்"

ஒருவன் தன்னிலை மறந்து மயங்கியிருப்பதற்காகப் போதைப் பொருளை விலை கொடுத்து வாங்குதல் விவரிக்கவே முடியாத மூடத்தனமாகும்.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் விடைகள். வினா எண் 41, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

41—

#### நிலம் கையகப்படுத்துதல்

***13764—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) SIPCOT நிறுவனம் மூலமாக ஓசூர், தேங்கனிக்கோட்டை வட்டங்களில் தொழில்களை விரிவுபடுத்த நிலம் கையகப்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கையகப்படுத்தப்படும்?

(இ) இதற்கு எவ்வளவு ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது?

[1999 பிப்ரவரி 20

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) தற்போது ஓசூர் வட்டத்தில் SIPCOT இரண்டாம் கட்ட வளாகத்தின் இரண்டாவது விரிவாக்கத்திற்காக 212 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் தேன்கனிக்கோட்டையில் நிலம் எடுப்பதற்கான திட்டம் எதுவும் தற்சமயம் அரசிடம் இல்லை.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, there is lot of demand from Karnataka side because infrastructure facilities are not available at Bangalore. Many people are interested to come to Hosur and Denkanikotta Taluks to start industries and lot of applications are pending. Our Tamil Nadu Government is giving electricity, water and good administration. Industrialists are interested to come to Hosur. May I request the Hon. Chief Minister to start a third complex at Hosur so that we can develop Hosur in a better way?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஓசூர் வட்டம் மொரணபள்ளி கிராமத்தில் நிலம் கையகப்படுத்த 4(i) நோட்டிபிகேஷன் விடப்படுகின்ற சூழ்நிலையிலே அதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. நில நிர்வாக ஆணையருடைய பரிசீலனையில் இருக்கிறது. இதற்குப் பிறகுதான் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற தேன்கனிக்கோட்டையைப் பற்றி யோசிக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் ஓசூர் வட்டத்தில் ஏற்கெனவே சிப்காட் உருவாக்கப்பட்டு பல தொழிற்சாலைகள் அங்கே நிர்மாணிக்கப்பட்டன. ஆனால் கடந்த ஓராண்டுக்காலமாக பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு அங்கிருக்கக்கூடிய தொழிலாளர்கள் எல்லாம் தங்களுடைய வேலைகளை இழந்து அவர்கள் இன்று தத்தளித்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அங்கு மட்டுமல்ல. பல இடங்களிலே—ராணிப்பேட்டை சிப்காட்டிலேயும் அதே போலத்தான், பல தொழிற்சாலைகள் இப்பொழுது மூடப்பட்டு வருகின்றன. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்படி மானியத்தை எல்லாம் பெற்று வளம் பெற்றிருக்கக்கூடிய



1999 பிப்ரவரி 20]

தொழிற்சாலைகள் எல்லாம் இப்போது ஏன் மூடப்படுகின்றன என்பதை ஆராய்வதற்காக ஒரு குழுவை அமைத்து அதை மீண்டும் திறப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய முதல்வர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, குழு அமைத்து எல்லா வளாகங்களிலும் இருக்கின்ற தொழிற்சாலைகளுடைய நிலைகளை ஆராய்வதைவிட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நமக்கு மிக அருகிலே உள்ள இராணிப்பேட்டையில் எந்தெந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன, அதற்கு என்ன காரணம் என்பதை அறிந்து எனக்கு அறிவிப்பார்களேயானால் அதைப்பற்றி ஏற்ற முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எங்களுடைய மதிப்பீட்டுக் குழு ஓசூருக்குச் சென்றபோது அங்கிருந்த ELCOT நிறுவனத்தை நாங்கள் பார்வையிட்டோம். ஓசூரிலே ELCOT நிறுவனம் இப்போது வேலை இல்லாத நிலையிலே, அதாவது Lay off-லே, மூடப்பட்டிருக்கிறது. அத்தகைய நிலையைப் போக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்திலே இல்லை, இது நிலம் கையகப்படுத்துவது பற்றி, வளாகம் அமைப்பது பற்றித்தான் இருக்கிறது. வளாகத்திலே ஏற்கெனவே அமைக்கப்பட்ட தொழிற்சாலைகளுடைய நிலை குறித்த வினாவாக இருந்தால் அதற்கு ஏற்ற விவரங்களோடு நான் வந்திருக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிரமப்பட்டு உருவாக்கப்படுகின்ற SIPCOT போன்ற தொழிற்கூடங்களில் தொழிற்சாலைகள் நடைபெறாமல் இருப்பதற்குக் காரணமே 1991ஆம் ஆண்டு இந்தியாவிலே உருவாக்கப்பட்ட புதிய பொருளாதார கொள்கைதான் என்றும் வெளிநாடுகளிலேயிருந்து கொண்டு வரப்படுகின்ற அந்நிய முதலீடுகள் தன்னுடைய market-ஐ இந்தியாவிலே நிலை நிறுத்திக் கொள்வதற்காக இந்தியாவினுடைய பாரம்பரியத் தொழில்களான கைத்தறி மற்றும் பஞ்சாலை போன்ற பல்வேறு

தொழில்களை அழிப்பதற்குரிய நடவடிக்கைகளை இந்திய அரசை மேற்கொள்ள நிர்பந்திப்பதாகவும், அதனால்தான் சிறு, குறுந்தொழில்களுக்கு இத்தகைய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்படுகிற குற்றச்சாட்டு குறித்து அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தக் குற்றச்சாட்டு குறித்து நான் நன்றாக அறிவேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகள்தான் இந்தக் குற்றச்சாட்டுகளைக் கூறி வருகின்றன. இதை நான் நன்றாக அறிவேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, there is a lot of demand for industrial plots at Hosur. That is why I request the Hon. Chief Minister to consider acquiring some more lands at Hosur and Denkanikotta Taluks to improve industries.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். மாண்புமிகு உறுப்பினர் கவலைப்படத் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 42, திரு. அ. அசோகன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**42—**

### உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

***15319—திரு. அ. அசோகன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் தொகுதி, குருக்கத்தி மற்றும் குளிக்கரை அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



திருவாரூர் மாவட்டம், குருக்கத்தி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு பகுதி-I திட்டத்தின்கீழ் 1997-98-ல் அரசு முழு நிதியுதவியுடன் கூடுதலாக 2 வகுப்பறைகள் கட்டிக்கொடுக்க அரசாணை நிலை எண் 291, பள்ளிக் கல்வித் துறை நாள் 9-7-1997-ல் ரூபாய் 4 இலட்சம் நிதி ஒதுக்கியும், குளிக்கரை அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக 2 வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க, ரூ.4.4 இலட்சம் நிதி ஒதுக்கி, அரசாணை நிலை எண் 278, பள்ளிக் கல்வித் துறை நாள் 24-7-1998-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 43, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**43—**

### கிராமப்புற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு

***15507—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற மாணவர்களுக்கு 20 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென "அனந்தகிருஷ்ணன்" குழு பரிந்துரைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதை உடனடியாக நடைமுறைப்படுத்துமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆளுநர் உரையிலேகூட 15 சதவீத இட ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, அனந்தகிருஷ்ணன் குழுவினுடைய பரிந்துரையை ஏற்றால் பின்தங்கிய மற்றும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பயனடைவார்கள் என்ற ஒரு கருத்து இருக்கிறது. அது மீண்டும் பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1999 பிப்ரவரி 20

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியொரு பரிந்துரை அனந்தகிருஷ்ணன் கல்விக் குழுவால் அரசுக்கு வழங்கப்படவில்லை என்பது உண்மை. மற்றொன்று, பொதுவான கொள்கைதான், கிராமப்புற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பது. அந்த இட ஒதுக்கீடும் பொதுத் தொகுதியில் இடம் பெறாமல் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் ஆகிய இந்த மக்களுக்கு ஒதுக்கப்படுகிற அந்த இடங்களில், இந்த 15 சதவீதம் ஒதுக்கப்படக்கூடிய நிலைதான் இப்போது சட்டப்படி நமக்கு வாய்த்திருக்கிறது. எனவே, இந்தப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், கிராமப்புறத்திலேயிருந்து வருகிறவர்களுக்கு மட்டும்தான் அந்த இட ஒதுக்கீடு கிடைக்கும். இதை அதிகப்படுத்தி நடத்த வேண்டுமென்ற அவசியம் எழுவதாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தைப் பொறுத்த அளவிலே கிராமப்புறங்களிலேதான் கல்விக் கூடங்கள் அதிகமாக இருக்கின்றன, நகர்ப்புறங்களைக் காட்டிலும். எனவே, கிராமப்புறங்களிலேயிருந்து வருகின்ற மாணவர்கள்தான் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் 15 சதவீதம் என்பதை 20 சதவீதமாக ஆக உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான கருத்து இந்தக் கேள்வி மூலமாக எழுந்திருக்கிறது. கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவீத பங்கு மட்டும்தான் என்ற எண்ணத்தில் இந்தக் கேள்வி கேட்கப்படுகிறது. மிச்சம் இருக்கிற எல்லா இடங்களிலேயும் கிராமப்புற மாணவர்கள் தகுதி அடிப்படையில் இடம் பெறுவதற்கான உரிமை பெற்றவர்களாய் இன்றைக்கும் இடம் பெற்று வருகிறார்கள். கிராமப்புறத்திலே படித்த காரணத்தினால் பொதுத் தொகுதியிலேயோ, பிற்படுத்தப்பட்டவர் என்ற முறையிலேயோ, தாழ்த்தப்பட்டவர் என்ற முறையிலேயோ யாரும் இடம் பெறுவது தடுக்கப்படவும் இல்லை, அவர்கள் தகுந்த அளவு இடங்களைப் பெற்றும் வருகிறார்கள். இந்த 15 சதவீதம் என்பது கிராமப்புறப் பகுதியிலேயிருந்து வருகிறவர்களுடைய மொத்த



1999 பிப்ரவரி 20]

சதவீதம் குறைந்து போகாமல் இருப்பதற்காக, நிறைவு செய்வதற்காக, கைதூக்கி விடுவதற்காகத் தரப்படுகிறதே தவிர, இவை மட்டும் அல்ல கிராமப்புற மாணவர்கள் அடைகிற இடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இட ஒதுக்கீட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் Back-log Committee என்ற ஒரு Committee-யினை அமைத்து, அந்தக் Committee-யிலே நானும்கூட ஒரு அங்கத்தினராக இருக்கின்றேன். அந்த அடிப்படையிலே எல்லோரையும் வரவழைத்துப் பார்க்கும்போது பல இலாகாக்களிலே 5 சதவீத, 10 சதவீத இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூல வினாவிற்கும், உங்கள் துணை வினாவிற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? உட்காருங்கள். இது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல முடியும். திரு. வை. சிவபுண்ணியம்.

முற்பகல் 9-40

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது ஆளுநர் உரையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பதுபோல், 15 விழுக்காடு கிராமப்புற மாணவர்களுக்குச் சலுகை என்பது சிற்றூராட்சிகளுக்கு மட்டும் என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? பேரூராட்சிகளுக்கும் இதை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். காரணம், பேரூராட்சிப் பகுதிகளிலும் கிராமப்புற பகுதிகள் இருக்கிற காரணத்தாலே பேரூராட்சிகளுக்கு உட்பட்ட மாணவர்களுக்கும் இந்தச் சலுகை கிடைக்கச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அடிப்படையில் Rural area என்ற ஒரு பாகுபாடு இருக்கிறது. நீதிமன்றத்திலே Rural area என்று அந்த விதிமுறைக்கு உட்பட்டு வருகிற இடங்களை நாம் குறிப்பிட்டால்தான் இந்த 15 விழுக்காடு ஒதுக்குவது செல்லுபடியாகும் என்ற அடிப்படையிலே செய்யப்பட்டிருக்கிறது. மற்றும் ஒன்று, எந்தப் பள்ளியிலே படித்த கிராமப்புற மாணவர்களும், இந்த ஒதுக்கீட்டிலே

[1999 பிப்ரவரி 20

இடம் பெறக்கூடியவர்களும்கூட சற்று அதிகமான, மதிப்பெண்கள் பெற்றால் மொத்தத்தில் இடம் பெறுகிறார்கள். அதாவது கிராமப்புற மாணவர்கள் மற்ற வகையிலே இடம் பெறுவது தடுக்கப்படவில்லை. பேரூராட்சியிலோ மற்ற இடங்களிலோ படித்த மாணவர்கள் மொத்த பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர் இட ஒதுக்கீட்டுக்கான அந்தப் பகுதிகளில் இடம் பெறுகிறார்கள். ஏறத்தாழ 100-க்கு 40 விழுக்காடுக்கு மேல் இடம் பெறக்கூடிய நிலைமை இயல்பாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சீ.வெ. கிருஷ்ணன்.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் பல்வேறு Nursery பள்ளிகளை அரசு அனுமதி பெறாமல் நடத்துகிறார்கள். அரசுக்கு வருமானம் வருகிற வகையில் அரசு அனுமதி வழங்கி அவை நடத்தப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி என்றாலே செலவு என்றுதான் பொருள். கல்வி என்பதற்குப் பொருள் செலவு என்பது. ஆகவே, இதிலே வருமானம் என்று கருதப்படுவதற்கு அவசியமும் இல்லை, அது முறையும் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற மாணவர்களும் தொழிற்கல்வி பயில வேண்டும் என்று இந்த ஒதுக்கீடு செய்ததை வரவேற்கின்ற போதிலும்கூட, பொதுவாக இதுபோன்ற தொழிற் கல்விகள் எல்லாம் தகுதியுள்ள மாணவர்கள் போட்டியின் அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்பட்டால் அங்கே தரம் உயரும். இருந்தபோதிலும்கூட, மாணவர்களுக்கு இந்தச் சலுகை கிராமப்புற மாணவர்களுக்கு வழங்குவது போல, கிராமப்புறங்களிலே கல்வியினுடைய தரத்தை உயர்த்தி நகர்ப்புறத்திலே இருக்கக்கூடிய மாணவர்களோடு போட்டியிட்டு அவர்கள் தொழிற் கல்வியிலே சேருவதற்கான சூழ்நிலையை உருவாக்க இந்த அரசு கிராமப்புற மாணவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்த என்னென்ன பிரத்யேக நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.



1999 பிப்ரவரி 20]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கல்வி மானியத்திலே அளிக்க வேண்டிய விடை. அவ்வளவு விரிவாக விடை அளிக்க வேண்டும். முதலில் கிராமப்புற பள்ளிகள் புறக்கணிக்கப்பட்டு, அலட்சியப்படுத்தப்படாமல் உரிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுவது, அந்த ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முறையாகப் பயிற்சி தருவது கவனிக்கப்படுகிறது, கிராமப்புற பள்ளிகளை வளப்படுத்துவதற்காக மாவட்டக் கல்வி வளர்ச்சித் திட்டம் என்ற திட்டம் பிற்படுத்தப்பட்ட 7 மாவட்டங்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதேபோல, புதியதாக உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், எந்தெந்த பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு முறையாக வழங்க முடிகிறதோ அவற்றிற்கு வழங்கப்படுகிறது. ஆசிரியர் மொத்தமாகவே நியமிக்கப்படாமல் இருக்கின்ற நிலைமையை மாற்ற பெரும் அளவில் நியமிப்பதுடன் இன்னும் ஒரு வகையில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாக இந்தப் பிற்படுத்தப்பட்ட வட்டாரத்திலேயுள்ள பள்ளிகளில் தொழிற் கல்வித் தேர்வு எழுத விரும்புகிற மாணவர்களுக்கு, தனிப் பயிற்சி வழங்கப்படுகிறது, அவர்களுக்காகக் குறிப்பேடுகள் தயாரித்து வழங்குவது உட்பட பல முனைகளில் இந்த முயற்சி நடைபெறுகிறது. எவ்வளவுதான் செய்தாலும்கூட மேலும் பல வகையிலும் செய்ய வேண்டிய தொடர்ச்சியான ஒரு பணியாகும் இது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44, திரு. பெ. ஆசையன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**44—**

### தொடக்கச் சுகாதார நிலையத்தை நிலை உயர்த்துதல்

***9945—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், கடமலைக்குண்டு—மயிலாடும்பாறை ஒன்றியம், கடமலைக்குண்டு கிராமத்திலுள்ள தொடக்கச் சுகாதார நிலையத்தை நிலை உயர்த்தப்பட்ட தொடக்கச் சுகாதார நிலையமாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1999 பிப்ரவரி 20

கடமலைக்குண்டு கிராமம் மயிலாடும்பாறை ஒன்றியத்தில் உள்ளது. அவ்வொன்றியத்தில் கண்டமனூர் மற்றும் கடமலைக்குண்டு ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் கண்டமனூர் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருவதாலும், நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஒரு சமுதாய நல மையம் அல்லது மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் என்ற வரைமுறையின் அடிப்படையிலும் கடமலைக்குண்டு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக நிலை உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**45—**

**மருத்துவமனை கட்டுதல்**

***16678—திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெற்றியூர் ஊராட்சியில் மருத்துவமனை (தாய்-சேய் நலவிடுதி) கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் அமைப்பது அரசின் கொள்கையாகும். வெற்றியூர் கிராமத்தின் மக்கள் தொகை 5,000-க்கும் குறைவாக இருப்பதால், இங்கு தனியாக ஒரு துணை சுகாதார நிலையம் கட்டித் தரும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றியூர் கிராமம் இந்த ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு பல்வேறு திட்டப் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து அண்ணா மறுமலர்ச்சித்



1999 பிப்ரவரி 20]

திட்டத்தின்கீழ் பயன்பெறும் அந்தக் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை சுகாதார நிலையமே அளிக்க முடியாது என்று நான் பதில் சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர் ஆரம்ப சுகாதார நிலையம் கேட்கிறார். ஒரு துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கு 5,000 மக்கள் தொகை இருக்க வேண்டுமென்பது மத்திய அரசாங்கத்தினுடைய இலக்கு. வெற்றியூர் என்ற கிராமத்தினுடைய மக்கள் தொகை 1,290. எனவே, அங்கே தனியாக துணை சுகாதார நிலையம் அமைக்க வாய்ப்பு இல்லை. இப்பொழுது வெற்றியூர், விரகனூர் துணை சுகாதார நிலையத்திலே உள்ளடங்கியிருக்கிறது. விரகனூரிலே மொத்தம் 5 கிராமங்களை இணைத்துத்தான் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே, தனியாக வெற்றியூரிலே துணை சுகாதார நிலையம் அமைக்க வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொ. முருகேசன்.

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஊராட்சிகளில் கட்டப்பட்டிருக்கிற தாய்-சேய் நல விடுதிகள் நீண்ட ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டவை. அந்தக் கட்டடங்களெல்லாம் மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. அப்படிப்பட்ட சீர்கேடு அடைந்துள்ள அந்தக் கட்டடங்களையெல்லாம் புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எண்ணாயிரம் துணை சுகாதார நிலையங்கள் தமிழகத்திலே இயங்கி வருகின்றன. அவற்றிலே 4,000 துணை சுகாதார நிலையங்களுக்கு இன்னும் கட்டடங்களே இல்லை. எனவே, அதைக் கட்டி முடித்ததற்குப் பிறகுதான் பழைய கட்டடங்களைப் பழுது பார்க்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, திரு. டி. மணி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

46—

## குழித்துறை நகராட்சியில் குடிநீர் வசதி

***5290—திரு. டி. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நகராட்சிப் பகுதியில் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தில் பழுதடைந்த குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குழித்துறை குடிநீர்த் திட்டத்தில் பதிக்கப்பட்ட பழுதடைந்த குழாய்கள் மாற்றப்பட்டு தற்சமயம் குடிநீர் விநியோகம் குழித்துறை மற்றும் மார்த்தாண்டம் பகுதிகளில் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழித்துறை பகுதியில் பழைய குடிநீர்த் திட்டத்திற்குப் பதிலாக புதிய குடிநீர்த் திட்டத்தை முந்தைய ஆட்சிக் காலத்திலே ஆரம்பித்த நேரத்தில் தரம் குறைந்த குழாயைப் பதித்ததன் காரணமாக, அந்த நகராட்சிக்கும் இப்பொழுது இழப்பு; அரசுக்கும் இழப்பு இதன் காரணமாக. அந்தத் தரம் குறைந்த குழாய் அமைத்ததில் ஏற்பட்ட இழப்பின் காரணமாக அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன? அதுபோன்று, ஏற்கெனவே 7 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட களியக்காவிளை, மெதுகும்மல் குடிநீர்த் திட்டங்களிலும் இதே நிலைதான். பழைய ஆட்சிக் காலத்திலே தரம் குறைந்த குழாய்களைப் பதித்ததன் காரணமாக இன்னும் அந்த வேலை முடியவில்லை. மக்களுக்குத் தண்ணீர் கொடுக்க முடியவில்லை. எனவே, அவர்கள்மீது எடுத்த நடவடிக்கை என்னவென்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை நகராட்சிக்குக் குடிநீர்த் திட்டம் வழங்குவதற்கு மார்ச் 1996இல் வேலைகள் முடிக்கப்பட்டு அந்தத் திட்டத்தின்கீழ் குழித்துறை நகரில் 378 மீட்டர் நீளத்திற்கு விநியோகக் குழாய்கள் பதித்து இருந்தது. அதிலே பதித்திருந்த 110 மில்லி மீட்டர் பி.வி.சி. குழாய்களும், பம்மம் பகுதியில் பதித்திருந்த 220 மீட்டர் நீளத்திற்கு நீர் உந்து குழாய்களும் ஆரவல்லி நிறுவனத்தின் மூலம் வாரியத்தினால் பெறப்பட்டு பதிக்கப்பட்டன, 1996 மே திங்களில். இந்த அரசு பொறுப்பேற்றது இதற்கிடையில் பதிக்கப்பட்டு முடித்ததற்குப் பிறகு புதிய திட்டப் பணிகள் தொடங்கப்படும் என்று அறிவித்து அவற்றைப் பரிசீலனைக்கு எடுத்தபோதுதான் இந்தப் பிரச்சினை தெரிய வந்தது. இந்தக் குழித்துறை நகராட்சியில் மட்டுமல்ல; இன்னும் நூற்றுக்கணக்கான இடங்களில் இப்படிப்பட்ட புகார் அரசுக்கு வந்ததையொட்டி அந்தக் குழாய்கள் மிகுதியிருப்பதை யாரும் இனிமேல் எந்தப் பணிக்கும் எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும், எங்கெங்கே இருக்கிறதோ, அங்கங்கே திருப்பி ஒப்படைத்து அதற்கு உரியவர்கள்மீது நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டு அந்தப் பிரச்சினை இன்னும் நடவடிக்கையில் இருந்து கொண்டிருக்கிறது. அதிலே தொடர்புடைய அதிகாரிகள்மீதும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் தரம் குறைந்த குழாய்களை விநியோகித்ததற்காக ஆரவல்லி நிறுவனத்திடமிருந்து ஒரு இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு கோரி அவர்கள்மீதும் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.





முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

47—

## திருநீர்மலை பேரூராட்சியில் குடிநீர் வசதி

***7883—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, திருநீர்மலை பேரூராட்சியில் குடிநீர் வழங்கும் திட்டம் விரைந்து செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்தப்பட்ட விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஆம். தாம்பரம் தொகுதி, திருநீர்மலை பேரூராட்சியில் குடிநீர் வழங்கும் திட்டத்தின் பணிகளை முடித்து நவம்பர் 1998 முதல், திட்டம் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. டிசம்பர் 1998-ல் பேரூராட்சியிடம் பராமரிப்புக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அந்தத் திருத்தப்பட்ட விடையை என்னுடைய அலுவலகத்திற்கு முன்கூட்டியே கொடுத்தனுப்பியிருக்க வேண்டும், இங்கே அல்ல. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல, அந்தப் பணிகள் நிறைவுற்றாலும், அந்தப் பணியை எடுத்துக் கொள்கிறபோது, ஏற்கெனவே இருந்த திறந்தவெளிக் கிணறான முள்ளங்கிணறு என்ற கிணற்றைத்தான் நீராதாரமாக எடுத்துக் கொண்டார்கள். எடுக்கிறபோதே நான் சொன்னேன், அந்தக் கிணற்றில் தண்ணீர் இருக்காது என்று. தூர் வாரிப் பார்ப்போம் என்றார்கள். அது இப்போது பயனில்லாத காரணத்தால், மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிக்கு தண்ணீர் ஏற்றக்கூடிய வாய்ப்பு இல்லை. அதற்கு மாற்றுக் கிணறு ஏற்பாடு செய்து தருகிறேன் என்று சொன்னார்கள். இன்னும் அது ஒப்படைக்கப்படவில்லை. எனக்குத் தெரிந்தவரையில் பேரூராட்சியிடம் ஒப்படைக்கப்படாததற்குக் காரணம், மாற்றுக் கிணறு அமைத்துத் தராததுதான். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து மாற்றுக் கிணறு அமைத்துத் தருவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், திருநீர்மலை பேரூராட்சிக்கான பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கு 27-12-1994-ல் ரூ. 68 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. அதற்கு டிசம்பர் 1997-ல் ஒரு கோடியே 18 இலட்சம் ரூபாய்க்கு திருத்திய மதிப்பீடு வழங்கப்பட்டது. பிறகு, 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை 14,930 என்றும் இதற்கு மேல் 2001ஆம் ஆண்டு வரை எதிர்பார்க்கப்படும் உச்சகட்ட மக்கள் தொகை 52,500 என்றும் கணக்கிடப்பட்டு, நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு, இத்திட்ட மதிப்பீட்டில் 2/3 பங்கு ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடனாகவும், 1/3 பங்கு அரசு மானியமாகவும் பெறப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஆனால் குடிநீர்த் திட்டம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, தனித்தனியாக நீராதாரங்கள் மற்றும் நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டது. திறந்தவெளிக் கிணறுகள், 6 மீட்டர் விட்டம், 15 மீட்டர் ஆழம் என்ற வகையில் 4 கிணறுகள், அதைப்போலவே 3.25 மீட்டர் விட்டம், 5 மீட்டர் ஆழம் என்ற அளவில் ஒரு கிணறு, ஏற்கெனவே இருந்த பழைய கிணறு, இப்படி அமைக்கப்பட்டு, நீர்த் தேக்கத் தொட்டி என்ற வகையில் 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவில் தரை மட்டத் தொட்டி ஒன்றும், 7 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரை மட்டத் தொட்டி ஒன்றும், 3 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்டது ஒன்றும் இப்படிப் பணிகள் தொடங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன.



**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியது அத்தனையும் உண்மை. ஆனால் ஏற்கெனவே இருந்த கிணற்றை நீராதாரமாக எடுத்துக்கொண்ட காரணத்தால் அதிலே தற்போது தண்ணீர் இல்லை என்றும் அதற்கு மாற்றுக் கிணறு அமைத்துத் தர வேண்டுமென்றும் அதிகாரிகளுக்கெல்லாம் கடிதம் தந்திருக்கிறேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலமுறை மாண்புமிகு உறுப்பினரோடு நான் அவரது தொகுதிக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இருக்கிறேன். இதுவரையில் இதைப்பற்றி என்னிடம் அவர் நேரில் தெரிவிக்கவில்லை. எவ்வளவோ விஷயங்களை என் கவனத்திற்குக் கொண்டுவந்த அவர், என்ன காரணத்திற்காக இதை நிறுத்தி, மறைத்து வைத்தார் அல்லது உண்மைக்குப் புறம்பாகச் சொல்கிறாரா என்ற சந்தேகம்கூட எனக்கு எழும்புகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, திரு. வீ. தமிழ்மணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

[1999 பிப்ரவரி 20

48—

## சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு விசைத் தெளிப்பான் வழங்குதல்

***6078—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய விசைத் தெளிப்பான் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) 1996-97-ல் எத்தனை விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டது?

(இ) திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் எத்தனை பேர் இதனால் பயனடைந்துள்ளனர்?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகள் உட்பட பிற அனைத்து விவசாயிகளுக்கும் பயறு சாகுபடி செய்தால் 1996-97 ஆம் ஆண்டில் தேசிய பயறு பெருக்கத் திட்டத்தில் மானியத்துடன் கூடிய விசைத் தெளிப்பான்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

(ஆ) 1996-97 ஆம் ஆண்டு தேசிய பயறு பெருக்கத் திட்டத்தின்கீழ் 164 விசைத் தெளிப்பான்கள், 164 விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு சாதனை முடிக்கப்பட்டுள்ளது.

(இ) திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒருவருக்கும் வழங்கப்படவில்லை.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி விவசாயிகளுக்கு மானியத்தோடு வழங்கப்படுகின்ற அந்த விவசாயக் கருவிகள், கடந்த காலங்களில் ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக வழங்கப்பட்டன. அதனால் பல்வேறு விவசாயிகளுக்கு அது தெரிவதற்கு வாய்ப்பாக இருந்தது. ஆனால், இப்போது விவசாயத் துறையின் மூலமாக நேரடியாக வழங்கப்படுகிறது. என்னென்ன உபகரணங்கள் விவசாயிகளுக்கு வழங்குகிறார்கள் என்பது விவசாயிகளுக்குத் தெரிவதில்லை. அதிகாரிகளே அவர்களுக்கு



1999 பிப்ரவரி 20]

வேண்டியவர்கள் யாருக்காவது கொடுப்பதன் மூலம் பல தவறுகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது. என்னென்ன கருவிகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன என்பதை விளம்பரங்கள், துண்டுப் பிரசுரங்கள் மூலம் விளம்பரப்படுத்தி, அவை விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அப்படிச் செய்தாலே நடைபெறுகின்ற தவறுகளைக் களைவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுவிடும். எனவே, ஒவ்வோர் ஊராட்சிக்கும் என்னென்ன கருவிகள் வழங்கப்படுகின்றன என்பதை விளம்பரப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல விசைத் தெளிப்பான்கள் போன்ற விவசாயக் கருவிகள் எதுவும் தவறாக வழங்கப்பட்டதாக அரசுக்குப் புகார் வரவில்லை. அப்படித் தவறாக வழங்கப்பட்டதற்கு ஆதாரம் ஏதுமிருந்தால், அதை அவர் என்னிடத்திலே கொடுப்பாரேயானால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது வேளாண்மைத் துறை இணை இயக்குநர் அவர்கள் மூலமாகத்தான் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு அந்தக் கருவிகள் எல்லாம் வழங்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 49, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

49—

## வேளாண்மைக் கல்லூரி தொடங்குதல்

***18613—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, மேல்செங்கத்தில் வேளாண்மைக் கல்லூரி ஒன்றைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

[1999 பிப்ரவரி 20

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீரைக் கொண்டு அதிக உணவு உற்பத்தி செய்கின்ற மாவட்டம் எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டமாகும். இருப்பினும், மற்ற வகையில் அந்த மாவட்டம் பின்தங்கியே இருக்கிறது. அங்கே இரண்டு கலைக் கல்லூரிகள்தான் இருக்கின்றன. ஒன்று செய்யாரிலும், மற்றொன்று திருவண்ணாமலையிலும் இருக்கின்றன. எங்களுடைய செங்கம் தொகுதி அதைவிடப் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அந்தக் காரணத்தினால், மேல்செங்கம் பண்ணையில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டால் அந்தப் பகுதி மக்கள் முன்னேறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே, அங்கே வேளாண்மைக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பண்ணை அல்லது தோட்டக்கலைப் பண்ணை இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிக்க இயலாது. இப்போது தமிழகத்திலே வேளாண்மைக் கல்லூரி, வேளாண் பொறியியல் கல்லூரி, தோட்டக்கலைக் கல்லூரி எல்லாம் சேர்த்து 10 கல்லூரிகள் இருக்கின்றன. ஆண்டொன்றுக்கு 531 பேர் எல்லாக் கல்லூரிகளிலும் சேர்க்கப்படுகிறார்கள். இப்போதே 2,500-க்கும் மேற்பட்ட நபர்கள் படித்து முடித்து வேலையில்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்க இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 50, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.



1999 பிப்ரவரி 20]

**50—**

### நீர்த்தேக்கத் திட்டங்களை நிறைவேற்றல்

***7674—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, உள்ளாறு, கோட்டைமலையாறு, கோம்பை, வாழமலையாறு ஆகிய நீர்த்தேக்கத் திட்டங்கள் எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உள்ளாறு மற்றும் வாழமலையாறு நீர்த்தேக்கத் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

கோம்பையாறு நீர்த்தேக்கத் திட்டம் பரிசீலனைக்குப்பின் சாத்தியமற்றது என்று கருதி கைவிடப்பட்டுள்ளது.

கோட்டைமலையாற்றின் குறுக்கே தனியாக நீர்த்தேக்கம் அமைக்க கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டத்திற்கு எல்லாவிதமான ஆய்வும் செய்யப்பட்டு, வனத் துறைக்கு சுமார் 146 இடங்கள் பரிவர்த்தனையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அதேநேரத்தில், அங்கே உயர்ந்த மரங்கள் இருக்கின்றனவா, உயரிய மிருகங்கள் இருக்கின்றனவா என்றெல்லாம் மத்திய அரசின்மூலம் ஆய்வுகள் செய்யப்பட்டு, அப்படி எதுவும் இல்லை என்று அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அந்த உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டம் நிறைவேறினால் சுமார் 15,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

அடுத்து, கோம்பையாறு நீர்த்தேக்கத் திட்டம் கைவிடப்பட்டு விட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். கோம்பையாறு திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து நேரடியாக தண்ணீர் வந்து, போன ஆண்டுகூட இரண்டு குளங்கள் உடைபட்டன. அதேமாதிரி, இந்த ஆண்டு 3 குளங்கள், சின்னவெடிபேரி, கோனார்குளம், வழிவிளிகுளம் உடைபட்டிருந்தன. ஆகையினால், இந்தக்

கோம்பையாறு திட்டத்தை மீண்டும் மறுபரிசீலனை செய்து எடுத்தால் நலமாக இருக்கும்.

முற்பகல் 10-00

அதேமாதிரி, வாழமலையாறு, கோட்டைமலையாறு திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களுமே சிறந்தத் திட்டங்கள், இதற்கான மதிப்பீடுகள் ஆய்வு செய்யப்பட்டு அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றன. இந்த நான்கு திட்டங்களையும் நிறைவேற்றினால் மொத்தத்தில் மதிப்பீடு சுமார் 50 கோடி ரூபாய்க்குக் கீழ்தான் வரும். இந்தத் திட்டங்கள் நிறைவேறினால், சிவகிரி தாலுகா, சங்கரன்கோவில் தாலுகா ஆகிய இரண்டு தாலுகாக்களில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும். அதேநேரத்தில், நிலத்தடி நீரினால், விவசாயம் செய்வதற்கும், உணவு உற்பத்தியைக் கூட்டுவதற்கும் வாய்ப்பாக இருக்கும். ஆகவே, தாங்கள் வருகிற நிதியாண்டிலாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். ஏற்கெனவே நெற்கட்டும்சேவல் பூலித்தேவனுடைய சிலைத் திறப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் இதைக் கொண்டு வந்து, வலியுறுத்தி, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நேரடியாகக் கூறினேன். வருகின்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் நிச்சயமாக நல்ல முடிவாக இருக்கும் என்று மாண்புமிகு டாக்டர், முதல்வர் அவர்கள் நல்ல பதிலுரையாகச் சொன்னார்கள். அதேமாதிரி மறைந்த எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலைத் திறப்பு விழாவிற்கு வந்த நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடமும் வலியுறுத்தி இருக்கிறேன். ஆகவே, இந்தத் திட்டத்தைக் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியே பெரிய கேள்வி. உள்ளாறு, கோட்டைமலையாறு, வாழமலையாறு, கோம்பையாறு என்று நான்கு தனித்தனி நதிகள். இந்த நான்கு தனித்தனி நதிகளிலும், தனித்தனியாக அணை கட்ட வேண்டுமென்று ஒரே கேள்வியில் கேட்டு இருக்கிறார். ஒரே கேள்வியில் கேட்டது மட்டுமல்ல, துணைக் கேள்வியிலும் ஒன்றாகவே இணைத்துக் கேட்டிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இரண்டு நிமிடங்கள் அவசாகம் தர வேண்டும். காரணம், "உள்ளாறிலும் உள்ளதடா அரசியல்" என்று இப்போது உள்ளாற்றைச் சிலர் அரசியல் ஆக்கப் பார்க்கிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், உள்ளாறு என்கின்ற ஒரு திட்டம், சிவகிரிக்கு மேற்கே, வாசுதேவநல்லூருக்கு மேற்கே, மேற்குத் தொடர்ச்சி மலையிலே உற்பத்தியாகி வருகிறது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், சங்கரன்கோவில் பக்கத்தில் இருக்கிற ஊர்கள் வாசுதேவநல்லூர், சிவகிரி போன்ற பகுதிகளில் குடிதண்ணீர் பிரச்சினை தீரும்; விவசாயிகளுக்கு உதவும், இதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்தில்லை. இப்போது அல்ல, 1989-லே கலைஞர் ஆட்சி அமைந்தபோது, கலைஞர் அவர்கள் என்னை அனுப்பி அந்தப் பகுதியைப் பார்வையிடச் சொன்னார்கள். இது மாண்புமிகு ஈஸ்வரனுக்குத் தெரியும். காடு, வனாந்திரம் என்று வெயிலிலே அந்த மலைகளிலே ஏறி இறங்கியவன். இன்னும் ஒரு படி மேலே சொல்லப்போனால், அந்த இடத்தைப் போய் பார்த்த அமைச்சர்களில் நான்தான் இருப்பேன் என்று எனக்குத் தெரியும். அந்தத் திட்டத்தைக் கலைஞர் அவர்கள் 1989-90-லே நிறைவேற்றப் பார்த்தார்கள். அதிலே இருக்கிற பிரச்சினை என்னவென்றால், உள்ளாறிலே இருந்து தண்ணீர் வருகிறபோது, ஒரு இடத்திலே பகிர்மானம் wier கட்டியிருக்கிறார்கள். wier கட்டி இரண்டு பக்கமும் தண்ணீர் போகிறது. ஒன்றுக்குப் பெயர், இராஜசிங்கபேரிக் கால்வாய், இன்னொன்று குலசேகர ஏரிக் கால்வாய். இராஜசிங்கபேரிக் கால்வாய் போய் இராஜசிங்க ஏரியிலே கலக்கிறது, குலசேகர ஏரிக் கால்வாய் குலசேகர ஏரியிலே கலக்கிறது. ஆனால், தண்ணீர் வருகிறபோது, இறுதியில் தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக ஆற்றிலே குறைந்து இரண்டு அடி தண்ணீர் வந்தால், அது முழுமைக்கும் இராஜசிங்கபேரி ஏரிக்கே போகிறது. அதனால், குலசேகர ஏரிக்காரர்கள் என்ன கேட்கிறார்கள் என்றால், அந்தக் கடைசித் தண்ணீர் அவர்களுக்கே போகிறது. எங்களுக்கு வரவேண்டுமென்று சொல்கிறார்கள். இராஜசிங்கபேரி ஏரி சிவகிரி ஜமீனுக்குச் சொந்தம், குலசேகர ஏரி திருமால்புர கிராமத்திற்குச் சொந்தம். ஆனால் ஜமீன்தாரர்கள் என்ன சொன்னார்கள் அந்தக் காலத்தில் என்றால் —இது 150 ஆண்டுக் கால பிரச்சினை—தலைவர் அவர்களே, 1852-லே இந்தப் பிரச்சினை ஆரம்பித்தது, அப்போது அவர்கள் சொன்னார்கள் - wier இருப்பதில் தப்பு இல்லை, இயற்கையினுடைய வளம் அப்படி அமைந்திருக்கிறது, இரண்டு அடி தண்ணீர் வந்தால், இராஜசிங்கபேரி ஏரிக்குத்தான் வருகிறது என்று சொன்னார்கள். இப்படி பிரச்சினை வந்து, கடைசியிலே 1901-லே நெல்லை நீதிமன்றத்திலே ஒரு வழக்கு

[1999 பிப்ரவரி 20

தொடுக்கப்பட்டது. என்ன வழக்கு என்றால், இது இயற்கையாக அமையவில்லை, ஜமீன்தாரர்கள் தங்கள் ஆட்களை வைத்து wier-ஐக் கட்டிவிட்டார்கள், பகிர்மான அணையை கட்டிவிட்டார்கள் என்று சொன்னார்கள். நெல்லை நீதிமன்றம் விசாரித்த பிறகு 1904-ல் தீர்ப்புச் சொன்னது, உடனே சொன்னது, 'இல்லை, இல்லை, இயற்கையாகவே இருக்கிறது' என்றுதான் சொன்னது. மீண்டும் 1904-ல் மேல்முறையீட்டுக்குப் போனது. 1904-லே போனபிறகும் மறுபடியும் அதே தீர்ப்பு 'இயற்கையாகவே இராஜசிங்க ஏரிக்கு இரண்டு அடி தண்ணீர் போகிற அமைப்பு இருக்கிறது, இதை மாற்ற முடியாது' என்று தீர்ப்புரைத்து விட்டார்கள்.

முற்பகல் 10-05

பிறகு 1943-ல் பெரும் வெள்ளம் வந்து அந்த அணையே அடித்துக் கொண்டு போய்விட்டது. பிறகு என்ன நடந்தது என்றால், புதியதாக அந்த அணையைக் கட்டப்போனது அப்போது இருந்த அரசாங்கம். கட்டப்போனபோது என்ன நடந்தது என்றால், இருவருக்கும் தண்ணீர் சமமாகப் போகிற அளவுக்கு அணை கட்டிவிடுகிறோம் என்று 1943-ல் அரசு முடிவு எடுத்தது. உடனே அதை எதிர்த்து இராஜசிங்கபேரி ஏரிக்காரர்கள் உயர்நீதிமன்றத்திற்குப் போனார்கள். 1948-49-ல் இரு தீர்ப்புரைக்கப்பட்டது. இராஜமன்னாரும் வெங்கட்ராம ஐயரும் சேர்ந்து ஒரு தீர்ப்புரைத்திருக்கிறார்கள். இல்லை, இராஜசிங்கபேரி ஏரிக்கு 2 அடி தண்ணீர் வருகிற வரையிலே அந்தத் தண்ணீர் அப்படியேதான் போக வேண்டும், அதுதான் உறுதி என்று தீர்ப்புரைத்துவிட்டார்கள். இப்போது இருக்கிற பிரச்சினை என்னவென்றால், அணையை நாங்கள் கட்டுவதற்குத் தயார். முதலமைச்சர் அவர்களும் அதை விரும்புகிறார்கள். ஆனால், அங்கே அணை கட்டுகிறபோது இராஜசிங்கபேரி ஏரி மற்றும் குலசேகர ஏரி ஆகிய இரண்டுக்கும் பாசன ஆயக்கட்டுகள் அடிப்படையில் தண்ணீரைப் பிரிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இல்லை, இல்லை எங்களுக்கு இரண்டு அடி வரையில் தண்ணீர் வருகிற வரையிலும் அப்படித்தான் நீங்கள் திட்டங்களை அமைக்க வேண்டுமென்று இராஜசிங்கபேரி ஏரிக்காரர்கள் சொல்கிறார்கள். இரண்டு பேரையும் சேர்த்து வைத்து ஒரு சமரசம் ஏற்பட்டால் அரசு கட்டுவதில் தவறு இல்லை. ஆனால் சமரசம் 150 ஆண்டுகளாக ஏற்படவில்லை. இனி அது ஏற்படுமா என்று எனக்குத் தெரியவில்லை. நாங்கள் திட்டமிட்டால், மறுநாள் இராஜசிங்கபேரி ஏரிக்காரர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று ஒரு stay



1999 பிப்ரவரி 20]

வாங்கிவிடுகிறார்கள். ஆகவே திட்டம் ready, 140 ஏக்கர் வன நிலங்கள்கூட தயார் செய்து வைத்திருக்கிறோம். மற்ற பிரச்சினைகளைப்பற்றி கவலை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்களுடைய தொகுதிதான். அவர் தலையிட்டு இதற்கு ஒரு முடிவை ஏற்படுத்திக்கொடுத்தால், கலைஞர் அரசு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரே ஒரு கேள்விக்குதான் பதில் சொல்லியிருக்கிறேன். இன்னொரு கேள்வி என்னவென்று கேட்டால், கோட்டைமலை ஆற்றிலே ஒரு அணை கட்ட வேண்டும், அடுத்து வாழமலையாற்றிலே ஒரு அணை கட்ட வேண்டும் என்று கேட்டார். மேற்குத் தொடர்ச்சி மலையிலே உற்பத்தியாகி வருகிற ஒரு ஆறு. கோட்டைமலை ஆறு, இன்னொரு ஆறு விரிச்சடை ஆறு, இரண்டும் சேர்ந்தபோது அந்த ஆறுக்குப் பெயர் வாழமலையாறு. அந்த வாழமலையாறு நேராக ஓடி காக்கா நதியில் கலக்கிறது. காக்கா நதி வைப்பாறில் கலக்கிறது. ஆகையினால் கோட்டைமலையாறு, விரிச்சடையாறு இரண்டும் சேர்ந்தால் வாழமலையாறு. வாழமலையாற்றில் அணை கட்டுவதற்குத் திட்டம் இருக்கிறது. அதனுடைய உபநதியாகிய கோட்டைமலையாற்றில் அணை கட்டிவிட்டால், வாழமலையாற்றுக்குத் தண்ணீர் வராது. நியாயமாக வாழமலையாறு தண்ணீர்தான் வைப்பாற்றுக்குக் கீழே வருகிறது. இன்றைக்கு நாம் கட்டுகிற அணை இருக்கன்குடிக்கு இருந்தாலும் அந்த மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்று கருதுகிறோம். எனவே கிளை நதியிலேயும் ஒரு அணை கட்டி, அதனுடைய பிரதான நதியிலேயும் ஒரு அணையைக் கட்டுவதால் இரண்டுக்கும் பயன்படாது என்பதால் வாழமலையாற்றில் கட்டுகிறோம்.

அடுத்து, கோம்பையாறுபற்றிச் சொன்னார்கள். இதுகுறித்து மூன்று முறை சொல்லியிருக்கிறேன். கோம்பையாறும் தேனியாறும் ஒன்றாகக் கலக்கிறது. கோம்பையாற்று நீர்த்தேக்கத்திற்கு 1977-ல் ஒரு திட்டம் போட்டோம். ஆனால் போதிய நீர் வராது என்ற காரணத்தால் கைவிடப்பட்டது. பிறகு 1983-ல் ஓர் ஆய்வு நடத்தினோம். 1983-ல் It is not feasible என்று விட்டுவிட்டார்கள். 1988-ல் மீண்டும் ஒரு ஆய்வு. Not feasible என்று தள்ளிவிட்டார்கள். கடைசியில் 1990-ல் ஒரு ஆய்வு, அதுவும் சரியில்லை. 4 முறையும் ஆய்வு செய்து தள்ளிவிட்டார்கள். ஆக, வாழமலையாற்றில் ஒரு அணை கட்டுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. உள்ளாற்றிலும் அணை கட்டலாம். ஆனால் சமரசம்

இல்லாமல் அணை கட்டுவது என்பது முடியாது. எனவே, இராஜசிங்கபேரி ஏரிக்கும், குலசேகர ஏரிக்கும் நீங்கள் ஓர் அணை கட்டுங்கள், பாலம் கட்டுங்கள், மனதை இணையுங்கள். நல்லிணக்கம் ஏற்படட்டும், பிறகு கலைஞருடைய அரசு அதைச் செய்யும். இவ்வளவு பிரச்சினைகளை மறைத்துவிட்டு, ஏதோ நாங்கள்தான் உள்ளாற்றுக்காரர்களுக்காக இருக்கிறோம் என்று ஒரு உண்ணாவிரதம் இருப்பது, ஒருவர் notice போடுவது என்று இருப்பது மக்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக இவ்வளவு விளக்கங்களைத் தந்தேன். நன்றி, வணக்கம்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு மேலும் துணைக் கேள்வியை அனுமதிக்க முடியாது. இப்போதே உறுப்பினர்கள் எல்லாம் சங்கடப்படுகிறார்கள். மேலும் விளக்கம் தேவைப்பட்டால், தனியாக அமைச்சரைச் சந்தித்து விளக்கம் பெற்றுக்கொள்ளுங்கள்.

அடுத்து வினா எண் 51, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**51—**

**வாய்க்கால்களுக்குக் கான்கிரீட் தளம்**

***10115—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரம்பிக்குளம் - ஆளியாறு திட்ட வாய்க்கால்களுக்குக் கான்கிரீட் தளம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள ஆதார அமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 103.50 கோடி செலவில் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட வாய்க்கால்களில் சீரமைப்புச் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 52, திரு. ப. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**52—**

**பட்டுக்கோட்டைக்குக் கூடுதல் பேருந்து வசதி**

***442—திரு. ப. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டையிலிருந்து கள்ளிக்காடுவரை மற்றும் பட்டுக்கோட்டையிலிருந்து பாலமுத்தி வழியாக திருவோணம்வரை, மதுக்கூரிலிருந்து புலவஞ்சி வரை, பட்டுக்கோட்டையிலிருந்து சுந்தரநாயகிபுரம்வரை இயங்கிக் கொண்டிருந்த நகரப் பேருந்துகள் நிறுத்தப்பட்டுவிட்டதால் அவற்றை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பட்டுக்கோட்டையிலிருந்து கள்ளிக்காடுவரை, பட்டுக்கோட்டையிலிருந்து பாலமுத்தி வழியாக திருவோணம் வரை, மதுக்கூரிலிருந்து புலவஞ்சி வரை மற்றும் பட்டுக்கோட்டையிலிருந்து சுந்தரநாயகிபுரம் வரையுள்ள பேருந்துத் தடங்களில் மக்களின் பயன்பாடு 70 விழுக்காடுகளுக்கும் குறைவாக இருந்ததினால் இத்தடங்களில் இயக்கப்பட்டு வந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டன. இப்பொழுது பட்டுக்கோட்டையிலிருந்து சுந்தரநாயகிபுரம் வரை நீங்கலாக மற்ற மூன்று வழித் தடங்களிலும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

பேருந்து வசதி பெற்ற தடத்திலிருந்து 1.5 கி.மீ. தூரத்தில் உள்ள சுந்தரநாயகிபுரத்திற்கு தற்போது பேருந்து இயக்கப்படவில்லை. கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும்போது சுந்தரநாயகிபுரத்திற்கு நடைகள் இயக்கப்படும்.

[1999 பிப்ரவரி 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 53, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**53—**

**உவரி-சென்னை பேருந்து இயக்குதல்**

***15537—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், உவரியிலிருந்து சென்னைக்குப் புதிய வழித்தடத்தில் பேருந்துவிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் உவரியிலிருந்து சென்னைக்குப் புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கும் திட்டம் எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராதாபுரம் வட்டம் உவரியில் மிகவும் சிறப்புமிக்க சுயம்புலிங்க சுவாமி திருக்கோயில் இருக்கிறது. புனித அந்தோணியார் திருக்கோயில் இருக்கிறது. மேலும், கன்னியாகுமரி வருகின்ற சுற்றுலாப் பயணிகள் எல்லாம் ஆத்தங்கரைப்பள்ளிவாசல், உவரி வழியாக திருச்செந்தூர் வருகின்றார்கள். மிகவும் முக்கியமான திருத்தலம் அது. எனவே, மீண்டும் பரிசீலனை செய்து ஒரு அரசு விரைவுப் பேருந்து விடுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக வழித்தடம் எண் 292 உவரியிலிருந்து சென்னைக்கு இயக்கப்பட்டபோது மேற்படி பேருந்தைப் பயன்படுத்தும் பயணிகளின் விகிதாச்சாரம் 70



1999 பிப்ரவரி 20]

விழுக்காட்டிற்கும் குறைவாக இருந்ததன் காரணமாக அந்த வழித்தடம் 17-8-1989-ல் ஆரம்பிக்கப்பட்டு, 15-1-1991-ல் நிறுத்தப்பட்டுவிட்டது. அதே பகுதியிலேயிருந்து விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம், உவரிக்கு மிகவும் அருகிலுள்ள முட்டம், இடையான்குடி, திசையன்விளை ஆகிய இடங்களிலிருந்து சென்னைக்குப் பேருந்துகள் இயங்கி வருகின்றன. ஆகவே, தனியாக உவரியிலிருந்து சென்னைக்குப் பேருந்து இயக்கும் திட்டம் எதுவுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியிலிருந்து சென்னைக்குத் தமிழக அரசு போக்குவரத்துக் கழகம் இரண்டு பேருந்துகள் விட்டது. ஆனால், திருமங்கலத்திலிருந்து, ஆளும் கட்சியைச் சேர்ந்த தனியாருடைய Omni bus பாதிக்கப்படுகிறது, அதே route-ல் ஓடுகிறது என்று சொல்லி, அரசுப் பேருந்தை நிறுத்திவிட்டார்கள். இதனால் தனியார் நல்ல இலாபம் அடைந்துகொண்டிருக்கிறார்கள். அதனால் அரசு மீண்டும் அரசுப் பேருந்தை விடுவதற்கு உரிய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தவறான குற்றச்சாட்டாகும். தனியார் பேருந்துகள் ஓடுகின்றன என்று காரணம் காட்டி, எந்த அரசுப் பேருந்தும் நிறுத்தப்படவில்லை. அரசுப் பேருந்துகள், அதுவும் விரைவுப் பேருந்துகள் ஓடுகின்ற அந்த வழித்தடங்களில், குறிப்பாக, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற போக்குவரத்துக் கழகங்களே வழித்தடங்களை இயக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதுபோன்று, தனியாருக்காக பேருந்துகள் நிறுத்தப்படுகின்ற வழக்கம், கடந்த காலங்களிலே இருந்ததே தவிர, தற்போது அது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 54, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

[1999 பிப்ரவரி 20

54—

## அருங்காட்சியகம் அமைத்தல்

***12546—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மலைக்கோட்டையில் அருங்காட்சியகம் அமைத்து, சுற்றுலா மையமாக அறிவித்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திண்டுக்கல் மலைக்கோட்டையில் அருங்காட்சியகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மலைக்கோட்டை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டையாகும். முகலாய மன்னர்களும், விஜய நகர சாம்ராஜ்ஜிய அரசர்களும் ஆண்டு, அது மிகப்பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டையாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்பாக வெளிநாட்டவர்கள்கூட அந்த மலைக்கோட்டையை வந்து பார்த்துச் செல்கின்ற நிலையிருந்தது. ஆனால், இப்போது அது கேட்பாரற்று சிதிலமடைந்து, மோசமான நிலையில் இருக்கிறது. இன்னொரு புறத்திலே ஒரு தகவல் சொல்கிறார்கள். அது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி இருக்குமானால், மத்திய அரசோடு கலந்து அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டையைப் பாதுகாக்க வேண்டும் என்ற வகையிலும் அந்த வரலாற்றுச் சின்னங்கள் பொது மக்களுக்குத் தெரிய வேண்டுமென்ற அடிப்படையிலும் இதை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1999 பிப்ரவரி 20]

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஓர் அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை. அந்த அடிப்படையில் கடந்த காலங்களில் 12 மாவட்டங்களில் அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய ஆட்சிக் காலத்தில் 5 மாவட்டங்களில் அரசு அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சிய மாவட்டங்களிலும் தொடர்ந்து அமைக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாக இருக்கிறது. இந்த நிலையில், திண்டுக்கல் மாவட்டத்தில் ஏற்கெனவே, தாங்கள் குறிப்பிட்ட மலையைவிட அதிகமான மக்கள் நடமாடுகின்ற பழநிமலையில் ஏற்கெனவே அருங்காட்சியகம் நம்முடைய ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்டிருக்கிறது. அதை நினைவில் கொள்ள வேண்டுகிறேன். அதேநேரத்தில், தாங்கள் குறிப்பிடுகின்ற இந்த மலைக்கோட்டை சிதிலமடைந்த நிலையில் இருப்பதாகத் தாங்களே குறிப்பிட்டீர்கள் அந்த நிலையில், அதைச் சுற்றுலா மையமாக்க வேண்டுமென்று சொன்னால், சுற்றுலாத் துறையே தனிப்பட்ட முறையில் எதையும் சுற்றுலா மையமாக அறிவிப்பதில்லை. மக்கள் நடமாட்டம் அதிகமாக இருந்து, தேவைக்கு அதிகமான வரவுகள் இருக்குமானால், அதற்கான வசதிகளை மட்டுமே சுற்றுலாத் துறை செய்து தருகின்றது. எனவே, இப்போதைய நிலையில் பழனியில் ஏற்கெனவே ஒரு அருங்காட்சியகம் இயங்குகிற நிலையில், அதே மாவட்டத்தில் மற்றொரு அருங்காட்சியகம் அமைக்கக்கூடிய நிலை இப்போது இல்லை.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 55, திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

55—

## மானியத் தொகையை உயர்த்துதல்

***11351—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், கொளத்தூர் தொகுதி, மாத்தூரில் இயங்கி வரும் வள்ளலார் மாணவர் இல்லத்திற்கு வழங்கப்படும் அரசின் மானியத் தொகையை உயர்த்தித்தர அரசு முன்வருமா?

[1999 பிப்ரவரி 20

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் அரசின் மானியம் பெறும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மாணவ/மாணவியர் இல்லங்கள் 39 இயங்கி வருகின்றன. அவ்வில்லங்களில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்கு நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 85 வீதம் வழங்கப்பட்டு வந்த உணவுக் கட்டணத்தை 1-11-1997 முதல் ரூ. 120 ஆக உயர்த்தி கழக அரசு ஆணை வெளியிட்டு அமலாக்கப்பட்டு வந்தது. மேலும் இந்த உணவுக் கட்டணத்தை 1-11-1998 முதற்கொண்டு ரூ. 150 ஆக உயர்த்தி கழக அரசு ஆணை பிறப்பித்து அமல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு மானியம் பெறும் மேற்சொன்ன 39 மாணவ / மாணவியர் இல்லங்களில் புதுக்கோட்டை மாவட்டம், கொளத்தூர் தொகுதி, மாத்தூரில் இயங்கிவரும் வள்ளலார் மாணவர் இல்லமும் ஒன்றாகும். எனவே, மேலும் மானியத் தொகையை தற்போது உயர்த்திடத் தேவை எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், இருக்கையில் இல்லை.

வினா எண் 56, திரு. வி.பி. சிங்காரவேலு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**56—**

**அனுமதி பெறாமல் எஸ்டேட்டுகள் வாங்கி, விற்றோர் மீது நடவடிக்கை**

***2424—திரு. வி.பி. சிங்காரவேலு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு தனியார் வனச் சட்டம் பிரிவு 3 (1) (ஏ)-ன்படி அனுமதி பெறாமல் எஸ்டேட்டுகளை வாங்கி, விற்பனை செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?



1999 பிப்ரவரி 20]

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். தமிழ்நாடு தனியார் வனச் சட்டம் பிரிவு 3 (1) (ஏ)-ன்படி, அனுமதி பெறாமல் எஸ்டேட்டுகளை வாங்கி விற்பனை செய்தவர்கள்மீது குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தனியார் வனச் சட்டம் 3 (1) (ஏ)-ன்படி பல்வேறு நபர்கள் தமிழகத்திலே, அதுவும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் இந்த எஸ்டேட்டுகளை, தமிழ்நாட்டிலே முத்திரைத் தாள்களுடைய கட்டணம் அதிகமாக இருக்கிற காரணத்தாலும், மும்பையில் 100 ரூபாய்க்கு 3.50 என்று மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தாலும், அங்கே சென்று, தமிழ்நாடு தனியார் வனச் சட்டம் 3 (1) (ஏ)-ன்படி மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்ட வனக் குழுவினுடைய அனுமதி பெறாமல், எஸ்டேட்டுகளை வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள்; விற்றுக் கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக, முன்னாள் முதலமைச்சர்** அவர்களும் அவரைச் சார்ந்தவர்களும் ஊட்டியிலே இருக்கக்கூடிய கொடநாடு என்ற எஸ்டேட்டை 40 கோடி ரூபாய்க்கு வாங்கி இருக்கின்றார்கள். அந்த எஸ்டேட் இந்தச் சட்டத்தின்படி அனுமதி பெறாமல்தான் வாங்கப்பட்டு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே இதை நான் கடந்த ஆண்டு தெரிவித்தபொழுது, அவர்களும் உடனடியாக வனத் துறைச் செயலாளரை அழைத்து வழக்கு போடச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில், இதுவரையிலும் அந்த எஸ்டேட்டை வாங்கியவர்கள்மீதும் விற்றவர்கள்மீதும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது என்பதை நான் அறிய வருகிறேன். அதை அரசு கவனத்திலே எடுத்துக்கொண்டு, அந்த எஸ்டேட்டை வாங்கிய முன்னாள் முதலமைச்சர் ** மற்றும் அவரைச் சார்ந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்; எடுக்குமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன், இன்னும் ஒன்று சொல்ல வேண்டும். . . .(குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன Point of order ?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** வினா நேரத்தில் குற்றச்சாட்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் குற்றச்சாட்டா? போன தடவையே கொடுத்தார்; இன்னும் எடுக்கவில்லை என்று சொல்கிறார்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இவர் பெயரைச் சொல்லி குறிப்பிடுகிறார். அவர் பொதுவாகச் சொன்னார்; போக்குவரத்துக் கழக bus விடுவதைப் பற்றிப் பொதுவாகச் சொன்னார். ஆனால், இவர் பெயர் சொல்லிச் சொல்கிறாரே. இது என்ன . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெயரைச் சொல்லாதீர்கள், சொன்ன பெயரை எடுத்துவிடுகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1949 ஆம் வருடத்திய தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களை பிரிவு 3 (1) (ஏ)-ன்படி மாவட்டக் குழுவின் முன் அனுமதி பெறாமல் எந்த ஒரு நபரும், நிறுவனமும் தனக்குச் சொந்தமான காட்டுப் பகுதியை விற்கவோ, அடமானம் மற்றும் குத்தகைக்கு விடவோ அல்லது வேறு எந்த வகையிலும் காட்டின் மொத்தப் பரப்பையோ அல்லது அதில் ஒரு பகுதியையோ அனுபவிக்கும் பாத்தியதையை யாருக்கும் மாற்றித் தரவோ இயலாது.

தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அனுமதி வழங்குதல் மற்றும் தண்டனை வழங்குதல் ஆகிய அதிகாரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் செயல்படும் கீழ்க்காணும் உறுப்பினர்களைக்கொண்ட மாவட்டக் குழுவிற்கு உள்ளது:—

1. மாவட்ட ஆட்சித் தலைவர்
2. மாவட்ட வன அலுவலர்
3. வட்டாட்சியர்
4. விவசாயத் துறையின் செயற் பொறியாளர்
5. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)

இச்சட்ட விதிகளை மீறிச் செயல்படுபவர்களுக்குச் சட்ட விதியின் பிரிவு 7 (1)-ன்படி 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அல்லது ரூ.5000 அபராதமும் அல்லது இரண்டும் சேர்த்தோ தண்டனை விதிக்கப்படலாம். இதுபோன்ற குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுக்க





மாவட்டக் குழுவின் ஒப்புதல் வேண்டும். மாவட்டக் குழு அனுமதி மறுக்கும்பட்சத்தில் அந்த ஆணையினை எதிர்த்து அவ்வாணை வெளியிடப்பட்ட இரண்டு மாதத்திற்குள் அரசுக்கு மேல்முறையீடு செய்துகொள்ளலாம். மேல் முறையீட்டு மனுக்கள்மீது ஆய்வு செய்து அரசு தக்க ஆணைகள் வெளியிடும்.

முற்பகல் 10-20

அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை மற்றும் சிவகிரி வட்டங்களில் முன்அனுமதி பெறாமல் தனியார் நிலங்களை வாங்கிய 9 நபர்களுக்குத் தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம் 1949-ன்படி பிரிவு 7 இன்கீழ் ஒவ்வொரு நேர்விற்கும் அதிகபட்சத் தண்டனை வழங்குவதற்கு மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு மனுதாரர்கள் நிலக் கிரயங்களை வரன்முறைப்படுத்தி பின்னேற்பு அளிக்க அரசாணை எண் 296, நாள் 27-7-1997 இன்படி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், கோவை மாவட்டம், வால்பாறை மௌண்ட் ஸ்டுவர்ட் எஸ்டேட் உரிமையாளரிடமிருந்து திருவாளர்கள் என்.இ.பி.சி. கார்டன் நிறுவனத்தினர் அனுமதி பெறாமல் வாங்கிய 534.61 ஏக்கர் நிலம் குறித்து குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள கோவை மாவட்ட வருவாய் அலுவலரால் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, பொள்ளாச்சி வன உயிரினக் காப்பாளரால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த கொடநாடு எஸ்டேட் நிகழ்வு குறித்து, நமது வனத் துறைச் செயலாளர் அவர்கள் மூலம் தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்க பணிக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்நாடு தனியார் வனச் சட்டம் குறித்த இந்தக் கேள்வியில் ஒன்றினைக் குறிப்பிட விரும்புகிறேன். நீலகிரி மாவட்டம், கூடலூரில் அரசுக்குச் சொந்தமான சுமார் 900 ஏக்கர் நிலத்தினை settlement அலுவலர் ஒருவர் பட்டா செய்து கொடுத்த பரபரப்பான நிகழ்வு நம்முடைய முதல்வர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டவுடன், அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த 900 ஏக்கர் வன நிலத்தைக் காப்பாற்றி அரசுக்குச் சேர்த்தார்கள். ஆனால், இதற்கு முன்பு இதுபோல்

பல இடங்களில் நடைபெற்று, பல தனியார் தேயிலைத் தோட்ட முதலாளிகள் நூற்றுக்கணக்கான ஏக்கர் வன நிலங்களையும், வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலங்களையும் வைத்திருப்பதாக அறியப்படுகிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், வருவாய்த் துறையினரோடு இணைந்து தமிழ்நாட்டில் இருக்கிற தனியார் தேயிலைத் தோட்டங்கள் தங்களுக்கு அருகில் உள்ள வருவாய்த் துறை மற்றும் வனத் துறை நிலங்களைக் கையகப்படுத்தி இருக்கின்றனவா என்பதை அறிய தனியாக ஓர் ஆய்வு நடத்த ஆவன செய்வார்களா என்பதை அன்போடு அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரசுக்குத் தெரிவித்த விவரங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வனத் துறை நிலங்களை எஸ்டேட் நிலச் சொந்தக்காரர்கள் கையகப்படுத்தியிருக்கிறார்களா என்பதை அறிய அதிகாரிகள் இப்போது இல்லை. இருந்தாலும்கூட அதிகாரிகளை வருங்காலத்தில் நியமனம் செய்து, வனத் துறையின் நிலங்களைக் கையகப்படுத்தியவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 57, திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**57—**

**கால்நடை மருத்துவமனை தொடங்குதல்**

***15595—திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் மற்றும் திருநாகேசுவரம் பேரூராட்சிகளில் கால்நடை மருத்துவமனை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அவைக்கு அளிக்கிறேன்.



(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூரில் 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ஒரு புதிய கால்நடை மருந்தகம் தொடங்கப்பட்டு 26-9-1998 முதல் செயல்பட்டு வருகிறது. திருநாகேசுவரத்தில் கால்நடை மருந்தகம் திறக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு திருவிடைமருதூரில் கால்நடை மருந்தகம் தொடங்க அனுமதி வழங்கியதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருநாகேசுவரம் பேரூராட்சி சுமார் 10 சிற்றூராட்சிகளின் மையப்பகுதி. ஆயிரக்கணக்கான கால்நடைகள், கறவை மாடுகள் நிறைந்த பகுதி. இப்பகுதியில் அடிக்கடி கோமாரி போன்ற தொற்றுநோய் ஏற்படுகிற காரணத்தாலும், 1990-91 இல் கால்நடைத் துறையால் வாடகை இல்லாத கட்டடம் கோரப்பட்டு, மருந்தகம் தொடங்க ஒரு கருத்துரு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இப்போது வாடகை இல்லாத கட்டடம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. எனவே, வரும் நிதியாண்டிலாவது இங்கே கால்நடை மருந்தகம் தொடங்க அரசு முன்னுரிமை அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநாகேசுவரத்திலிருந்து 6 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள திருவிடைமருதூரில் ஒரு புதிய கால்நடை மருந்தகம் மற்றும் 6 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள துக்காச்சியில் ஒரு கால்நடைக் கிளை நிலையம் ஆகியவை சிகிச்சைப் பணிகளை மேற்கொண்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், திருவிடைமருதூர் ஒன்றியத்தில் ஆடுதுறை, நாச்சியார்கோவில் ஆகிய ஊர்களில் மருந்தகங்களும், திருமங்கலக்குடி, எஸ்.புதூர், திருச்சேரை, துக்காச்சி, பவுண்டரிகபுரம், கூகூர் ஆகிய 6 இடங்களில் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இனி வரும் ஆண்டுகளில் மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையில் கூறியது நிதிநிலையை அனுசரித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 பிப்ரவரி 20

முற்பகல் 10-25

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் ஒன்றியத்தில் ஆடுதுறை கால்நடை மருத்துவமனை ஆடுதுறை நெல் ஆராய்ச்சி மையத்தின் அருகில் அமைந்திருக்கிறது. வேளாண்மைத் துறை பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்கள் விவசாயிகளின் துணைத் தொழிலாகிய கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு குறித்தும் ஆராய்ச்சி நடத்துகிறார்கள். எனவே, அந்த ஆடுதுறைக் கால்நடை மருத்துவமனையை Clinician Centre ஆகத் தரம் உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய கருத்துருக்கள் அனுப்பப்படுமானால், அதைப்பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 58. திரு. இரா. ஆவுடையப்பன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**58—**

**மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்றிதழ்**

***2198—திரு. இரா. ஆவுடையப்பன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தாலூகாவில் மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழும் மக்களுக்குச் சாதிச் சான்றிதழ் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அம்பாசமுத்திரம் வட்டம் மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழும் மக்களுக்கு "காலிக்காரன்" எனச் சாதிச் சான்றிதழ் வழங்க மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 341 மற்றும் 342-ன்படி நாடாளுமன்ற இரு அவைகளிலும்



1999 பிப்ரவரி 20]

சட்டத் திருத்தம் நிறைவேறிய பின்னர்தான் இம்மக்களுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்க இயலும்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பை வட்டத்தில் 'காட்டுநாயக்கர்' என்ற ஒரு சமுதாயம் இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய அந்தச் சமுதாயத்தைச் சார்ந்த பெற்றோர்கள் கல்வி பெற்று, சாதிச் சான்றிதழும் பெற்றிருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய குழந்தைகளுக்கு 'காட்டுநாயக்கர்' சமுதாயம் என்று சான்று கொடுக்க அரசு மறுத்து வருகிறது. உடனடியாக அந்தச் சான்று கிடைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் வட்டத்தில் 'காணிக்காரன், காணிகார்' என்ற பிரச்சினைக்காக மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கொடுத்திருந்தார். இப்பொழுது 'காட்டுநாயக்கர்' என்று சான்றிதழ் பெற்றும் அவர்களுக்கு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை வழங்கப்படவில்லை என்று சொல்கிறார். 'காட்டுநாயக்கன்' என்று அவர்களுக்குச் சான்றிதழ் வழங்க சட்டபூர்வமாக என்னென்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை எடுப்பதற்கு நாங்கள் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருக்கிறோம். குறிப்பாக, இப்படிப்பட்ட புகார் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் தகவல் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள நகரங்களான புளியங்குடி, சிவகிரி போன்ற பகுதிகளில் 'சோளகர்' என்ற ஒரு இனத்தவர் - அவர்கள் Scheduled Tribes இனத்தவர்கள் - வாழ்கிறார்கள். இதில் "ர்" இல்லாமல் 'சோளகா' என்பதை Scheduled Tribe என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது. ஆனால் 'ர்' விகுதி போட்டு, தமிழிலே 'சோளகர்' என்று கேட்பதாலே அவர்களுக்கு Scheduled Tribe என்று சாதிச் சான்றிதழ் நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவராலே தரப்படவில்லை 'சோளகா', 'சோளகர்' இரண்டும் ஒன்று தான். ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களுக்கு சோளகா, சோளகர் என்பவருக்கு Scheduled Tribe Certificate கொடுப்பதற்கு அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

[1999 பிப்ரவரி 20

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சோளகா' என்பதும், 'சோளகர்' என்பதும் ஒன்றுதான் என்று தமிழக அரசு மைய அரசுக்குப் பரிந்துரை செய்ய இருக்கிறது. மைய அரசின் நாடாளுமன்ற இரு அவைகளிலும் சட்டத் திருத்தம் நிறைவேற்றி அதற்குத் திருத்தம் கொண்டு வரவேண்டும். திருத்தம் கொண்டு வந்த பிறகுதான் அதை அமல்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.பி. சிங்காரவேலு.

**திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வசிக்கக்கூடிய மக்கள் கேரள எல்லைப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்கூட, அங்கே அவர்களுக்கு அந்தச் சாதிச் சான்றிதழ் வழங்கப்படுவதில்லை. குறிப்பாக, வால்பாறை தொகுதியில் வால்பாறையிலிருந்து—தமிழ்நாடு எல்லையிலிருந்து—1 கி.மீ. தொலைவில் உள்ள 'மலுக்கப்பாறை' எஸ்டேட்டில் இந்த இனத்தவர்கள் தோட்டத் தொழிலாளர்கள், டாடா டீ நிறுவனத்திலே பணிபுரிகிறார்கள் ஆனால், அவர்களுடைய பிள்ளைகளுக்கு, அவர்கள் தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்கூட, அங்கே அவர்களுக்கு தாழ்த்தப்பட்டவர்கள் என்று சான்றிதழ் கேரள மாநிலத்திலே வழங்கப்படுவதில்லை. ஆகவே, கேரள அரசோடு தொடர்புகொண்டு, தமிழ்நாட்டிலே வாழ்கின்ற தாழ்த்தபபட்டோர் பட்டியலில் இருக்கக்கூடிய அந்த மக்களுக்கு தாழ்த்தப்பட்டோர் என்று கேரள அரசும் சான்றிதழ் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவில் இருக்கக்கூடிய பிரச்சினை பற்றி எங்களுடைய கவனத்திற்கும் வந்திருக்கிறது. அதேபோல மகாராஷ்டிராவிலும் இந்தப் பிரச்சினை இருந்து வருகிறது. இதுசம்பந்தமாக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் விரைவாக நடவடிக்கை எடுப்பதற்காக நினைவூட்டுக் கடிதமும் எழுதுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.



1999 பிப்ரவரி 20]

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை தமிழகத்தில் ஒரு பகுதியில் மட்டும் அல்ல, குறிப்பாக மயிலாடுதுறை வட்டத்திலுள்ள காளி, திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியத்திலுள்ள வடவேறு வெள்ளமண்டபம் போன்ற பகுதிகளில் இந்த மலைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பள்ளிகளிலே சேருகின்றபோது மலைக் குறவர்கள் என்ற சாதிப் பெயரைச் சொல்லி பதிவு செய்யப்பட்டு, அதற்கான சான்றிதழ் பள்ளிகளிலே வழங்கப்படுகிறது. ஆனால், அவர்கள் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு படித்ததற்குப் பிறகு வேலைவாய்ப்பு தேடுகின்றபோது அவர்களுக்கு சாதிச் சான்றிதழ் தேவைப்படுகிறது. அந்த சாதிச் சான்றிதழை கோட்டாட்சியர்தான் வழங்கமுடியும் என்றாலும், அவர் அதை வழங்குவதற்கு மறுக்கிறார். காரணம், இந்த S.T. என்கின்ற பிரிவினர் மலைப் பகுதிகளிலேதான் வாழமுடியும், இங்கே எப்படி இருக்க முடியும் என்று ஒரு கேள்வியைக் கேட்கின்ற நிலைமை இருக்கிறது. அதனால், அந்தச் சமுதாயத்தில் உள்ள படித்தவர்கள், ஆயிரக்கணக்கானவர்கள் வேலைவாய்ப்பு பெறமுடியாத நிலை இருக்கிறது. இது குறித்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாறிவரும் சூழ்நிலையில் பழங்குடி மக்கள் மலைப் பகுதிகளில் மட்டும்தான் வாழ்வார்கள் என்று இல்லாமல், அவர்கள் நகர்ப்புறங்களுக்கும் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். இதைக் கருத்தில்கொண்டு, பழங்குடி மக்களுடைய குணம், பழங்குடி மக்களுடைய பழக்க வழக்கங்கள் ஒத்து இருந்தால், அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கலாம் என்று அரசு தெளிவாக உத்தரவிட்டிருக்கிறது. இந்த நிலைமை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை கருணையுடனும், பரிவுடனும் பரிசீலித்து விரைவாகவும், வேகமாகவும், எளிதாகவும் அந்த மக்களுக்குச் சான்றிதழ் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறார்கள். விரைவில் அரசு உத்தரவிடுவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிரமாக ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் கையை உயர்த்திக்கொண்டிருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை எல்லாத் தொகுதிகளிலும் இருக்கின்றது. என்னுடைய சொந்தத் தொகுதியிலேகூட இருக்கிறது. அதனால் நான் எல்லோரையும் கேள்வி கேட்க அனுமதிக்க முடியாது. இந்தப் பிரச்சினையை ஒட்டுமொத்தமாக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்வோம்.

பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 59, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-30

**59—**

**ஊத்துமலையைச் சுற்றுலாத் தலமாக்குதல்**

***10477—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சிலநாயக்கன்பட்டியில் உள்ள ஊத்துமலையைச் சுற்றுலாத் தலமாக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ்ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், சிலநாயக்கன்பட்டியில் உள்ள ஊத்துமலையை சுற்றுலாத் தலமாக்கிட தற்போது செயற்குறிப்பு எதுவுமில்லை.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்துமலை என்பது சேலம் மாநகராட்சி எல்லையிலே இருக்கிறது. இயற்கையாகவே அங்கே வெவ்வேறு சுவைகளைக் கொண்ட நீர் ஊற்றுகள் இருப்பதால்தான் அது ஊத்துமலை என்று பெயர் பெற்றது. அதுமட்டுமல்லாமல், அது ஆன்மீக நண்பர்களுக்கும், இயற்கைச் சூழலை விரும்புகின்றவர்களுக்கும் ஏற்ற இடமாகும். அங்கே இயற்கையாகவே ஒரு பள்ளத்தாக்கு அமைந்து இருக்கிறது. அங்கே நீர் நிரப்பி படகுப் போக்குவரத்தும் விடலாம். நகரத்திலுள்ள மக்கள் நடந்து சென்று பயனடைவதற்கு ஏற்ற இடமாகும். ஆகவே, மறுபரிசீலனை செய்து அந்தப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. என். சுரேஷ்ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஊத்துமலைக்கு, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பகுதிக்கு சராசரியாக 100 பேருக்கும் குறைவாக சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துகொண்டிருக்கிறார்கள். அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றபோது உறுப்பினருடைய இந்தக் கோரிக்கை கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 500-லிருந்து 1000-வரை பொது மக்கள் தினமும் மாலை வேளையிலே அந்தப் பகுதிககுச் சென்று பயனடைகிறார்கள். அதுமட்டுமல்லாமல், சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் ஆயிரக்கணக்கான மக்கள் அப்பகுதிக்கு வருகிறார்கள். எனவே, அரசு மீண்டும் கனிவுடன் பரிசீலனை செய்து, அப்பகுதியைச் சுற்றுலா மையமாக்க முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ்ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 60, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**60—**

**தேன் உற்பத்தி பாதிப்பு**

***13535—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம, ஜவ்வாது மலைப்பகுதியில் தேனீக்கள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதால் தேன் உற்பத்தி வெகுவாகக் குறைந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1999 பிப்ரவரி 20

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலைப் பகுதியில் கதர் வாரியத்தின் மூலமாக வளர்க்கப்படும் தேனீக்கள் வைரஸ் என்ற நோயால் தாக்கப்பட்டு பெருமளவுக்கு பாதிப்புக்கு உள்ளாயின. உடனடியாக, தேனீ ஆராய்ச்சி மைய தொழில்நுட்பக் கண்காணிப்பாளரை அனுப்பி ஆராய்ச்சி செய்து, அவர் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் ஜவ்வாது மலையிலே வைரஸ் நோயினால் தாக்கப்பட்ட மீதம் உள்ள தேனீ குடும்பங்களை அழித்துவிடவும், ஓடிப்போன தேனீ குடும்பங்களின் அடைகளைச் சுட்டெரிக்கவும் அறிவுரைகள் வழங்கப்பட்டன. அதன்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அந்த நோயின் சீற்றம் படிப்படியாகக் குறைந்து வருகிறது. தற்போது 520 தேனீக் குடும்பங்கள் நல்ல முறையில் வளர்க்கப்பட்டு தேன் சேகரிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன், சித்தமருத்துவத்திலே ஒரு மருந்தாக சமுதாயத்திலே விளங்குகின்றது. அது பாதிக்கப்பட்டு, அதற்கு அரசு நடவடிக்கை எடுத்ததற்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன். ஆனால் இதை, தனி அதிகாரிகள் காலந்தொட்டு, கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ளவர்கள் பயன்படுத்திக்கொண்டு, வெல்லப் பாகைப் பயன்படுத்தி, போலித் தேன் தயாரித்து, அதிலே அக்மார்க்கையும் ஒட்டி மக்களுக்கு விற்பது நமது அமைச்சருடைய கவனத்திற்கு வந்ததா? இது அந்தப் பகுதியிலே மட்டுமல்ல, எல்லா இடங்களிலேயும் பரவலாக இருப்பதாக நம்பத் தகுந்த தகவல்கள் கூறுகின்றன. இதைத் தடுப்பதற்கு சிறந்ததொரு நடவடிக்கையை நம்முடைய அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் வாரியத்தின் மூலம் தமிழகத்தின் பல்வேறு இடங்களில், மார்த்தாண்டம், சேலம் மாவட்டம் ஏற்காடு, நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை, வேலூர் மாவட்டம் ஏலகிரி, திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை போன்ற பகுதிகளில் தேன் உற்பத்தி செய்யப்பட்டு அதை கதர் வாரியம் கொள்முதல்



1999 பிப்ரவரி 20]

செய்து வருகிறது. சென்ற காலங்களில் அதுமாதிரி தவறுகள் நடந்திருக்கலாம். ஆனால், தற்போது அந்தமாதிரித் தவறுகள் ஏற்படா வண்ணம், மொத்தமாகக் கொள்முதல் செய்யப்பட்ட தேன், சென்னை குறளகத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அங்கே தேன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து, தரக்கட்டுப்பாடு மூலமாக ஆய்வு செய்து, தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு காதி கிராஃப்ட்களுக்கு விநியோகம் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் ' உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### திருவள்ளூர் மாவட்டம் புட்லூரில் விஷச் சாராயம் அருந்தியதால் மரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. பலர் திருவள்ளூர் மாவட்டத்தில் விஷச் சாராயம் அருந்தியதால் பலர் மரணமுற்றது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. சுப்பராயன், திரு. நா. பெரியசாமி, திரு. ஐ. கணேசன், திரு. ஜி.கே. மணி, திரு. இரா. தாமரைக்கனி, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சி. ஞானசேகரன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. லா. சந்தானம், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. பி. வெங்கடசாமி, டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. சி. வேலாயுதன், திரு. டி. மணி, திரு. வை. சிவபுண்ணியம், திரு. ம. அப்துல் லத்தீப் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் முதலில் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூருக்குப் பக்கத்தில் இருக்கிற புட்லூர் கிராமத்திலே, சென்ற 10 ஆம் தேதி ஏறக்குறைய 150 பேர் பாதிக்கப்பட்டு, அதிலே

12 பேர் மரணமுற்றிருக்கிறார்கள். மரணம் எப்படி ஏற்பட்டது என்று விசாரித்தபோது, அங்கே விற்கப்பட்ட கள்ளச் சாராயத்தால் இந்த மரணம் ஏற்பட்டதாக, தெள்ளத் தெளிவாக மருத்துவமனையிலே அறியப்பட்டிருக்கிறது. மிகப்பெரிய ஒரு கோரச் சம்பவமாக, ஆண்டு தொடக்கத்திலேயே இந்தச் சம்பவம் நிகழ்ந்து இருக்கிறது. இந்தச் சம்பவம் நிகழ்ந்த மறுநாள் எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய பொருளாளரும், பூந்தமல்லி சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான மாண்புமிகு திரு. சுதர்சனம் அவர்கள், நேரில் சென்றபோது, அங்கே மறுநாளும் அந்தச் சாராயம் விற்கப்பட்டதாக அவர்கள் கண்டறிந்து கூறினார்கள். இந்தச் சம்பவம் குறித்து தமிழ்நாடு துயருற்றிருக்கிறது. பொதுவாக, பாதிக்கப்பட்ட மக்களெல்லாம் ஏழையெளிய மக்கள். ஏழ்மைக்கும் கீழாக உள்ள மக்கள். அவர்களுடைய குடும்பங்கள் மிகக் கொடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கள்ளச்சாராயத்தைப் பொறுத்தவரையில், நிரந்தரமாக நடக்கின்ற ஒரு குடிசைத் தொழிலாக இருந்து வருகிறது.

காவல் துறையைப் பொறுத்தவரையிலே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு rank வைத்திருக்கிறார்கள். எந்த மாவட்டத்தில் அதிகமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறது என்று எடுத்துக்கொள்கிறபோது திருவள்ளூர் மாவட்டத்தை மூன்றாவது, நான்காவது rank-கிலே வைத்திருக்கிறார்கள் என்ற அளவில் அங்கே கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. இதற்குக் காரணமாக இருக்கின்ற போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் கண்காணித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆங்கிலத்திலே Nexus என்று சொல்வார்களே, ஒருவருக்கொருவர் தொடர்பு என்பது, ஒட்டு உறவோடு இருக்கிற ஒரு உறவு, காவல் துறைக்கும் இந்த வியாபாரிகளுக்கும் இருப்பது என்பது வெளிப்படையான ஒரு கண்கூடு. இது மிகப் பெரிய அளவிலே தெரிந்தே நடக்கின்ற தொழில் என்பதும், மிகப் பெரிய அளவிலே பொதுமக்களுக்குத் தெரிந்திருக்கிற உண்மை என்பதும் வெளிப்பாடு. இதிலே பெண்களையும்கூட ஈடுபடுத்தி, இந்தத் தொழிலைச் செய்கிறார்கள். ஊறல்கள், விற்பனையாளர்கள் என்று இரண்டு தரமாக இரண்டு நிலைகளிலே இந்த வியாபாரம் நடந்துகொண்டிருக்கிறது. ஏழையெளிய மக்களைப் பாதிக்கக்கூடிய, அவர்களது வாழ்வைப் பாதிக்கக்கூடிய இந்த மாதிரியான சமூக விரோதச் செயலைத் தடுக்க அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுவாக, தட்டுப்பாடு என்று வருகிறபோது, நமக்குத்



தண்ணீர் தட்டுப்பாடு வந்தாலும் ஆந்திரா உதவுகிறது. இந்த தண்ணீர் தட்டுப்பாடு வந்தாலும், திருவள்ளூர் மாவட்டத்திற்குப் பக்கத்திலே ஆந்திரா இருப்பதால் உடனடியாகக் கை கொடுக்கிறது. அந்த அளவிற்கு மிகப்பெரியதொரு Nexus, ஒரு வலை இந்த வியாபாரிகளிடையே இருக்கிறது. இந்த வியாபாரிகளுக்குப் பின்னாலே சமூக விரோதிகளும், சில அரசியல்வாதிகளும்கூட இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் இனம்கண்டு, நடவடிக்கை எடுத்து, அரசு பொதுமக்கள் வாழ்விலே ஒரு பாதுகாப்பை அளிக்க வேண்டும். குறிப்பாக தொழிலாளர் பெருமக்கள் தங்களுடைய களைப்பைப் போக்குவதற்காகவும், வேதனையை மறப்பதற்காகவும் மதுவை நாடுகிறார்கள். இத்தகைய மதுவை நாடுகின்ற சமூக இழிநிலையைப் போக்குவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நடவடிக்கை எடுக்கும்போது கீழ்நிலையில் உள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது சுலபமாகவும், எளிதாகவும் முடிந்துவிடுகிறது. ஆனால் இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் யார், யார் என்று இனம் கண்டுகொண்டு அவர்கள்மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-40

அதுபோல, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் 10,000 வீதம் நிதி அளித்திருக்கிறார்கள். இன்றைய நிலையிலே, அது மிகக் குறைந்த அளவிலே இருக்கிற தொகையாகும். ஆகவே, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 1 இலட்சம் ரூபாய் வரை நிவாரண நிதி அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே அரசு செய்ய வேண்டிய கடமை என்னவென்றால்—இதிலே யாருக்கும் இரகசியம் தேவையில்லை, அதிகாரிகளுக்கு யார், யார் விற்கிறார்கள், எந்தப் பகுதியில் இருக்கிறார்கள் என்று மிகத் தெளிவாகத் தெரியும். ஆகவே, அவர்களைக் கொண்டு—இந்த நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தி இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

[1999 பிப்ரவரி 20

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டின் தொடக்கத்திலேயே தருமபுரி மாவட்டம் சூளகிரியிலும், திருவள்ளூர் மாவட்டம் புட்லூர் பகுதியிலும் கள்ளத்தனமாக விற்கப்பட்ட விஷச் சாராயத்தின் காரணமாக ஏறத்தாழ 70 பேர் வரையிலும் உயிரிழந்திருக்கிறார்கள் என்கிற துயரச் செய்தி நம்முடைய நெஞ்சை சுடச் செய்கிறது.

இதுபோல சில சம்பவங்கள் நடைபெறுகின்றன என்பதை அடிப்படையாகக் கொண்டு கள்ளச் சாராயத்தை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும், அழிக்க வேண்டும் என்பதிலே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டிருக்கின்ற உறுதியில் எந்தவிதமான சந்தேகமும் எங்களுக்கு இல்லை. அரசின் கொள்கை உறுதி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது என்பது எங்களுக்கு மட்டுமல்ல, தமிழக மக்களுக்கே உரியது என்று நாங்கள் கருதுகிறோம். ஏனென்றால் முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே ஆரம்பத்திலேயே எடுத்துச் சொன்னார்கள். கள்ளச்சாராயப் பானைமீது துப்பாக்கிக் குண்டு பாயும் என்று எச்சரித்திருக்கிறார்கள். அரசின் கொள்கை உறுதியை செயல்படுத்துகின்ற அதிகாரிகளைப் பூப்போல பாதுகாக்கும் இந்த அரசு என்ற உறுதியையும் எடுத்துச் சொன்னார்கள். இவ்வளவும் சொன்னதற்குப் பிறகு இந்தச் சம்பவங்கள் நடைபெறுகின்றன என்றால், ஏதோ இந்த மூன்று ஆண்டு காலத்திலே மட்டுமே நடைபெறுகின்ற சம்பவங்கள் அல்ல, இவை முன்பே தோன்றி நிலைப்படுத்தப்பட்ட வியாபாரமாக நடைபெறுகின்ற சம்பவங்கள் ஆகும்.

நம்முடைய அண்டை மாநிலமான கர்நாடகப் பகுதியிலிருந்தும், ஆந்திரப் பகுதியிலிருந்தும் எரிசாராயம் கடத்தப்படுகிறது. அது இங்கே விற்கப்படுகிறது. இன்னொரு பக்கத்திலே கள்ளத்தனமாக சாராயம் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படுகின்றது. இந்த இரண்டு வியாபாரமும் நடைபெறுவதற்கு முக்கியமான பலவீனமாக நாங்கள் கருதுவது பிராந்திக் கடை ஏலம் எடுப்பதிலே, உள்ளூர் மட்டத்திலே syndicate கும்பல் போட்டுக்கொள்கிற, உள்ளூர் ஒப்பந்தம் என்ற அடிப்படையிலே எடுத்துக் கொள்வதும் இந்தக் கள்ளச் சாராய வியாபாரிகளுக்குத் துணையாக அமைந்து விடுகிறது. அவர்கள் இதுபோன்ற புகார்களை அரசுக்குத் தெரிவிப்பதில்லை. முதலமைச்சர்கூட அவருடைய தொலைபேசி எண்களை எல்லாம் தெரிவித்து யார் கள்ளச் சாராயம் வியாபாரம் செய்தாலும் எனக்கு நேரடியாக தெரிவிக்கலாம், அது இரகசியமாக பாதுகாக்கப்படும் என்ற உறுதியை மக்களுக்கு வழங்கியிருந்தாலும்கூட, அதைத்



1999 பிப்ரவரி 20] [திரு. நா. பெரியசாமி]

தெரிவிக்கமுடியாத நிலை ஏன் ஏற்படுகிறது என்றால் உள்ளூர் syndicate ஒப்பந்தம் போட்டுக்கொள்கிற ஒரு நிலையால்தான். அது ஊருக்கு நல்லது என்ற பெயரிலே நடைபெறுகின்ற ஒரு அநியாயம். இது கள்ளச் சாராய வியாபாரத்திற்குத் துணை போகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இச்சம்பவம் நடந்ததற்குப் பிறகுகூட திருவண்ணாமலை மாவட்டத்தில், தேசூர் காவல் சரகத்திலே 84 கிராமங்களில் இப்படிக் கள்ளத்தனமான வியாபாரம் நடைபெறுகிறது என்பதைத் தெரிவிக்கச் சென்ற பொதுமக்கள் காவல்துறை அதிகாரிகளால் சரியாக நடத்தப்படாததால் சாலை மறியல் போன்ற சம்பவங்கள்கூட நடைபெற்றிருக்கின்றன. இதையெல்லாம் தடுக்கிற வகையிலே எதிர்காலத்தில் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால் தருமபுரி மாவட்டத்தில் மிக அதிகமான அளவுக்கு இந்தக் கள்ளச் சாராய வியாபாரம் நடைபெறுகிறது. அங்கே எங்களுடைய இளைஞர் அமைப்பான அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் கள்ளச் சாராய வியாபாரிகளுடைய பெயர்களைப் பட்டியலிட்டு ஆர்ப்பாட்டம் செய்தபோதுகூட அதிகாரிகள் உருப்படியான நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, முதலமைச்சருடைய கொள்கை உறுதியை, கள்ளச் சாராயத்தை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்ற கொள்கை உறுதியை, செயல்படுத்த வேண்டிய காவல் துறை, அதை முறையாகச் செயல்படுத்துகிறதா என்பதுதான் இங்கேயிருக்கிற மிகப்பெரிய கேள்வி. காவல் துறையும், உள்ளூர் சாராய வியாபாரிகளும், உள்ளூரிலே போடப்படுகின்ற அந்த syndicate ஒப்பந்தங்களும் தான் இதற்குக் காரணம். அன்றைய சாராய வியாபாரிகள், பழையவர்கள்தான், புதியவர்கள் யாரும் இல்லை. பழையவர்கள், புதிய அரசியல் தொடர்புகளை உறவு மட்டத்திலே பயன்படுத்தி அவர்களுடைய வியாபாரத்தை நிலைநிறுத்திக்கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்கிறார்கள். எனவே, எந்தவகையிலும் இந்தச் சாராய வியாபாரிகளுக்குத் துணைபோகாமல், அதைத் தடுத்திட முதலமைச்சர் அவர்கள் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏதோ சாராய வியாபாரத்தினால் உயிர்ப்பலி ஏற்படுகிறபோது அவர்களுக்கு நிவாரணம் வழங்குகிற நல்ல செயலை முதலமைச்சர் செய்திருந்தாலும், அதுமட்டுமே போதுமானதல்ல; இன்னும் முழுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தி, இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்திலே நிகழாவண்ணம் நாம் அனைவரும் சேர்ந்து அதனை

உறுதியாகத் தடுப்போம் என்று கூறி, இந்தப் பிரச்சினையை அவையின் கவனத்திற்கு ஈர்த்து நிறைவுசெய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

*முற்பகல் 10-45*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகக் கவலைக்குரிய நிகழ்வுகள், தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பது வேதனைக்குரியது மட்டுமல்ல; கண்டனத்திற்குரியதாகவும் அமைந்து விட்டிருக்கிறது. கள்ளச் சாராயத்தைக் குறித்து, முதலமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எண்ணமும், இந்த ஆட்சியில் உள்ளவர்களுடைய எண்ணமும் என்ன என்பது நாடறிந்த ஒன்றாகும். நமக்கு இருக்கிற சிக்கல், இந்தப் பிரச்சினையில் யார் மூலமாக முதலமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அவர்களே இந்தப் பிரச்சினையில் அக்கறை இல்லாதவர்களாக இருப்பதும், கள்ளச் சாராயத்தின் இந்தக் கொடுமையைத் தடுக்க அவர்களுக்கே விருப்பம் இல்லாமல் இருப்பதும்தான் இதிலே இருக்கக்கூடிய சிக்கல் என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து தொடர் நடவடிக்கை எடுப்பது மட்டுமல்ல; மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள், காவல்துறை அதிகாரிகள் ஆகியோரையெல்லாம் அழைத்துப் பேசும்போது அண்மையில்கூட மிகக் கடுமையான உத்தரவுகளை முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்திருக்கிறார்கள். தொடர்ந்து அதுகுறித்து காவல்துறை அதிகாரிகளிடமும் கருத்துக்களைப் பரிமாறி வருகிறார்கள். ஆனால், இவ்வளவு நடந்தும் தொடர்ந்து இது நடைபெறுகிறது என்று சொன்னால், இது கள்ளச் சாராய வியாபாரிகள் மட்டுமல்ல; கள்ளச் சாராயத்தை உற்பத்தி செய்பவர்கள் மட்டுமல்ல; அவர்களைக் கண்காணிக்கக்கூடிய பொறுப்புடையவர்களும் அதிலே எதுவும் அக்கறை இல்லாமல் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், பல இடங்களில் கள்ளச் சாராய விற்பனையை யார் தடுத்து நிறுத்த வேண்டுமோ, அவர்களே அதை ஊக்குவிக்கிறார்கள் என்று நமக்குத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியான வாணியம்பாடியைப் பொறுத்தவரையில், இடையிலே கொஞ்சம் அது கட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது. ஆனால், இப்போது, மிக அதிகமான உற்சாகத்தோடு அதன் விற்பனை நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், கிராமங்களிலே இருக்கக்கூடிய அரசியலுக்கேகூட ஆதார சுருதியாக இந்தக் கள்ளச் சாராய வியாபாரம்தான் இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். கட்சி பேதத்திற்கு அப்பாற்பட்டு, அதிலே ஆதாயம் தேடவேண்டுமென்று நினைக்கக்கூடியவர்கள் ஒரு பக்கம், நம்முடைய உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்கள் சொன்னதுபோல, syndicate அமைத்துச் செயல்படுகிறார்கள் இன்னொரு பக்கம். இன்னும் சொல்லப் போனால், மேலதிகாரிகள் இந்தப் பிரச்சினையில் முடமாக்கப்பட்டு இருக்கிறார்கள். அதற்குக் காரணம், கீழே இருக்கக்கூடிய காவல் துறையில் பணியாற்றக்கூடியவர்கள், இதனை முனைப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்று உத்தரவு போடும் மேலதிகாரிகளை விரும்புவதும் இல்லை; அவர்களே இதில் தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டையும் நாட்டிலே பரவ விடுகிறார்கள். நாங்கள் என்ன செய்வது; மேலதிகாரிகள் வந்தால் அவர்களுக்கு நாங்கள் கொடுக்க வேண்டியதைக் கொடுக்க வேண்டும்; அவர்கள் வரும்போதெல்லாம் அவர்களுக்குரிய தேவைகளையெல்லாம் நாங்கள் பூர்த்தி செய்யவேண்டும்; நாங்கள் பெறுகிற சம்பளத்திலே அவர்களுக்கு எப்படி எங்களால் கொடுக்க முடியும்; இதுதான் ஒரே வழி என்று ஒரு வதந்தியைக்கூட அவர்கள் நாட்டிலே பரவ விடுகிறார்கள். எனவே, இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்; இதைவிட வேறு நடவடிக்கை என்ன எடுப்பது என்பது எனக்குத் தெரியவில்லை. முதலமைச்சர் அவர்கள்தான் கண்டுபிடித்து, வேறு ஏதாவது நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவ்வளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இன்னொன்று, இப்போது புதிய சாராயம் ஒன்று, அது முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதோ என்னவோ எனக்குத் தெரியாது. Instant சாராயம் என்று அதற்குப் பெயர். Instant Coffee, Instant Tea, Instant Lottery என்று சொல்வதைப்போல Instant சாராயம். அதாவது நினைத்தபோது அதைக் குடித்துவிடுகிறார்களாம். சில இரசாயனப் பொருள்களை வைத்து, அதில் எதையோ கலக்கி நினைத்தவுடனேயே அந்தச் சாராயத்தைக் குடிக்கக்கூடிய அளவுக்கு Instant-ஆக அதை உற்பத்தி செய்து கொடுக்கிறார்கள். அது இப்போது பரவலாக மிகவும் பிரபல்யம் அடைந்து வருகிறது என்று என்னிடத்திலேயே வந்து தொகுதி மக்கள் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். Instant சாராயம் நாடு முழுவதும் இப்போது

பரவியிருக்கிறது என்று என்னிடம் சொல்கிறார்கள். வாணியம்பாடியிலே அது இருக்கிறதா என்று கேட்டால், வாணியம்பாடியிலே அது செய்யப்படுவது இல்லை. ஆனால் வேறு தொகுதியிலிருந்து அதனை உற்பத்தி செய்து கொண்டுவருவதாகச் சொல்கிறார்கள். நான் என்ன செய்வது?

*முற்பகல் 10-50*

இன்னொன்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, எதற்காக பத்தாயிரம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கிறீர்கள்? அவர்கள் செய்த தவறுக்கு அது அங்கீகாரமா? அவனைக் குடிக்கக்கூடாது என்று சொன்னாலும், போய் குடிக்கிறான், செத்து விடுகிறான். அதற்கு, முதலமைச்சர் எதற்காக நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியவில்லை. அந்தக் குடும்பத்தாருக்கு தண்டனையாக பத்தாயிரம் ரூபாய் அபராதம் போட வேண்டும். எனவே, இப்படி செத்தவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் கொடுப்பது என்பது எந்தவகையிலும் ஏற்புடையதாக இல்லை. அது opposed to public policy என்று நான் சொல்கிறேன். அது பொது நலனுக்கு ஏற்புடையதல்ல. பத்தாயிரம் ரூபாய் போதாது, ஒரு இலட்சம் ரூபாய் கொடு என்கிறார்கள். எதற்காக ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும்? குடிக்காதே எனறு சொன்ன பிறகும் குடித்தானே அதற்காகவா? எதற்கு என்று எனக்குத் தெரியவில்லை. எனவே, இதையும் ஒரு பெரிய வியாபாரமாக நடத்துகிறார்கள்.

ஒன்றை நான் சொல்கிறேன். அரசுக்கு மிகுந்த நிதி இழப்பு மதுவிலக்கு கொள்கையால் ஏற்படுகிறது. மதுவிலக்கு கொள்கையை நாம் நடைமுறைப்படுத்துவதாலே அரசுக்கு ஏற்படும் அந்த நிதி இழப்பையும் ஏற்றுக்கொண்டு நாம் செயல்படுகிறோம். காந்தியடிகள், இராஜாஜி, அண்ணா போன்றவர்கள் எல்லாம் வலியுறுத்திய கொள்கையை ஏற்றுக்கொண்டு மக்கள் அவர்களுடைய சுகாதாரத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். அந்த ஒழுக்கத்தைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக அரசுக்கு நியாயமாகக் கிடைக்கின்ற வருமானத்தையும் நாம் இழந்து ஒரு கொள்கையை நாம் நிலைநிறுத்தியிருக்கிறோம் என்று சொன்னால் அது என்ன. போலீஸ்காரர்களுக்கு வருமானம் வரவேண்டும், அல்லது கள்ளச் சாராயக்காரர்களுக்கு வருமானத்தை ஏற்படுத்தித் தர வேண்டும், கொள்கை ஒன்று, செயல் ஒன்று என்று இருப்பதற்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்பதற்காக இந்தக் கொள்கையா? என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.





சூளகிரியில் செத்திருக்கிறார்கள். அங்கு அவர்கள் செத்தார்கள் என்பதற்காக நாம் அதிகாரிகளை இட மாற்றம் செய்தோம். இப்போது புட்லூரில், திருவள்ளூருக்குப் பக்கத்திலே நடந்திருக்கிறது. உயர் அதிகாரிகளைக் கேட்டால், நாங்கள் என்ன செய்ய முடியும், நாங்கள் கீழ்மட்டத்திலே இருக்கிற போலீஸ்காரர்களுக்கு உத்தரவு போட்டுவிட்டு, நிம்மதியாக மேல்மட்டத்திலே இருக்க முடியாது என்கிறார்கள். ஏனென்றால் அவர்களே எங்களுக்கு விரோதமாக statement கொடுக்கிறார்கள் என்று சொல்லி வருத்தப்படுகிறார்கள். ஆக, இந்த விஷயத்தில் நீங்கள் கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். கீழ்மட்டத்திலிருந்து நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஒன்றை நான் சொல்கிறேன். இதைக் கட்டுப்படுத்துவது, மட்டுப்படுத்துவது என்பது என்னைப் பொறுத்தவரையில் மனித சக்திக்கு உட்பட்டதுதானா என்ற முறையிலே, ஒரு நிலைமை நாட்டிலே உருவாகிவிட்டது. முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிற சிக்கல் எனக்கு நன்றாகத் தெரியும். ஆட்சியாளர்களுக்கு இருக்கிற சிக்கல் எனக்கு நன்றாகத் தெரியும். இங்கே இருக்கின்ற D.G.P.-க்கு சம்பளம் மட்டும்தான் கிடைக்கிறது. மேல்மட்டத்திலே இருக்கின்ற அதிகாரிகளுக்குச் சம்பளம் மட்டும்தான் கிடைக்கிறது. ஆனால் கீழ்மட்டத்திலே மக்களுடைய இரத்தத்தை உறிஞ்சி, நம்முடைய ஒழுக்கத்தைக் கெடுத்து, நாட்டு மக்களுடைய நல்வாழ்வுக்கு உலை வைத்து, மக்களிடத்திலே பணத்தைப் பெற்று, இந்தமாதிரி எல்லாம் நடந்துகொள்கிறார்களே, அதற்கு முதலமைச்சர் அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று வெளிப்படையாகச் சொல்ல வேண்டும். வேறு வழியே இல்லை. வெளிப்படையாகத் தாக்கீது கொடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லைப்புற மாவட்டங்களிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. எங்களுக்கு சித்தூர் பக்கத்து மாவட்டம். கர்நாடகம் எங்களுக்குப் பக்கத்து மாநிலம். அங்கே கள்ளச் சாராயம் வருகிறது. அதைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். கிராமங்கள் பூராவும் முன்னாலே ஊறல்கள் இருந்தன. இப்போது ஊறல்கள் எல்லாம் இல்லை. இப்போது எல்லாம் Instant சாராயம்தான். அது என்னுடைய தொகுதியிலே அதிகமாக இருக்கிறது என்று மக்கள் குறைபடுகிறார்கள். அதை நீங்கள் தயவுசெய்து விசாரணை செய்து யார், யார் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குக் காரணமான, சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீதும் நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும், எங்களுடைய தொகுதியிலே

ஒழுக்கத்தைக் கெடுக்கிறார்கள். ஆகையினால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்தி, சாராயத்தை ஒழிக்க, மதுவிலக்கை அமல்படுத்த மாபெரும் தியாகங்களைச் செய்கிற நம்முடைய மக்களுக்கு முறையான பரிசு வழங்கவேண்டும். மேலும் அவர்களுடைய வாழ்க்கையிலே நிம்மதியைத் தரவேண்டுமானால் இத்தகைய நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறக் கூடாது, அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபற்றி இன்னும் 7 பேர் பேசவேண்டும். எனவே, அடுத்துப் பேசுகிறவர்கள் கொஞ்சம் சுருக்கமாகப் பேசுங்கள். திரு. இரா. தாமரைக்கனி.

*முற்பகல் 10-55*

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆட்சிக்குக் கெட்ட பெயர் வருகிறது என்றால், அந்தக் கட்சியிலுள்ளவர்கள் மற்றும் அதிகாரிகளால்தான் கெட்ட பெயர் வருகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில், புட்லூர் கிராமத்தில், 16 பேருக்கு மேலே கள்ளச் சாராயத்தினாலே இறந்திருக்கிறார்கள். அந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள்மீது போலீஸ் நடவடிக்கை எடுக்கப் போனால், ** என்று சொல்லி, போலீஸ் குற்றச்சாட்டைக் கூறுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று நீங்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடாது. அந்தமாதிரி எல்லாம் குற்றச்சாட்டு சொல்லாதீர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் பெயரைச் சொல்லவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெயரைச் சொல்லவில்லை என்றால், ** என்றால் யாருக்கும் தெரியாதா? தேவையில்லாத அந்த வார்த்தைகளையெல்லாம் பேசாதீர்கள். அரசியல்வாதிகள் என்று பொதுவாகச் சொல்லுங்கள். ** அந்த வார்த்தைகள் எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**திரு. இரா. தாமரைக்கனி:** அந்தப் பகுதியிலுள்ள போலீஸ் அதிகாரிகள் மாமூல் வாங்குவதாகச் சொல்லி 10 பேரை நீங்கள் suspend பண்ணியிருக்கிறீர்கள். வேலியே பயிரை மேய்கிற கதையாக இருக்கிறது. அவர்களை suspend பண்ணுவதோடு மட்டும் அல்லாமல் நீங்கள் அவர்களை வேலை நீக்கம் செய்ய வேண்டும். Dy.S.P., S.P. ஆக இருந்தாலும், அவர்களை வேலை நீக்கம் செய்ய வேண்டும். அதேபோல் மதுவிலக்கு போலீசையும் வேலை நீக்கம் செய்ய வேண்டும். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை மட்டும் நீங்கள் குண்டர் சட்டத்திலே போடுகிறீர்கள். ஆனால், அதற்கு உடந்தையாக இருந்த போலீஸ் அதிகாரிகளையும், கடுமையான தண்டனை அளிக்கும் வகையில், வேலைநீக்கம் செய்வது மட்டுமல்லாமல், அவர்களையும் குண்டர் சட்டத்திலே போட்டால்தான் திருந்துவார்கள்.

அதற்கும் மேலே, D.G.P., I.G. போன்ற மதுவிலக்கு போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படாத வண்ணம், கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு, தமிழ்நாடு முழுவதும் போய், கிராமம், கிராமமாக சுற்றுப் பயணம் செய்கிறார்களா என்றால், ஒன்றுமே கிடையாது. இங்கேயிருக்கிற D.G.P., A.C. அறையிலே உட்கார்ந்திருக்கிறார். அவர் கொடுக்கிற அறிக்கையை வைத்துக் கொண்டு, முதலமைச்சருக்கு report கொடுக்கிற இந்தமாதிரி eye wash தான் பண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். D.G.P., I.G. ஆகியவர்களுக்கு உங்கள்மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று சொல்லி, notice கொடுங்கள். இது சம்பந்தமாக உள் துறைச் செயலாளர் என்ன செய்கிறார்? அவர் எல்லாவற்றையும் மொத்தமாக வாங்கிக் கொண்டு, உங்களிடம் வந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார். இது சம்பந்தமாக, உள் துறைச் செயலாளரும் எங்கேயாவது ஆய்வு நடத்துகிற மாதிரி ஒன்றும் தெரியவில்லை. முதலமைச்சர் கேட்டால், உள் துறைச் செயலாளர், D.G.P. கொடுக்கிற report-ஐ அப்படியே வாங்கிக் கொண்டு வந்து கொடுக்க, இந்தமாதிரி eye washதான் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தத்தான் இவர்கள் இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்திற்குப் பக்கத்திலே 1½ கிலோ மீட்டர் தூரத்திலேதான், இந்த புட்லூர் கிராமத்தில் விஷச் சாராயம் குடித்து இறந்திருக்கிறார்கள். இது மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரியாதா? தெரியும் இல்லையா? போலீசுக்குத்தான் இந்தக் கடமை இருக்கிறதா? Revenue இலாகாவிற்கு இந்தக் கடமை இல்லையா? மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்தக் கடமை இல்லையா? ஒவ்வொரு கிராம

221088

முன்சிப்பையும் கூப்பிட்டு, எந்தெந்த இடத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள், என்ன விஷயம், எப்படி, என்று விசாரித்தால், அதிகாரிகளும், போலீசும் ஒட்டுமொத்தமாக செயல்பட்டால்தான் இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியும். வாரத்திற்கு ஒருமுறை சட்டம் ஒழுங்குப் பிரச்சினை என்று கூட்டம் நடத்துகிறீர்கள். அதிலெல்லாம் போலீஸ் அதிகாரிகளும் கலந்து கொள்கிறார்கள். ஆனால், இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்ய மாட்டார்கள். எல்லாம் முடிந்த பிறகு, செத்த பிறகு, பத்திரிகையிலே பெரியதாக செய்தி வருகிறது. உடனே, முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கச் சொல்கிறார். போலீஸ் அதிகாரிகள் தமிழ்நாடு அளவில் heavyயாக பெரிய raid பண்ணுகிறார்கள், கள்ளச் சாராயத்தை ஒழிக்கப் போகிறோம் என்று. அதுவரைக்கும், கள்ளச் சாராயத்திற்கு மாமூல் வாங்கிக் கொண்டு விட்டு விட்டவர்கள், இப்போது raid பண்ணுகிறார்கள். அதை உடனே டி.வி.யில் எடுக்கிறார்கள். முன்பு பானையில் இருந்தது. இப்போது tube-லே வைத்திருக்கிறார்கள். அதை குத்து, குத்து என்று குத்துகிறார்கள். அதைப் படம் எடுக்கிறார்கள். அதை, உடனே சன் டி.வி.யிலே போட்டுக் காட்டுகிறார்கள், கள்ளச் சாராயம் கண்டுபிடிக்கப்பட்டது, பானைகள் உடைக்கப்பட்டன, டயரிலே கள்ளச் சாராயம் இருக்கிறது, அது ஒழிந்து விட்டது என்று காண்பிக்கிறார்கள். இதெல்லாம் மக்களை ஏமாற்றுவதற்காக. ஆகையினால், முதலமைச்சர் அவர்கள், கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காக, ஏதாவது 'Master Plan' போட்டு, அதற்கு வேண்டிய ஏற்பாட்டை பண்ணுங்கள். இதெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான் முடியும். நான் குறிப்பிட்டு, ** என்று சொன்னால் வருத்தப்படுகிறார்கள். பொது மக்கள் நலனுக்கு சில நேரத்திலே M.L.A. phone பண்ணவில்லை, வைக்கவில்லை, சொல்லவில்லை, இதற்காகவா இவரைத் தேர்ந்தெடுத்தோம் என்று சொல்லி சண்டைக்கும் வருகிறார்கள். அதனாலே, ஏதாவது phone போட்டு சொல்லியிருப்பார்கள். ஆனால், அதைப் பத்திரிகையில் எழுதிவிட்டார்கள். அதைத்தான் சொல்ல முடியும், பெயரையும் சொல்லக் கூடாது. ஊரைச் சொன்னாலும், பேரைச் சொன்னாலும், உற்றவர்களிடத்தில் உறவைச் சொன்னாலும் என்று என்னவோ பாட்டெல்லாம் எம்.ஜி.ஆர். பாடியிருக்கிறார். அதனாலே, பெயரைச் சொன்னாலும் சட்ட சபையிலே அது தப்பாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



வருகிறது. ஆகவே, நீங்கள் கண்டியுங்கள், அதிகாரிகளைக் கண்டியுங்கள், குற்றவாளிகளைக் கண்டியுங்கள். லத்தீப் பாய் அவர்கள் சொன்னார்கள், 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கக் கூடாது இறந்தவர்களுக்கு என்று, அதைத்தான் நானும் சொல்கிறேன் நீங்கள் ரூபாய் கொடுத்தால், இன்னும் நிறைய பேர் குடித்துவிட்டு செத்துவிடுவார்கள். ரூபாய் கொடுக்கிறார்கள் என்றால், 2 இலட்சம் கொடுக்கிறார்கள், 1 இலட்சம் கொடுக்கிறார்கள். வேறு வழியே இல்லை, ஒன்றுமில்லை. நாம் செத்தாவது குடும்பத்தைக் காப்பாற்றலாம் அரசாங்கத்திடமிருந்து ரூபாய் வாங்கி என்று எண்ணி இவ்வாறு பண்ணுவார்கள்.

*முற்பகல் 11-00*

இன்னுமொன்று என்னவென்றால் பிராந்திக் கடை இருக்கிறது. மொத்த மதுக் கடைகளில் இருந்து பிராந்திக் கடை சில்லரை வியாபாரிகள் வாங்குகிறார்கள். அது விற்பனை இல்லை என்று சொல்லி பிராந்திக் கடைக்காரர்கள் கிராமம், கிராமமாக விற்கிறார்கள். புட்லூரில் டம்ளராக இருந்தால் 5 ரூபாய்க்கு விற்கிறான்; எங்கள் ஊரில் பாக்கெட் சாராயம் 10 ரூபாய்க்கு விற்கிறான். சாத்தூரில் நிறைய பேர் இறந்தார்கள். ஓசூரில் 46 பேர் இறந்தார்கள். பிராந்தி விற்பனை ஆகவில்லை என்று என்ன செய்கிறார்கள் என்றால்—என்ன பேசவேண்டுமென்பதே மறந்துபோய் விட்டது. (சிரிப்பு)—கிராமம், கிராமமாக சர்க்கரை மாதிரி விற்கிறார்கள். பலசரக்குக் கடைகளிலே விற்கிறார்கள். டீக் கடைகளிலும் விற்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நிதானம் வந்த பிறகு பேசுங்கள். (சிரிப்பு)

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் நிதானத்தோடுதான் பேசுகிறேன். ஒன்று பேசும்போது, இன்னொன்று ஞாபகத்திற்கு வந்து விடுகிறது. சே! அதைப் பேசாமல் விட்டுவிட்டோமோ, இதைப் பேசிக்கொண்டிருக்கிறோமே என்று எண்ணும்போது mood out ஆகி விடுகிறது. வேறு ஒன்றுமில்லை. முக்கியமான point ஞாபகத்திற்கு வருகிறது. (பலத்த சிரிப்பு) கிராமம், கிராமமாக பலசரக்குக் கடைகளிலேயும், டீக் கடைகளிலேயும், licence இல்லாத கடைகளிலேயும் விற்கிறார்கள். அதற்கு அரசு தடை போடவேண்டும். கேட்டால் மொத்த கடைகளில் விற்பனை ஆகவில்லை என்கிறார்கள். ஆகவே போலி சரக்குகளை கிராமப்புறத்தில் விற்கிறார்கள். வாய்மொழி உத்தரவாக அரசாங்கம் சொல்லியிருக்கிறது என்று சொல்லி, போலீஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள். அப்படி

அரசுமேலே கெட்ட பெயரே போலீஸ் அதிகாரிகளால்தான் ஏற்படக்கூடிய சூழ்நிலை எல்லாம் இருக்கிறது. இதையெல்லாம் நீங்கள் கவனிக்கவேண்டும். இன்னும் ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோடு உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** முடித்துவிடுகிறேன். அந்த bar-ஐ அரசு அனுமதி இல்லாமல் நடத்துகிறார்கள். அது Madras-லும் சரி, கிராமமானாலும் சரி, கள்ளச் சாராயம் விற்கிற இடத்திலே வறுத்த கறி, வறுத்த மீன், முட்டை, மொச்சை இதெல்லாம் வைத்து, அனுமதி இல்லாம் வைத்துக்கொண்டு குடித்துக்கொண்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் சாராயக் கடைக்காரர்கள் வீட்டார் என்று சொன்னால் வெட்கப்படுவார்கள், பயப்படுவார்கள், இப்போது சாராயக் கடைக்காரன்தான் தர்மகர்த்தாவாகவும் இருக்கிறான், ஊர்த் தலைவனாகவும் இருக்கிறான், அரசியல் கட்சித் தலைவனாகவும் இருக்கிறான். போலீஸ் ஸ்டேஷனில் அவன் வைத்ததுதான் சட்டமாக இருக்கிறது. எல்லா கட்சிகளின் வேட்டிகளையும் உடுத்திக்கொண்டு Tip top-ஆக வருகிறான். அவனுக்கு என்று எந்த சலவைத் தொழிலாளி வெளுப்பானோ! (சிரிப்பு) கையில் மோதிரமும், அவனும், Tip top-ஆக வருகிறான். (சிரிப்பு) பெரிய மனுஷன் மாதிரி வருகிறான் அவன் பேரில் போலீஸ் case போட மாட்டேன் என்கிறார்கள். பினாமி பேரில் மாதத்திற்கு ஒரு case போடு, இரண்டு case போடு என்று சொல்லி இந்த மாதிரி அரசாங்கத்தை ஏமாற்றுகிறார்கள். ஆகவே, போலீஸ்மீது கண்டிப்பாக நீங்கள் கடுமையாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குப் பக்கத்தில் நடந்திருக்கிறது. இப்போது கண்ணகி என்று ஒரு கலெக்டர் அம்மா திருவண்ணாமலையில் இருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அந்த அம்மா என்ன செய்கிறார்கள் என்றால்—மாவட்ட ஆட்சி நிர்வாகத்திற்குப் பாதிப்பு இல்லை—அந்த அம்மாவே வந்து யாரும் குடிக்கக் கூடாது, விற்கக்கூடாது என்று சொல்லி, சாராயம் காய்ச்சுகின்ற இடத்திற்குப்போய், அந்தக் கிராமத்திற்குப்போய் அந்த மக்களைத் திருத்துகிறார்கள். எம்.ஜி.ஆர். நடித்த நல்ல படம் ஒன்று வந்ததே, அதில் கைதிகளை எல்லாம் திருத்துவார். (சிரிப்பு) (குறுக்கிடு) குலேபகாவலி இல்லை. 'பல்லாண்டு வாழ்க' எம்.ஜி.ஆர். குற்றவாளிகளைத் திருத்துகிற மாதிரி, அந்த அம்மா போய் அரசுக்கு





நல்ல பெயர் ஏற்படுத்த வேண்டுமென்று திருத்துகிறார். குடிக்கக் கூடாது என்று சொல்கிறார். இதையெல்லாம் செய்கிறார். சாராயப் பானைகளை உடைக்கிறார். அதேமாதிரி எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் வருவாயை மட்டும் பார்க்கக் கூடாது. சாராயத்தை ஒழிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், S.P. எல்லாம் 'co-operate' பண்ணி நடவடிக்கை எடுப்பதற்கு அரசு உத்தரவிடவேண்டும். இது சம்பந்தமாக உயர் மட்ட அதிகாரிகள் முதற்கொண்டு கீழ்மட்ட அதிகாரிகள் வரை நடவடிக்கை எடுங்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து வேலை நீக்கம் பண்ணவேண்டும், குண்டர் தடுப்புச் சட்டத்தில் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குப் பக்கத்திலேயே நடக்கிறது. இது அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரியாதா? நீங்கள் எல்லாம் நடவடிக்கை எடுத்தால்தானே தலைவரே இவர்கள் எல்லாம் திருந்துவார்கள். கண்டும் காணாமல் இருந்தால் எப்படி? ஒரு அரசாங்கத்திற்கு நல்ல பெயர் ஏற்படுத்துவது அதிகாரிகள்தானே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பல தடவை இந்தக் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். பேசியது போதும், உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** சொல்லியாகிவிட்டது. முடித்துக் கொள்கிறேன். ஆகவே கள்ளச் சாராயத்தைக் கூண்டோடு ஒழிப்பதற்கு கள்ளச் சாராய பானைமீது குண்டு பாயும் என்று சொன்னீர்கள், ஆட்சி ஏற்ற உடனே. ஆனால், நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு கள்ளச் சாராயம் இப்போது ஆறாக ஓடுகிறது. 300-க்கு மேற்பட்டவர்கள் இறந்துவிட்டார்கள். அதனால் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு நல்ல திட்டமிட்டு நல்ல அதிகாரிகளைப் போட்டு, கள்ளச் சாராயத்தை ஒழித்து, பொதுமக்கள் மத்தியில், பெண்கள் மத்தியில், இந்த நாட்டு மக்கள் மத்தியில் ஒரு கவலையில்லாத நிலையை உருவாக்கவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், தயவுசெய்து சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கள்ளச் சாராயத்தின் கொடுமையைப்பற்றி இந்த அவையிலே பேசுவதற்காக நான் முதலிலே வெட்கப்படுகிறேன். ஒருவரின்

திருமணத்திற்குப் போனவர்கள் அங்கே மாப்பிள்ளையான சம்பவம் உண்டு. ஆனால் ஒருவரின் மரணத்திற்கு துக்கம் விசாரிக்கப் போனவர்கள் அந்தச் சாராய மரணத்திற்கே பலியான கொடுமை திருவள்ளூரில் நடந்திருப்பது சோகத்திலும் சோகம். இதிலே பெண்கள் இறந்திருக்கிறார்கள் என்று சொல்லும்போது, கொடுமையிலும் கொடுமையாக இருக்கிறது. இதனால் காவல்துறை Dy.S.P. உட்பட 10 பேர் suspend செய்யப்பட்டிருக்கிறார்கள். சர்வ வல்லமை படைத்த இந்த கள்ளச்சாராயத்தை யுகம் அழிந்தாலும் அழிக்க முடியாது. சர்வ வல்லமை படைத்த இந்த கள்ளச்சாராயத்தை யுகம் அழிந்தாலும் அழிக்க முடியாது. தனியார் கல்லூரி முதல் தனியார் டிவி வரை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை ஏன் புதுக்கவிதை மாதிரி திருப்பித் திருப்பிச் சொல்கிறீர்கள்?

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, தனியார் கல்லூரி முதல் தனியார் டி.வி. வரை அமைக்க அருள் புரியும் இந்தச் சாராய மகா சக்தி தருமபுரி, திருவள்ளூர் போன்ற இடங்களில் பெண்கள் உட்பட்ட சாவையும் அரங்கேற்றியிருக்கிறது. சரியான மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். ஆட்சி அதிகாரத்தின் ஆணிவேரையே அறுக்கும் இந்தச் சாராயத்தின் சங்கடங்கள் சொல்லித் தீராது. பிராந்திக்கடை முதலாளிகள்தான் தற்போது சாராய வியாபாரிக்கு காவல்துறை. இந்த நகைச்சுவை நாடகம் முடிய அரசு நல்ல கொள்கைத் திட்டம் கொண்டுவர வேண்டும்.

இதேபோலத்தான், சென்ற ஆண்டு என்னுடைய சேலம் மாவட்டத்தில் சேலம் நகரிலே, 10 பேருக்குமேலே இறந்தார்கள். என்னுடைய எடப்பாடி தொகுதியிலே இதற்கு முன்பாக 1996-லே கல்லுரலைக்கரடு என்ற ஒரு பகுதியிலே 10 பேருக்கு மேலே இறந்தார்கள். இன்னும் சொல்லப்போனால் இங்கே மாண்புமிகு லத்திப் பாய் அவர்கள் பேசும்போது அவருடைய தொகுதிக்கு மற்ற மாநிலங்களிலிருந்து சாராயம் வருகிறது என்று சொன்னார். நான் முதலமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். என்னுடைய தொகுதியிலிருந்து—பெங்களூர் வரை—இந்த கள்ளச் சாராயத்தைக் கர்நாடகத்திற்குக் கடத்துகிறார்கள். (சிரிப்பு) பலமுறை நான் போலீஸ் இலாக்காவிற்கு தகவல் கொடுத்து பெயர்ப் பட்டியலையே கொடுத்திருக்கிறேன். (சிரிப்பு) இதில் சிரிப்பதற்கு ஒன்றும் இல்லை, அவமானம். இந்த ஆட்சிக்கு ஏற்பட்ட அவப்பெயர். நான் போலீசிடம்





அறிக்கையைக் கொடுக்கிறேன். இவர், இவர்கள் சாராயம் காய்ச்சுகிறார்கள் என்ற புள்ளி விவரத்தை மக்கள் பிரதிநிதி, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே கொடுக்கிறேன். ஆனால், அந்தக் கடிதத்தை அப்படியே வைத்துக்கொண்டு ஒவ்வொரு சாராய கடைக்காரனிடத்திலும் அரசு முத்திரையோடு 5,000, 5,000 ரூபாய் வசூல் செய்திருக்கிறார்கள். இது நியாயமா? இது சிரிக்கப்பட வேண்டிய விஷயமா? இன்றுகூட நான் இந்தச் சட்டமன்றத்திற்கு வரும்போது சொல்கிறேன். பல பகுதிகளிலே ஒருசிலர் துணையோடு கள்ளச் சாராயம் விற்கிறார்கள். இது முதலமைச்சருக்கு மாபெரும் கெட்டப் பெயரை ஏற்படுத்தக்கூடிய விஷயம். முதலமைச்சர் நிச்சயமாக எதை ஒத்துக்கொண்டாலும், ஒத்துக்கொள்ளாவிட்டாலும் சாராயத்தை ஒத்துக்கொள்ளமாட்டார் என்று ஆணித்தரமாகச் சொல்வேன். ஆனால் ஒருசிலர் என்னைவிட மேலே இருக்கக்கூடிய பதவியில் இருக்கக் கூடியவர்களின் அதிகாரத்தையும் நட்பையும் வைத்துக்கொண்டு, பகிரங்கமாக கள்ளச் சாராயத்தை பேருந்திலே கடத்துகிறார்கள். இவ்வளவு பெரிய கொடுமை என்னுடைய தொகுதியிலே நடக்கிறது. ஏற்கெனவே என் தொகுதியில் 10 பேர்களை சாராயத்திற்குப் பலி கொடுத்திருக்கிறேன். மீண்டும் இத்தகைய சாவு நடக்காமல் இருக்க வேண்டுமானால், கடுமையான ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, போலீஸ் இலாகாவை முடுக்கிவிட்டு அந்த சங்ககிரிப் பகுதியிலே, எடப்பாடி தாலுகாவிலே இருக்கக்கூடிய கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களுக்கு முன்பாக திருவள்ளூர் மாவட்டத்திலே கள்ளச் சாராயத்தை அருந்தி, ஆண்களும் பெண்களுமாக ஏறத்தாழ 15 பேர்கள் உயிரிழந்திருக்கிறார்கள் என்கின்ற செய்தி வருத்தத்தை அளிக்கின்ற செய்தி. இப்போது கிராமப்புறங்களிலே இருக்கின்ற இளைஞர்கள் எல்லாம் விவசாய வேலைக்குச் சென்றால்கூட கூலி குறைவாகக் கிடைக்கிறது என்கின்ற நோக்கத்தோடு இந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற வேலையில் ஈடுபடுகிறவர்களுக்குத் துணையாக இருக்கின்ற ஒரு நிலை இருக்கின்றது. எல்லாப் பகுதிகளிலுமே

[திரு. லா. சந்தானம்] [1999 பிப்ரவரி 20

பெரும்பாலாக இந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற நிலை இருப்பதை நம்மால் அறிய முடிகிறது. இதை நமது அரசும் கொள்கை ரீதியிலே எப்படியும் முழுமையாக ஒழித்தாக வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு செயல்பட்டுக்கொண்டு இருந்தாலும்கூட, ஆங்காங்கே இந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற தொழில் நடந்துகொண்டு தான் இருக்கிறது. இதைத் தடுப்பதற்கு, நமது தாமரைக்கனி அவர்கள் சொன்னதுபோல காவல் துறையினர் மட்டும் அல்லாது Revenue அதிகாரிகளும் தடுப்புப் பணிகளிலே ஈடுபட வேண்டும்.

ஒரு காலத்திலே ஒரு சட்டத்தை வகுத்திருந்தார்கள். கிராமங்களிலே கள்ளச் சாராயம் காய்ச்சுவதை அங்கே இருக்கின்ற V.A.O-க்கள் அவர்கள் கிராமப் பகுதியிலே இருக்கின்றார்கள். அவர்களுக்கு அந்தக் கிராமத்தினுடைய நிலை அன்றாடம் தெரிகின்ற வாய்ப்பு இருக்கின்றது. எனவே, அங்கே கள்ளச் சாராயம் காய்ச்சுவது குறித்து—அங்கே இருக்கின்ற காவல் நிலையங்களுக்குத் தகவல் அனுப்ப வேண்டும். அதன் மூலமாக காவல் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற ஒரு நிலை இருந்தது. அந்த நிலையிலே அந்த V.A.O-க்கள் அதைச் செய்யவில்லை என்று சொன்னால், அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, அவர்கள் கொடுக்கின்ற தகவல்களை ஏற்றுக்கொண்டு காவல் துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் அந்த உள்ளூர் காவல் நிலையத்திலே இருக்கின்ற துணை கண்காணிப்பாளர் பதவி நீக்கம் செய்யப்படுவார் என்கின்ற ஒரு ஆணை இருந்தது. அந்த ஆணை இருக்கின்ற நேரத்திலே ஒருசில மாதங்கள் இவை கட்டுக்குள் அடங்கி இருந்த ஒரு நிலை இருந்தது. எனவே, இனி வருகின்ற காலங்களிலேயும் கடுமையாக, காவல் துறையோடு Revenue துறையைச் சேர்ந்தவர்களும் ஆங்காங்கே, இந்தக் கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுகிறவர்களை இனம் காட்டிக்கொடுக்கின்ற அளவுக்கு ஒரு சட்டத்தை இயற்றி, இதை மிகக் கடுமையாகக் கட்டுப்படுத்துவதற்கு நமது முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கள்ளச் சாராயம் அதோடு இணைந்த விஷச் சாராயம், ஆகியவற்றின் காரணமாக தமிழ்நாட்டில் உயிர்ப் பலிகள் பெருகி வருகின்ற நேரம் இது. ஆனால், இதற்குக் காரணமானவர்கள் சாராயத்தை உற்பத்தி செய்து, அதனால் அவர்களுக்கு ஏற்படுகின்ற மிகப் பெரிய இலாபம்,



1999 பிப்ரவரி 20] [திரு. டி. மணி]

சாதாரணமாக 5 வருடங்களுக்கு முன்னாலே இந்தக் கள்ளச் சாராயத்தை உற்பத்தி செய்கின்ற ஒரு நபருக்கு 1000 ரூபாய் வருமானம் இருக்குமானால், இன்று அவன் 5 இலட்சத்திற்கும் அதிகமாக வருவாய் உள்ளவனாக மாறிவிட்டான். அவர்கள் பெரிய சமூக விரோதிகளாக மாறிவிட்டார்கள். ஆக, இந்தத் துறையைப் பற்றிச் சொல்லும்போது நமக்குச் சில சிரமங்கள் உண்டு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய துறை என்கின்ற காரணம் இதற்குக் குறுக்கே வருகின்றது. ஏனென்றால், இதற்கு முக்கிய காரணமானவர்கள் காவல் துறை அதிகாரிகள்தான். அவர்கள்தான் இதற்கு ஏதுவாக இருக்கின்றார்கள். குறிப்பாக, நான் ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகின்றேன். அருமனை காவல் நிலையத்தில் இருக்கின்ற இன்ஸ்பெக்டர், அங்கே பிடித்துக் கொண்டு வருகின்ற சாராயத்தை சாயங்காலம் வியாபாரிகளுக்கே விற்று விடுகின்றார். அப்படியிருக்கும்போது எப்படி இதைக் கட்டுப்படுத்த முடியும்? அதேபோன்று, களியக்காவிளை காவல் நிலையம். அது எல்லையிலே இருக்கின்ற காவல் நிலையம். அந்தக் காவல் நிலையத்திலே இருக்கின்ற இன்ஸ்பெக்டரும் இதே கொள்கையைத்தான் கடைபிடிக்கின்றார்.

முற்பகல் 11-15

சமீபத்திலே எங்களுடைய மாவட்டத்திற்கு ஒரு புதிய S.P. வந்திருக்கிறார். அவர் ஒரு நல்ல அதிகாரி. அவர் குலசேகரம் காவல் நிலையத்திற்கு ஒரு தகவலைக் கொடுத்தார். குலசேகரம் jurisdiction-லே ஒரு குறிப்பிட்ட இடத்திலே raid-க்கு வருகிறேன் என்று சொன்னார். அந்தப் பகுதியிலே சேனங்கோடு என்ற ஒரு தோட்டப் பகுதி உள்ளது. அந்தப் பகுதிக்கு அவர் வருவதாக குலசேகரம் காவல் நிலையத்தார் தகவலைக் கொடுத்ததால், அங்கே விற்பனைக்காக வைத்திருந்த சாராயத்தையெல்லாம் வேறு இடத்திற்கு மாற்றிவிட்டார்கள். Superintendent of Police போய் வெறுங்கையோடு திரும்பிவந்தார். என்ன செய்ய முடியும்? இப்படி இருக்கக்கூடிய அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கையினை எடுக்க வேண்டும். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், கடுமையான நடவடிக்கை என்றால், வெறும் suspension என்பதோடு மட்டும் நின்றுவிடாமல், வேலை இல்லை என்ற நிலைக்கு, நாம் ஒரு நடவடிக்கையை எடுக்கின்றபோதுதான் அவர்களுக்கு ஒரு பயம் ஏற்படும். அப்படி அவர்களுக்கு பயம் ஏற்பட்டால்தான், காவல் துறையினர் இதிலே உஷாராக, கறாராக நடவடிக்கை எடுப்பார்கள்.

இந்தச் சாராயத்திலே விஷச் சாராயம் என்று ஒன்றைச் சொன்னார்கள். காலை 4-00 மணி நேரத்திற்குள்ளாகவே சாராயம் ready-யாகிவிடுகிறது. சுடு தண்ணீரிலே ஒரு Chemical-ஐக் கலக்குகிறார்கள், 4-00 மணி நேரத்தில் அந்தச் சாராயம் தயாராகி விடுகிறது. அதை அதிகம் சாப்பிட்டால் சாவு நிச்சயம், இதிலே எந்த சந்தேகமும் இல்லை.

10 வருடங்களுக்கு முன்பு வனங்களிலே இருக்கக்கூடிய பட்டைகளை சாராயம் காய்ச்சப் பயன்படுத்தினார்கள். இப்போது வைக்கோலை சாராயம் காய்ச்சப் பயன்படுத்துகிறார்கள். வைக்கோலைப் பயன்படுத்தி சாராயம் காய்ச்சினால் என்ன ஆகும்? அதைக் குடித்தால் மனிதன் உருப்படுவது எங்கே? அவன் வயிறு எல்லாம் கெட்டுப்போய் தொலைந்து போகக்கூடிய ஒரு நிலை ஏற்படும்.

இன்னொன்று, தமிழ்நாட்டிலேயிருந்து கேரளாவிற்கு spirit கடத்தப்படுகிறது. எந்தச் சம்பிரதாயத்திலே இதைக் கடத்துகிறார்கள் என்று சொன்னால் ஐஸ் கட்டிகளைப் பயன்படுத்திக் கடத்துகிறார்கள். அதைப் பல்வேறு இரகங்களிலே செய்து அதற்குள்ளே வைத்து கடத்துகிறார்கள். அதற்கு முக்கியமான இடம், படந்தால் மூடு என்ற இடத்திலே இருக்கின்ற ஒரு சோதனைச் சாவடி. அதைத் தாண்டித்தான் கேரளாவிற்குச் செல்ல வேண்டும். சாராயம் கடத்துவதற்கு ட்யூபைப் பயன்படுத்துகிறார்கள் என்று இப்போது சொன்னார்கள், ஆனால் அதற்கும் மேலே ஒரு புதிய ரகம் இருக்கிறது. மலைப் பகுதிகளிலே பெரிய டாங்குகள், தண்ணீருக்காகப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் டாங்குகளை மண்ணிலே புதைத்து வைத்து அதற்குள்ளே ட்யூப்களைப் போட்டு அதன்மூலமாகச் சாராயத்தை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு நிலை இருக்கின்றது. இருந்தாலும், சில அதிகாரிகள் இருக்கிறார்கள், நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய Superintendent of Police இதிலே அதிகக் கவனம் செலுத்தி இரவு நேரங்களிலேகூட அந்த மலையிலே ஏறி அந்த டாங்குகளிலே இருக்கக்கூடிய சாராயத்தைக் கண்டுபிடித்து, அந்தப் பகுதியிலே சாராயத்தைச் சுத்தமாக நிறுத்திவிட்டார். ஆனால் காவல் நிலையங்களிலே இருக்கின்ற இன்ஸ்பெக்டர்கள் இதற்குப் பாதகமான சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதனுடைய பின்னணி என்று சொல்லுகின்றபோது, நான் அதைச் சற்று வேதனையோடுதான் சொல்லுகின்றேன். இது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய துறை. கள்ளச் சாராயம்



காய்ச்சுபவர்களுக்கு உடந்தையாக செயல்படுவதாலே காவல் துறை அதிகாரிகளாலே இந்த அரசுக்கு மிகப் பெரிய கெட்ட பெயரை நாட்டுப்புறங்களிலே இன்று உருவாக்கி விட்டது.

அதேபோன்று பிராந்திக் கடைகளிலேயிருந்து மாதம் ஒன்றுக்கு Dy. S.P. ஆயிரம் ரூபாய் எனக்குக் கொடு என்று கேட்டால் அவர்கள் எந்த மாதிரியான பிராந்தியை அங்கே விற்பனை செய்வார்கள்? எனவே, இது தொடர்பாக வருகின்ற குற்றச்சாட்டுகளைச் சரிவரக் கண்டறிந்து ஒரு கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். கடுமையான நடவடிக்கை என்று சொல்லுகின்றபோது வெறும் suspension என்பது மட்டும் போதுமானதாக இல்லை. வேலை நீக்கம் என்ற நடவடிக்கைக்கு வருவதன் மூலமாகத்தான் தமிழ்நாட்டிலே கள்ளச் சாராயத்தை நிறுத்த முடியும் என்ற விவரங்களைச் சொல்லி இதிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இதைக் கொஞ்சம் யோசனை செய்ய வேண்டும் என்று கேட்டு இந்த அளவோடு என்னுடைய கருத்துக்களை இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பின்மீது சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயம் என்று சொல்கின்றபோது கள்ளச் சாராய வியாபாரிகளுக்கு சில காவல நிலைய அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள் என்று எனக்கு முன்னால் பேசிய பலர் சொன்னார்கள். ஒரு சம்பவம் நடந்தது. களியக்காவிளையில் ஒரு பெரிய கள்ளச் சாராய தொழிற்சாலையே இருக்கின்றது என்று மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்குத் தகவல் கிடைத்தது. இது நடந்து முடிந்த சம்பவம். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், எந்த அளவிற்கு நடந்திருக்கிறது என்பதற்காகத்தான் இதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் களியக்காவிளைக்குச் சென்று கள்ளச் சாராயத்தைக் கட்டாயம் பிடிக்க வேண்டும், அதை அகற்ற வேண்டும் என்ற உணர்வோடு சம்பந்தப்பட்ட Dy. S.P.-க்கு வேறு ஒரு தகவலைக் கொடுத்து, அதாவது இன்னொரு இடத்திற்குச் சோதனைக்கு வருவதாகத் தகவலைக் கொடுத்துவிட்டு, S.P. களியக்காவிளை சென்று, வேன், லாரி, டெம்போ மற்றும் 32 பேர்களைக் கைது செய்து கொண்டு வந்திருக்கின்றார்கள். இதனுடைய பொருள் என்ன? ஏற்கெனவே இந்தக் கள்ளச் சாராயத் தொழில் அந்தப் பகுதி Dy. S.P.-க்கு மற்றும் உள்ள அனைவருக்கும் தெரிந்துதான்

நடக்கின்றது என்பதுதான். Dy. S.P.--க்குத் தகவல் கொடுத்து, நான் வருகிறேன் என்று காவல் துறைக் கண்காணிப்பாளர் சொன்னால், அந்த Dy. S.P. சாராயம் காய்ச்சுபவருக்குத் தகவல் கொடுத்து விடுவார் என்ற செய்தி S.P.-க்குத் தெரிகிறது. எனவே, S.P. அவரை இன்னொரு இடத்திற்குப் போகச் சொல்லிவிட்டு, இவர் அங்கு சென்று கைது செய்கின்றார். இந்த அளவுக்கு Dy. S.P. அதில் உடந்தையாக இருக்கின்றார் என்று தெரிந்ததற்குப் பிறகு, திரும்ப நாங்களெல்லாம் அரசுக்கு எடுத்துச் சொல்லி, அதிகாரிகளுக்குச் சொல்லி, அந்த Dy. S.P.-யை அங்கிருந்து இடம் மாற்றி விட்டார்கள். இடம் மாற்றக்கூடிய அளவுக்குத்தான் இருக்கின்றதே தவிர வேறு நடவடிக்கை இல்லை. இந்த அளவுக்குத் தவறு செய்த பெரிய அதிகாரியை வேலை நீக்கம் செய்யவோ அல்லது அவர் மூலம் காவல் துறையில் இருக்கக்கூடிய மற்ற அதிகாரிகளுக்குப் பாடம் கிடைக்கக்கூடிய வகையில் அவருக்கு ஒரு தண்டனையோ கிடைக்கச செய்ய வேண்டும்.

*முற்பகல் 11-20*

சில நேரங்களில் அதிகாரிகளும்கூட சிலர் தவறு செய்வதைத் தெரிந்துகொண்டுகூட எதற்காக அவர்களுடைய வாழ்க்கையைப் பாழாக்க வேண்டுமென்று நினைக்கின்றார்கள். ஒரு வகையிலே அது சரியாகப்படுகின்றது. அவர்களுடைய நிமித்தம் அந்தக் குடும்பம் பாதிக்கப்படும் என்று நினைக்கிறார்கள். ஆனால் பல காவல் நிலையங்களில் குடித்துக்கொண்டு வேலைக்கு வரக்கூடிய காவலர்கள் இருக்கிறார்கள். ஒரு தடவை, இரண்டு தடவை சொல்லிப்பார்க்க வேண்டும். காரணம் அவர் மட்டுமல்ல, அவருடைய பின்னால் அவருடைய குடும்பம் இருக்கிறது; குழந்தைகள் இருக்கின்றார்கள். அவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற அடிப்படையில் ஒரு தடவை, இரண்டு தடவை சொல்லிப் பார்க்க வேண்டும். அதையும் மீறி அப்படி வருவார்கள் என்று சொன்னால் தக்க நடவடிக்கையெடுத்து, காவல் துறையைச் சுத்தப்படுத்த வேண்டும். இதற்குத் தகுந்த நடவடிக்கையை முதலில் எடுக்க வேண்டும்.

இன்னொன்று, எங்களிடம் தகவல் தருகின்றார்கள். இன்ன கால்வாய் கரையில் ஏராளமான சாராய வியாபாரம் நடக்கிறது, நான் சொன்னேன் என்று வெளியே சொல்லிவிடாதீர்கள் என்று. சொன்னால் என்ன ஆகும்? சாராயம் வாங்க வரக்கூடியவர்களிடம் இன்னார் தகவல் கொடுத்து காவல் துறை வந்து எங்களைக் கைது செய்து விட்டது



அல்லது எங்களுக்கு வியாபாரம் செய்ய முடியவில்லை, தகவல் கொடுத்தது இன்னார் என்று சொல்லிவிடுகின்றார்கள். அவர்கள் குடித்து விட்டு, தகவல் கொடுத்தவன் யாரோ அவர்களுடைய வீட்டு முன்னால் போய் நின்று மோசமாகப் பேசக் கூடிய நிலை இருக்கிறது. இப்படிக் காவல் துறை பலயிடங்களில் உடந்தையாக இருக்கின்றது.

இன்னொன்று, பெரியவர் மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்களும், தாமரைக்கனி அவர்களும் சொன்னார்கள். 'இப்படி இறக்கக்கூடியவர்களுக்கு நிச்சயமாக அரசாங்கம் எக்காரணம் கொண்டும் நிதி கொடுக்கக்கூடாது. நிதி கொடுத்தால் இதை ஊக்குவிப்பது போன்று ஆகிவிடும். இன்னொன்று, பல குடும்பங்களில் குடித்து விட்டு வேலையும் செய்யப் போவது கிடையாது; குடித்துவிட்டு வீட்டிலுள்ள பொருட்களையும் இல்லாமல் ஆக்குவது; வீட்டில் வந்து அடிப்பது; சாப்பாட்டுப் பானையை அடித்து நொறுக்குவது என்று இதுபோன்று செய்கின்றார்கள்' என்று வேதனைப்படுகின்றார்கள். பல வீடுகளில் போனானே என்று சந்தோஷப்படக்கூடியவர்கள்கூட உண்டு. எனவே, இந்தக் குடிக்கு ஊக்கப்படுத்துவது மாதிரி நிச்சயமாக எக்காரணம் கொண்டும் அரசாங்கம் உதவி செய்யக்கூடாது. அதேபோன்று பல பிராந்திக் கடைகளில்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** பிராந்திக் கடைகளில் பிராந்தி விற்றதற்குப் பிறகு அந்த லேபிளில் அதே பாட்டிலில் கள்ளச் சாராயத்தை அடைத்து விற்கிறார்கள். இப்படிப் பிராந்திக் கடை அதிபர்கள் அவர்களுக்கு உடந்தையாக இருக்கின்றார்கள். இவற்றைக் கண்டறிவது எந்த அளவுக்கு என்ற சொன்னால், காவல் துறையில் எங்களது மாவட்ட S.P. செய்தது போன்று இன்னொரு இடத்தில் வருகின்றேன் என்று இன்னொரு இடத்தைச் சொல்லிவிட்டு சந்தேகம் இருக்கக்கூடிய இடங்களில் இப்படிச் செய்வார்கள் என்றால் நிச்சயமாக ஓரளவு கட்டுப்படுத்த முடியும். அதேபோன்று வருவாய்த் துறையினரும் இதற்கு உடந்தையாக இருந்து தக்க முடிவெடுக்கலாம்.

மது அருந்தக்கூடிய பழக்கம் இருந்தால்தான், மது அருந்தினால்தான் சமுதாயத்தில் பெரிய ஆள் என்று சொல்லக்கூடிய நிலை இப்பொழுது வந்துவிட்டது. அரசியல்வாதியிலிருந்து கீழ் மட்டம் வரை அனைத்துத் துறைகளிலும் ஆன்மீகவாதியும்கூட தான்—அனைத்து இடங்களிலும் அங்கிங்கெனாதபடி எங்கும் கடவுள் இருக்கின்றான் என்று சொல்வது

[திரு. சி. வேலாயுதன்] [1999 பிப்ரவரி 20

எந்த அளவுக்கு உண்மையோ இல்லையோ இது முழுக்க முழுக்க உண்மை. எங்கு பார்த்தாலும் எந்த இடத்திலும் ஒரு சமுதாய நிகழ்ச்சி என்றால், ஒரு இறப்பு வீடு என்றால், ஒரு திருமண வீடு என்றால், மதுவினுடைய வாடை இல்லாமல் கிடையாது. பேருந்திலே ஏறுங்கள், அங்கும் இதே நிலை. எனவே, என்னைப் பொறுத்தமட்டில், அரசாங்கத்திற்கு மதுக்கடை மூலம் ஒரு இலாபம் வருகிறது. அதை பல காரியங்களுக்குச் செலவிட முடிகிறது. ஆனால் பூரண மதுவிலக்கைக் கொண்டு வருவதற்கு முடியுமா? அது நமக்கு எந்த அளவுக்கு வருமானத்தைப் பாதிக்கிறது என்பது தெரியும். இருந்தாலும் வேறு ஏதாவது வழியிலாவது அந்த வருமானத்தை ஈடுசெய்து பூரண மதுவிலக்கு கொண்டு வருவதற்கு—ஒரேயடியாக முடியாமல் இருந்தாலும்கூட—படிப்படியாக அரசாங்கம் இப்பொழுது தொலைநோக்கை மனதிற்கொண்டு நாட்டு மக்களுடைய சுபிட்சம், நல்வாழ்வு, அனைத்துத் துறைகளிலும் ஒரு சுத்தமான சூழ்நிலை வருவதற்கு உண்டான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். ஒரு காலத்தில் எங்களது ..... (மணியடிக்கப்பெற்றது) சுருக்கமாகச் சொல்லி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசியது போதும், உட்காருங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** எனவே, அரசாங்கம் இந்த நாட்டு மக்களை அனைத்துத் துறைகளிலும் சுத்தப்படுத்தக்கூடிய நோக்கத்தோடு பூரண மதுவிலக்குக்குப் படிப்படியாக முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

*முற்பகல் 11-25*

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, I am very sorry to note that the abolition of prohibition in the State has become really a very wrong policy. I came to know that at the time of abolition of prohibition in Tamil Nadu, Hon. Mootharignar Rajaji went to meet Hon.Chief Minister Karunanidhi in midnight and requested him not to repeal Abcari Act. As told by our friends, illicit liquor is very popular everywhere because prohibition in the State of Tamil Nadu is like that. That is the evil now. I prefer to have total prohibition. Then only it would be possible in Tamil Nadu to avoid liquor deaths. In my own Constituency at Hosur, in Soolagiri about 55



*1999 பிப்ரவரி 20]* [Thiru B. Venkatasamy]

people died and at Chengalpat District, nearly 15 people died recently because of spurious liquor. Police is the root cause for the entire evil. They know everything. They know the selling of illicit liquor. As our friends told, there is a link between the sellers and the Police Officers. There is no doubt about it. How to eradicate this evil? We will have to find out a solution for that. As told by some Members, if anybody informs the Police, then some people will come and do 'கலட்டா' before his house. In Karnataka State—because our border is in Karnataka State, we know—some people keep the illicit liquor in packet and supply it to every house. That is happening there.

Those who are selling the illicit liquor are anti-social elements and they are the root cause for any quarrel, murder and such other things. Because they could get easy money by these acts, they are ready to do anything. I request the Hon.Chief Minister to see that the movement of illicit liquor is stopped completely. The Officers responsible must be given stringent punishment. Sir, transfer is not at all a punishment.

As suggested by some Members, Revenue Department staff should also be involved in this work. My next suggestion is, Village Committees may be formed. Some important people who are interested in Prohibition can be included in such Committees. If we form Village Committees, then they will inform the Police authorities about the movement of illicit liquor. Also, there must be a system by which these Village Committee Officers can inform the higher officials if the concerned lower level Police Officers do not take action.

**HON. SPEAKER:** Please finish quickly.

**THIRU B. VENKATASAMY:** Yes sir. I request the Hon. Chief Minister to take stringent action on the erring Officers and see that the illicit liquor is eradicated in Tamil Nadu. Hon. Chief Minister told that the Government is going to propagate the harms of illicit liquor. If we form Village Committees, then they would convey the message of evils of drinking to the people.

Lastly, I request the Government to see that stringent action is taken on the erring Officers. Then only we can prevent this problem. Thank you very much for giving me this opportunity.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில தினங்களுக்கு முன்பு, திருவள்ளூர் மாவட்டம், புட்லூர் கிராமத்தில், சாராயம் குடித்து 15 பேருக்கு மேல் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து இங்கே கொண்டு வரப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்பின் மீது, புதிய தமிழகம் சார்பாகச் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்குக் கள்ளச் சாராயம் என்று பெயர் வைக்கப்பட்டிருந்தாலும்கூட அந்த வார்த்தை தவறானது என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கிராமத்திலே சாராயம் காய்ச்சப்பட்டாலும் அல்லது விற்கப்பட்டாலும், அது கிராம நிர்வாக அதிகாரியிலிருந்து, தலையாரியிலிருந்து யாருக்கும் தெரியாமல் காய்ச்சப்படுவதுமில்லை, விற்கப்படுவதும் கிடையாது. இது ஒரு மறைமுகமான அங்கீகாரத்தினாலே ஓடிக்கொண்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

எப்போதாவது 10, 15 பேர் ஒன்றாக மரணமடைகின்றபோது மட்டும் நாம் இதைப்பற்றிப் பேசுகின்றோம், கவனம் செலுத்துகிறோம். ஆனால் அன்றாடம் இதைச் சிறுகச் சிறுக அருந்தி நாளடைவில் இலட்சக்கணக்கான பேர் மரணம் அடையும்போது நாம் அதைப்பற்றிக் கவலைகொள்ளாமல் இருந்துவிடுகிறோம். அதேநேரத்தில் இதுபோன்று விஷச் சாராயம் அருந்துவதால் பல இலட்சக்கணக்கான ஏழைக் குடும்பங்கள் பொருளாதாரத்தில் நலிவடைகின்ற நிலையும் நாட்டிலே நடந்து கொண்டுதான் இருக்கிறது. எனவே, ஒட்டுமொத்தமாக ஏதோ இந்த 15 பேர் இறந்திருக்கிறார்கள் என்ற பார்வையில் மட்டும் இல்லாமல், தமிழகத்திலே சாராயமே இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்குத் தீர்க்கமாக அரசு செயல்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

முற்பகல் 11-30

இதற்கு முழுக்க முழுக்க யாரைப் பொறுப்பாக்க முடியும் என்றால், அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய காவல் துறை அதிகாரிகள்தான் முழுமையான பொறுப்பேற்க வேண்டும். பல இடங்களில் காவல் துறை அதிகாரிகளே பணம் கொடுத்து, காய்ச்சச் சொல்லக்கூடிய நிலைமையை எல்லாம் நாம் பார்க்கின்றோம். அப்படிக் காய்ச்ச மறுப்பவர்கள்மீது பொய் வழக்குப் போடுவதையும், அவர்களை அடித்துச் சித்திரவதை செய்வதையும் கேள்விப்படுகிறோம். எனவே,



இதை இலேசாக எடுத்துக் கொள்ளாமல், தமிழ்நாட்டில் இனிமேல், ஏதோ மரணம் நடந்துவிடக்கூடாது என்பதற்காக அல்ல, தமிழ்நாட்டில் எந்தக் கிராமத்திலேயும் சாராயம் காய்ச்சப்படுவதும் இல்லை, விற்பனை செய்யப்படுவதும் இல்லை என்ற நிலைமையைக் கொண்டு வருவதற்கு தமிழ்நாடு அரசு தீர்க்கமான முடிவினை எடுத்து, காவல் துறையை முழுமையாகப் பொறுப்பாக்கி, இதுபோல் சாவு நடந்தாலும், சாராயம் எங்கே காய்ச்சப்பட்டாலும், விற்கப்பட்டாலும், அவர்களையும் குற்றவாளிகளாக ஆக்கி, அவர்கள்மீதும் முழுமையான நடவடிக்கை எடுத்தால்தான் இதற்குத் தீர்வு ஏற்படும் என்ற என்னுடைய கருத்தினைக் கூறி நிறைவு செய்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன். நீங்கள் உங்கள் உரையைச் சுருக்கிக்கொள்ள வேண்டும்.

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயம் மூலமாக ஏற்படுகின்ற சாவுகள் அடிக்கடி நடைபெறாமல் இருக்கவேண்டுமென்று சொன்னால், காவல் துறை தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், காவல் துறையானது தன்னுடைய நடவடிக்கையை ஒரு தடவை எடுக்கிறது என்றால், அதைத் தொடர் நடவடிக்கையாகச் செய்வது கிடையாது.

குறிப்பாக, கடந்த பொங்கலுக்கு முன்னாலே நான் என்னுடைய தொகுதிக்குச் செல்கின்றபோது, காடுவெட்டியிலே என்னை வழிமறித்துத் தாக்கினார்கள். அப்படித் தாக்கியவர்கள் யார் என்று பார்க்கின்றபோது அதிலே பெருவாரியாக கள்ளச் சாராயத் தொழிலைக் குடிசைத் தொழிலாகச் செய்து கொண்டிருப்பவர்கள்தான் இருந்தார்கள். நான் காவல் துறை அதிகாரிகளிடம் குறிப்பிட்டுச் சொன்னபோது நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால், பொங்கல் நேரத்திலே, வியாபாரம் அதிகமாக நடைபெறுகிற நேரத்திலே, எந்தவிதமான நடவடிக்கையும் இல்லாமல் போய்விட்டது. ஆகவே, கள்ளச் சாராயத்தைக் காய்ச்சி, மக்களுடைய வாழ்க்கையை வீணடித்துக் கொண்டிருக்கிற அத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால், தொடர்ந்து அந்தப் பகுதியிலே 5 அல்லது 6 முறையாவது raid நடத்தி, சாராயங்களை அழிக்க வேண்டும். அதோடு, கள்ளச் சாராயம் காய்ச்சப் பயன்படுத்தப்படுகிற பொருளானது கப்பலினுடைய அடித்தளத்தில் துருப்பிடிக்காமல் இருப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய R.S. Powder என்ற பொருளாகும். அதைத்தான் இன்றைக்கு மாண்புமிகு

உறுப்பினர்கள் instant சாராயம் என்று குறிப்பிட்டார்கள். அதை அதிரடிச் சாராயமாகக் காய்ச்சி மாலை நேரங்களிலே விநியோகம் செய்கிறார்கள். எனவே, இந்த முயற்சியில் தொடர் நடவடிக்கை இருக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுத்ததற்குப் பின்னாலும், அந்தப் பகுதியிலே கள்ளச் சாராயம் காய்ச்சப்படுமேயானால், அதன் பிறகு வேண்டுமானால், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய, கிராம நிர்வாக அதிகாரிகள், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய காவல் துறை அதிகாரிகள், இவர்களெல்லாம் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று சொல்லுகின்ற வகையிலே சட்டம் இயற்றி அவர்களைப் பணி நீக்கம் செய்வதற்கும் அரசு தயங்கக்கூடாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, முழுமையான மதுவிலக்கை அமல்படுத்துவதற்கு அரசு முயலவேண்டும். அப்படி முயலவில்லை என்றால், நாம் இதிலே கௌரவம் பார்க்காமல்—இப்போது ஒன்றும் மதுவிலக்கு இருந்துவிடவில்லை. அரைகுறையாகத்தான் நிறைவேற்றப்படுகிறது. கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரியாக இருக்கிற சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே—பேசாமல் குறைந்த பட்சம் கள்ளுக்கடைகளையாவது திறந்துவிட்டால்கூட, இந்த ஏழைகள் அநியாயமாக கள்ளச் சாராயத்தைக் குடித்துச் சாகாமலாவது இருப்பார்கள். மரம் ஏறுகின்ற அந்தத் தொழிலாவது இந்த நாட்டிலே புனர்வாழ்வு பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் மெத்தப் பணிவோடு அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மதுவிலக்கை முழுமையாக அமல்படுத்துவது சிரமமான காரியமாக, அரசுக்கு வருவாய் இழப்பு என்ற வகையிலே சிரமமான காரியமாக இருக்குமானால், இதைத்தான் செய்ய வேண்டும். அதிலும் குறிப்பாக மதுக் கடைகளிலே கள்ளச் சாராயத்தை அவர்கள் அதிகமான விலைக்கு விற்று, கொள்ளை இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக, அந்தக் கள்ளச் சாராய வியாபாரிகளிடமிருந்து வாங்குகிற தரம் குறைந்த பொருளை அவர்களே வாங்கி ஊக்குவிக்கின்ற காரணத்தினாலே, கள்ளச் சாராயம், காய்ச்சுபவர்களுக்கு மேலும் மேலும் உற்சாகம் ஏற்படுகிறது. எனவே, ஒரு பக்கம் மக்களுடைய வாழ்க்கையும் சீரழிந்து கொண்டு, இன்னொரு பக்கம் மதுக்கடை வியாபாரிகளுக்கும் மூலப்பொருள் உற்பத்தி செய்யும் கேந்திரங்களாக இவை இருக்கின்ற காரணத்தினால், இவற்றையெல்லாம் அரசு கவனத்திலே கொண்டு, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன், நன்றி.



*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷச் சாராயம் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு பற்றி தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்களும், இந்திய தேசிய லீக் சார்பில் மாண்புமிகு லத்தீப் அவர்களும், அ.தி.மு.க. சார்பில் மாண்புமிகு தாமரைக்கனி அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மாண்புமிகு ஐ. கணேசன் அவர்களும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் மாண்புமிகு சந்தானம் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாண்புமிகு மணி அவர்களும், பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் மாண்புமிகு வேலாயுதன் அவர்களும், ஜனதா தளக் கட்சியின் சார்பில் மாண்புமிகு வெங்கடசாமி அவர்களும், புதிய தமிழகம் சார்பில் மாண்புமிகு டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், தமிழ் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மாண்புமிகு பேராசிரியர் தீரன் அவர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக்கூறி இருக்கின்றார்கள்.

இன்றைய விவாதம் மிகக் கடுமையான முறையில் நீண்ட நேரம் நடைபெற்றிருக்கின்றது. இதிலிருந்தே கள்ளச் சாராயம் தமிழகத்திலே துளியும் தலைகாட்டக் கூடாது என்பதில் மாண்புமிகு உறுப்பினர்கள் எவ்வளவு அக்கறையும் ஆர்வமும் கொண்டிருக்கிறார்கள் என்பதை நிச்சயமாக உணர முடிகின்றது. குறிப்பாக, இந்தப் பிரச்சினை இன்றைக்கு எழுந்ததற்குக் காரணம், 9-2-1999 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில், புட்லூர் கிராமத்திலே உள்ள காலனியில் நடைபெற்ற ஒரு சம்பவம்தான். நித்தியானந்தம் என்பவருடைய மறைவுக்காக நடைபெற்ற இரங்கல் நிகழ்ச்சிக்குச் சென்றவர்கள் போதைப் பொருள் கலக்கப்பட்ட சாராயத்தை அருந்தினார்கள். அதிலே இரண்டு பெண்கள் உள்பட 12 பேர் இறந்தார்கள் என்பதுதான் செய்தி, உண்மையான நிலவரமும் அதுதான். இந்தச் சாராயத்தை விற்றவர்கள், குண்டு என்கின்ற ஜெயராமன், மற்றொருவர் செல்வம் என்பவர். மறுநாள் 10-2-1999 அன்று செல்வம் கைது செய்யப்பட்டார், குண்டு என்கின்ற ஜெயராமன் 11-2-1999 அன்று கைது செய்யப்பட்டார். அவர்கள்

அந்தப் போதைப் பொருளை மேலும் போதை தரக்கூடிய அளவுக்கு மற்றொரு இரசாயனப் பொருளை அங்கே உள்ள ஃபிஷர் இனார்கானிக்ஸ் அண்டு அரோமேடிக் லிமிடெட் என்ற நிறுவனத்திலே வாங்கியவர்கள். இந்த நிறுவனத்திலேயிருந்து அதைத் திருடி விற்றவர்கள் செந்தில்முருகன், குமாரசாமி, டில்லிபாபு, அந்த நிறுவனத்தினுடைய காவலாளியாக இருந்த ஏழுமலை. இவர்களும் அடுத்தடுத்த நாட்களில் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் நிறுவனத்திடமிருந்து திருடிய பொருள், 'மெத்தனால்' என்ற ஒரு பொருளாகும். அது அதிகமான போதையைத் தரக்கூடியது, ஆனால் அது சாராயத்திற்காகப் பயன்படுத்தக்கூடியது அல்ல. சாராயத்திலே அந்தப் பொருளைக் கலந்து மேலும் அதிக போதையைத் தருகின்ற அளவுக்கு அதைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அப்படித் திருடப்பட்ட நாள் 8-2-1999. அந்த மெத்தனாலை 300 ரூபாய்க்கு வாங்கி, இந்த குண்டு ஜெயராமனும், செல்வமும் தண்ணீரிலே கலந்து, தண்ணீரிலே கலந்த பிறகு, அதை சாராயத்தோடு சேர்த்து விற்றிருக்கிறார்கள். காக்கலூர் என்ற இடத்திலே உள்ள அந்தத் தொழிற்சாலை இந்தியா முழுவதும் இருக்கின்ற மெத்தனால் என்ற இரசாயனப் பொருளை வாங்கி, சுத்தம் செய்து, கல்லூரிகளுக்கும் பள்ளிகளுக்கும் சோதனைக் கூடங்களுக்காக விற்று வருகின்ற ஒரு நிறுவனம் ஆகும். ஆனால், சோதனைக் கூடங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தக்கூடிய அந்தக் கடுமையான இரசாயனப் பொருளை இவர்கள் வாங்கி விற்றார்கள். விற்றதை இவர்கள் தண்ணீரோடு கலந்து, சாராயத்தோடு இணைத்து விற்றதன் காரணமாக அதைக் குடித்தவர்களிலே 2 பெண்கள் உட்பட 12 பேர் மரணமுற்று இருக்கின்றார்கள். இந்த குண்டு ஜெயராமன், செல்வம், செந்தில்முருகன், குமாரசாமி, டில்லிபாபு ஆகியோர் 16-2-1999 அன்று குண்டர் சட்டத்திலே காவலிலே வைக்கப் பட்டிருக்கின்றார்கள்.

முற்பகல் 11-40

காவல் துறைமீதும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இல்லை. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவிலே உள்ள Additional S.P., Dy. S.P., Inspector, இரண்டு Sub-Inspector-கள் உட்பட 11 பேர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். காவலர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், எடுக்க வேண்டும், அவர்களைத் தற்காலிகப் பணி நீக்கம் மாத்திரம் செய்தால் போதாது, dismiss செய்ய வேண்டும்



என்றெல்லாம்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே மிக ஆவேசமாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆனால், இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கும்போது அவர்களுக்கு மேல்மட்டத்திலே எத்தனையோ பாதுகாப்புகள் வந்து விடுகின்றன. குறிப்பாக, உங்களுக்குத் தெரியும், சித்ரா தற்கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். பத்திரிகையிலே செய்தி வந்தது. இந்த அரசு அந்த நடவடிக்கையை எடுத்தது காவல்துறை மூலமாக. ஆனால், அப்படி வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் T.A.T. நிர்வாகத் தீர்ப்பாயத்திற்குச் சென்று முறையிட்டு தடை பெற்றிருக்கின்றார்கள். உடனடியாக அவர்களுக்குத் தடை வாங்குவதற்கான இலகுவான வழிகள் எல்லாம் இருக்கின்றன. அப்படிப்பட்ட மன்றங்கள் இருக்கின்றன. எனவே, இங்கு தடை பெற்றுவிடுகின்றார்கள். தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டதற்கே தடை பெற்றுவிடுகின்றார்கள் என்றால், அறவே வேலையிலிருந்து நீக்கப்பட்டால், எத்தகைய முறைகளைக் கையாளுவார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியாது. இருந்தாலும்கூட, அப்படி அவர்கள் பெற்றுள்ள தடையை எதிர்த்து உயர்நீதிமன்றத்திலே இந்த அரசு மேல்முறையீடு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எதற்காக இதைக் கூறுகிறேன் என்றால், அதிகாரிகளை எல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுத்து வேலையைவிட்டே நீக்கிவிடுவது என்பது சொல்வதற்குச் சுலபமாக இருக்கும். ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலே உள்ள சிக்கல்களை எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஒன்றை நான் நினைவில் கொள்கின்றேன். அது எனக்குத் தெரியாதது அல்ல. எல்லா உறுப்பினர்களுமே, இந்தக் கருத்தின் அடிப்படையிலே பேசிய எல்லா உறுப்பினர்களுமே முக்கியமாகச் சுட்டிக்காட்டிய இத்தகைய முறைகேடான காரியங்களுக்கு, தவறான காரியங்களுக்கு, மனிதர்களுடைய சாவுக்குக் காரணமாக இருக்கின்ற இத்தகைய விஷச் சாராயத்தை ஆங்காங்கு பரப்புவதற்கு, விற்பதற்கு காவல் துறையிலே உள்ள சிலரும் உடந்தையாக இருக்கிறார்கள் என்ற அந்தக் கருத்தை நான் மறுக்கவில்லை. இந்த அரசுக்குத் தெரிந்த உண்மைதான் அது. இருந்தாலும் அவ்வப்போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதற்கு ஏராளமான சான்றுகள் என்னிடத்திலே உண்டு.

இங்கே சுட்டிக்காட்டப்பட்ட, தருமபுரி மாவட்டத்திலே, சூளகிரியில் 22-8-1998, 24-8-1998 இரண்டு நாட்களிலும் இதேபோன்ற, நான் இங்கே குறிப்பிட்டேனே, அந்த மெத்தனால். அதைப்போன்ற ஒன்றை விலைக்கு வாங்கி, அதைத் தண்ணீரிலே கலந்து, சாராயத்தோடு இணைத்துத் தரப்பட்டு, 46 பேர் அதிலே சாவுக்கு உள்ளானார்கள் என்பதும் தெரிந்த விஷயம். அதிலே 24 பேர் கைது செய்யப்பட்டார்கள். அந்தச் சாவு நிகழ்ச்சியில் குற்றவாளிகள் 29 பேரும், அதிலே 5 பேர் விஷச் சாராயத்தைச் சாப்பிட்டு அவர்கள் மறைந்து போய்விட்டார்கள். அவர்கள் மரணம் அடைந்ததற்குப் பிறகு, மீதமுள்ள 24 பேரும் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த 46 பேர்களுடைய விஷச் சாராய சாவுகளுக்குக் காரணமான முக்கியமான குற்றவாளி யார், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதெல்லாம் நம்முடைய தாமரைக்கனி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நான் இதிலே கட்சி வித்தியாசம் எதுவும் பார்த்துப் பேசவில்லை. எல்லாக் கட்சிகளிலுமே இத்தகைய முறைகேடான காரியங்கள் நடைபெறுவதற்கு உடந்தையாக உள்ளவர்கள் உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. அப்படிப்பட்டவர்கள்மீது தயவு தாட்சண்யம் இல்லாமல் இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதையும், எடுத்து வருகிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-45

யுகயுகமாக ஆனாலும் இதை ஒழிக்கவே முடியாது என்று ஒரு கவியரங்கமே நம்முடைய கணேசன் அவர்கள் இங்கே நடத்தினார்கள். ஓர் அழகான கவிதையை எழுதிக்கொண்டு வந்து அதை இங்கே படித்தார். பேரவைத் தலைவர் அவர்கள்கூடக் குறிப்பிட்டீர்கள். திரும்பத் திரும்ப படிக்கிறீர்களே இது என்ன புதுக்கவிதையா என்றுகூடக் கேட்டீர்கள். அந்த அளவுக்கு ஓர் அழகான கவிதையை கணேசன் இங்கே படித்தார். ஆனால், இப்படி யுகம் யுகமாக இதை அழிக்க முடியாமல் இருப்பதற்கு, இதற்கெல்லாம் யார் குரு என்பதை நம்முடைய கணேசன் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அத்தகைய குருக்களையெல்லாம் காப்பாற்ற முற்பட்டவர்கள் யார் என்பதையும் நம்முடைய நண்பர் கணேசன் அவர்கள் சிந்தித்துப் பார்ப்பார் என்று எனக்குத் தெரியும். அவருடைய மனசாட்சிக்குத் தெரியும், என்னுடைய மனசாட்சிக்கு இதெல்லாம் தெரியும். இன்று மாத்திரமல்ல, கடந்த காலத்திலேகூட, அது காங்கிரஸ் ஆட்சியாக



இருந்தாலும் சரி, அதற்குப் பிறகு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியாக இருந்தாலும் சரி, கடந்த காலத்திலே நடைபெற்ற ஆட்சியாக இருந்தாலும் சரி, எல்லா ஆட்சியிலும் இந்த மாதிரி கள்ளச் சாராயம் அருந்தி பலபேர் உயிர்விட்டுள்ள நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நம்முடைய தாமரைக்கனி அவர்களுடைய நினைவுக்கு வேண்டுமானால் சொல்கின்றேன். இப்போது ஏதோ 300 பேர் செத்துவிட்டதாகச் சொன்னார்கள், இந்த ஆட்சியில். பத்திரிகையில் போட்டுவிடுவார்கள், 300 பேர் இறந்தார்கள் என்று தாமரைக்கனி சொன்னதாக. அதனால், புள்ளிவிவரம் தரவேண்டிய அவசியத்திற்கு ஆளாகிறேன்.

1991 ஆம் ஆண்டு இரண்டு நிகழ்வுகள், அதிலே 10 பேர் இறந்தார்கள். 1992 ஆம் ஆண்டு 15 நிகழ்வுகள், 37 பேர் இறந்தார்கள். 1993-ல் நான்கு நிகழ்வுகள், 18 பேர் இறந்தார்கள். 1994-ல் மூன்று நிகழ்வுகள், 12 பேர் இறந்தார்கள். 1995-ல் 5 நிகழ்வுகள், 55 பேர் இறந்தார்கள். 1996 மே மாதம் வரை, இந்த ஆட்சி வருவதற்கு முன்பு வரை, ஒரு நிகழ்வில் 17 பேர் இறந்தார்கள். 1996 மே மாதத்திற்குப் பிறகு, 1996 இறுதிப் பகுதியில் 3 நிகழ்வுகளில் 29 பேர், 1997-லே 7 பேர், 1998-ல் 69 பேர், 1999 பிப்ரவரி, இப்போது நடைபெற்ற நிகழ்ச்சியில் 12 பேர் இறந்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும்போது, தொடர்ந்து இந்தக் காரியங்கள் நாட்டில் நடைபெற்று வருகின்றன. சமூக விரோதச் செயல்தான் இது, இருந்தாலும்கூட, இதை அறவே ஒழிப்பதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை. காவல் துறையிலேயே சில இடங்களில்—நான் எல்லா காவல் துறை அதிகாரிகளையும் சொல்லமாட்டேன், காவல் துறை நண்பர்களையும் சொல்லமாட்டேன், சில இடங்களில், சில பகுதிகளில் இருக்கின்ற சில அதிகாரிகள், இதற்கென்றே—இத்தகைய கள்ளச் சாராய வியாபாரிகளுக்கும், சமூக விரோதிகளுக்கும் உடந்தையாக இருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரியும். இருந்தாலும், நடவடிக்கை எடுப்பது என்பது, அரசு மாத்திரம் நடவடிக்கை மேற்கொள்ள முடியாது. பொது மக்களும் இதிலே எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் முதலில் நம்முடைய உள் துறை சார்பாகவே ஒரு விளம்பரம் வெளியிடப்பட்டது. 25-8-1998 தேதியிட்டு அரசின் சார்பில் செய்யப்பட்ட விளம்பரத்தில் 'கள்ளச் சாராயம், போலி மதுவகைகளை அறவே ஒழித்திட அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தாரீர்' என்ற வேண்டுகோளோடு, அதுபற்றி உடனடியாக உள் துறைக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்,

தொலைபேசி மூலமாகவோ, அஞ்சல் மூலமாகவோ தெரிவிக்கலாம். தகவல் பற்றிய விவரங்கள் இரகசியமாகப் பாதுகாக்கப்படும் என்று எல்லா பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யப்பட்டது. அந்த விளம்பரத்தையொட்டி 1,187 பேரிடமிருந்து தகவல்கள் வந்தன. அவற்றில் 463 தகவல்கள் உண்மையானவையாகவும், 600 தகவல்கள் தவறானவையாகவும் இருந்தன. சிலபேர் வேண்டாதவர்கள்மீது எல்லாம்கூட எழுதி போட்டிருப்பார்கள். விசாரித்ததில் 463 உண்மை, 600 தவறானவை, 124 விசாரணை அடிப்படையிலே இன்றைக்கும் உள்ளன. இது தொடர்பாக தவறாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்த 818 பேர் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. உள் துறையின் சார்பாக விளம்பரம் வெளியிட்ட பிறகு, 1,187 பொது மக்களிலே உள்ளவர்கள், இதுபற்றிய தகவல்களை இரகசியமாக எழுதி, அந்த அடிப்படையிலே 818 பேர் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

(முற்பகல் 11-50

அதுமாத்திரமல்ல, இங்கே குறிப்பிட்டார்கள், ஒரு சட்டம் கொண்டுவர வேண்டும் என்று. மதுவிலக்குச் சட்டத்தினுடைய பிரிவுகள் 4, 5, 7 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவிலக்குக் குற்றங்களுக்கு கடுங்காவல் சிறைத் தண்டனையும், பத்தாயிரம் ரூபாய் அபராதமும் அளிக்கும் வகையில் சட்டத் திருத்தம் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டிருப்பதை நாம் யாரும் மறந்துவிடுவதற்கில்லை. இதன் தொடர்பாக, பிறகு பிப்ரவரி 11 ஆம் தேதி திருச்சியில் பத்திரிகையாளர்களுடைய பேட்டியிலே அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் அளிக்கும்போது, ஒன்றைச் சொன்னேன். கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றவர்கள் பற்றிய புகார்களைத் தரவேண்டுமென்று பொது மக்களைக் கேட்டுக்கொண்டு, ஏற்கெனவே அரசின் சார்பில் பல விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. போலீசார் மாத்திரமல்லாது, பொதுமக்களும் அவற்றைக் கவனித்து, அவ்வப்போது, போலீசாருக்குத் தெரிவித்து, கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றவர்களைத் தண்டிப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும். எந்த ஊரில் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கும் உள்ளூர் போலீசாருக்கும் தொடர்பு இருக்கிறது என்பது பற்றிய விவரங்களை எடுத்துச் சொல்லக்கூடிய உரிமை பத்திரிகையாளர்களாகிய உங்களுக்கு இருக்கிறது. இந்தத் தகவல்களை இரகசியமாக மேலிடத்திலே



உள்ள அதிகாரிகளிடமோ அல்லது என்னிடமோ சொல்லலாம். அவர்களுடைய பெயர் வெளியிடப்படமாட்டாது, இரகசியமாக வைக்கப்படும்; நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினேன். இதைப் பற்றி தினமலர் பத்திரிகையிலேகூட முதல் பக்கத்திலே செய்தி வெளியிட்டு, முதலமைச்சருடைய முகவரி, தொலைபேசி எண்— இவை எல்லாம் வெளியிடப்பட்டு, அப்படி முதலமைச்சருக்கு அனுப்புகிற கடிதத்தின் நகலை தங்களுக்கு அனுப்பினால், நடவடிக்கை எடுக்காவிட்டால், அவை வெளியிடப்படும் என்றுகூடக் குறிப்பிட்டு இருந்தார்கள். அது வரவேற்கத்தக்க ஒன்று. பத்திரிகைகள் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றாகக் கருதுகின்றேன். நானும் அப்படி திருச்சியிலே அறிவித்த பிறகு 11 ஆம் தேதி அறிவித்திருந்தால், 12 ஆம் தேதி அன்று 17, 13 ஆம் தேதி அன்று 1, 15 ஆம் தேதி 20, 16 ஆம் தேதி 16, 17 ஆம் தேதி 19, 18 ஆம் தேதி 3, 19 ஆம் தேதி 5 என்ற வகையில் மொத்தம் 81 மனுக்கள் எனக்கே வந்துள்ளன. அவை உடனுக்குடன் அமலாக்கத் துறைக்கு அனுப்பப்பட்டு, அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறித்து எனக்கு அறிக்கை தர வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. அவர்களுக்கு அனுப்பப்பட்ட 81 புகார்களில், இதுவரை 13 புகார்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, 9 பேர் கைது செய்யப்பட்டு இருக்கின்றார்கள். 4 புகார்கள் நிரூபிக்கப்படவில்லை என்று பதில் அளிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, எல்லா வகையிலும் நாம் அந்த முயற்சிகளை மேற்கொண்டு இருக்கின்றோம். இருந்தாலும்கூட இதற்கு ஒரே வழி பூரண மதுவிலக்கு கொண்டு வருவதுதான் என்று நம்முடைய பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் பேசிய வேலாயுதன் அவர்களும் ஜனதா தளத்தின் சார்பில் பேசிய வெங்கடசாமி அவர்களும் சொன்னார்கள். இப்போது இந்த நிலைமையிலேயே கள்ளச் சாராயத்தைப்பற்றி இவ்வளவு நேரம் பேச வேண்டிய நிலையில் இருக்கிறோம். பூரண மதுவிலக்கு கொண்டு வந்துவிட்டால் 2 நாள் பேச வேண்டியதாக இருக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது. பூரண மதுவிலக்கு வந்துவிட்டால் கள்ளச் சாராயம் இன்னும் மேலும் பெருகுமே அல்லாமல் குறையாது. பூரண மதுவிலக்கு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தமிழ்நாட்டிலே இருந்தபொழுது எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள், எத்தனை வழக்குகள், சாராய வழக்குகள் நாட்டில் நடைபெற்றன, தமிழகத்தில் நடைபெற்றன என்ற விவரத்தை நான் சொன்னால்கூட நீங்கள் நம்புவீர்களோ என்னவோ, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆனந்த விகடன்

பத்திரிகையிலே எழுதிய ஒரு தொடர் கட்டுரையில், இலட்சக்கணக்கான வழக்குகள் — இந்த மதுவிலக்கு இருந்த காலத்திலேயே சாராய வழக்குகள் நடைபெற்றன என்பதையும், இலட்சக்கணக்கானவர்கள், 2 இலட்சம் பேர் அல்லது 3 இலட்சம் பேர் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டார்கள் ஓராண்டுக் காலத்தில் என்ற அந்த விவரங்களையும் புள்ளிவிவரத்தோடு அன்றைக்கு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களே அப்போது ஆனந்த விகடன் பத்திரிகையிலே தொடர் கட்டுரையிலே குறிப்பிட்டு இருக்கின்றார்கள்.

பூரண மதுவிலக்கு இருக்கின்ற குஜராத் மாநிலத்திலே மகாத்மா காந்தியடிகள் பிறந்த போர்பந்தரில், அவர் வீட்டுக்கு மிக அருகிலேயே ஒரு பெரிய tank — இங்கே சொன்னார்களே tank வைத்து சாராயத்தை விற்கிறார்கள் என்று, அதைப்போல ஒரு பெரிய tank இருந்தது போர்பந்தரில்; காந்தியடிகளுடைய வீட்டுக்குப் பக்கத்திலேயே — ஒரு பெரிய tank வைத்து, பெட்ரோல் bunk என்று எல்லோரும் கருதக்கூடிய அளவுக்கு, எப்படி பெட்ரோல் பங்கிலே பெட்ரோல் டியூப் வழியாகத் தருகிறார்களோ, அதைப்போல சாராய விற்பனை நடைபெற்றதை நாடாளுமன்றத்திலேயே அன்னை இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது எடுத்துச் சொல்லி, இந்திரா காந்தி அவர்களும், ஆமாம், நானும் கேள்விப்பட்டேன் என்று வேதனையைத் தெரிவித்து இருக்கிறார்கள் என்று சொன்னால், பூரண மதுவிலக்கால் காந்தியடிகள் பிறந்த மாநிலத்திலேயே இந்தச் சாராயத்தை, விஷச் சாராயத்தை, கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியவில்லை என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

இரண்டு முறை சொல்லப்படுகிறது; ஒரேயடியாக மதுவிலக்கை இரத்து செய்துவிடுங்கள்; அதனால் இந்தக் கள்ளச் சாராய சாவுகள் குறையும் என்று ஒரு முறை சொல்லப்படுகிறது. பூரண மதுவிலக்கைக் கொண்டுவாருங்கள்; அதனால் இந்தச் சாவுகள் குறையும் என்று சொல்லப்படுகிறது. இந்த இரண்டு முறைக்கும் இடையிலே இருந்துதான் இந்த ஆட்சி கள்ளச் சாராயத்தையும் ஒழிக்க வேண்டும்; இந்தச் சாவுகளையும் தடுக்க வேண்டும்; அதேநேரத்திலே இப்போது இருக்கின்ற இதே அளவு மதுவிலக்குக் கொள்கையையும் பின்பற்ற வேண்டும் என்று இருக்கிறது. இதை நிறைவேற்றுவதற்கு உங்களுடைய ஒத்துழைப்புத் தேவை என்பதைக் குறிப்பிட்டு, இதற்கெல்லாம் ஒரு இலட்சம் ரூபாய் தர வேண்டுமென்று நம்முடைய தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின்





சார்பாக இங்கே உரையாற்றிய இராமன் அவர்கள் சொன்னார்கள். ஆந்திராவிலே இருந்து இங்கே சாராயம் கடத்தப்படுகிறது; அவருடைய தொகுதி வழியாகத்தான் அது கடத்தப்படுகிறது என்பது அவருக்கும் தெரியும்; எனக்கும் நன்றாகத் தெரியும். அவர் தொகுதியைக் கடந்துதான், ஆந்திராவிலே இருந்து கள்ளச் சாராயம் தமிழ்நாட்டுக்கு வந்து கொண்டிருக்கிறது. அதற்கு அவர் உடந்தை என்று நான் சொல்லவில்லை. ஆனால், அவர் தொகுதி வழியாகத்தான் வருகிறது. அதையெல்லாம் யார் யார் என்று அறிந்து எனக்கு ஒரு card மூலம் தெரிவித்தால், யாராக இருந்தாலும் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பேன் என்பதை மாத்திரம் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிக நிவாரணம் தரக்கூடாது என்ற கருத்து இங்கே சொல்லப்பட்டது; தாமரைக்கனி சொன்னதாக அறிகிறேன்; நம்முடைய அப்துல் லத்தீப் அவர்களும் சொன்னார்கள் நிவாரணம் தரக் கூடாது என்று. சூளகிரியைப் பொறுத்தவரையில், தருமபுரியில் நிவாரணம் தர முடியாது என்றுதான் முதலிலே சொல்லப்பட்டது. ஆனால், பிறகு பல கட்சித் தலைவர்கள் அறிக்கை வெளியிட்டு, அவர்கள் இறந்து விட்டார்கள்; அவர்களுடைய குடும்பங்கள் பரிதாபத்துக்குரிய நிலையில் இருக்கின்றன; அந்தக் குடும்பங்களுக்கு ஏதாவது வேலை வாய்ப்பு தர வேண்டுமென்று பல கட்சித் தலைவர்களும் சொன்ன பிறகுதான், அந்தக் குடும்பங்களுக்காக 5 இலட்சம் ரூபாய் தரப்பட்டு, 10 ஆயிரம், 5 ஆயிரம் என்று அங்கே எஞ்சியுள்ள குழந்தைகள், அவர்களுடைய மனைவிமார்கள் இவர்களுக்கு எல்லாம் ஏதாவது தொழில் நடத்திக் கொள்வதற்காகத் தரப்பட்டது. அதைப்போல இங்கே புட்லூர் விவகாரத்திலும் 2 இலட்சம் ரூபாய் பொதுப்படையாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி, அவர்களுடைய தேவைக்கேற்ப உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதுதான் இப்போதுள்ள நிலவரம். இதை மீறி எதையும் அறவே ஒழித்துவிடுவது என்பது இயலாத காரியம். ஆங்காங்கு தலைகாட்டுகின்ற நேரங்களிலெல்லாம் அதை ஒழிக்க முற்படுவது, அழிக்க முற்படுவது போன்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால் அறவே ஒழிக்கின்ற அளவிற்கு நாம் மக்களைத் தயார்படுத்துவதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை என்பதை மாத்திரம் எடுத்துக்கூறி, இந்த அளவில் இந்தக் கருத்துக்களுக்கு விளக்கமளித்து அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-55*

## 3. அறிவிப்பு

**இலங்கைத் தூதர் பேரவை நடவடிக்கைகளைப் பார்வையிடுகையில் தெரிவித்த வாழ்த்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதர் மேதகு மங்கள முனசிங்கே அவர்கள் நம்முடைய சட்டமன்ற நடவடிக்கைகளைப் பார்வையிட வந்திருக்கிறார்கள். அவர்களை சட்டமன்றப் பேரவையின் சார்பில் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

I welcome His Excellency Mangala Moonasinghe, High Commissioner for Sri Lanka in India who is now witnessing the proceedings of our House.

## 4. விதி 110-ன் கீழ் அறிக்கை

**கோவை சிறையில் தீவிரவாதிகள் அறைகளில் சோதனையிட்டபோது ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக வெளியாகியுள்ள செய்திபற்றி சட்டத் துறை அமைச்சரின் அறிக்கை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் விதி 110-ன் கீழ் கோவை சிறைச்சாலை சம்பவம் குறித்து ஓர் அறிக்கையை அளிக்க விரும்புகிறார்கள். அறிக்கையை அளிக்க அனுமதி அளிக்கிறேன். அதே நேரத்தில் இந்தச் சம்பவம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. சுப்பராயன், திரு. ஜி. பழனிசாமி, திரு. சி. ஞானசேகரன், திரு. சி. வேலாயுதன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. டி. மணி, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. லா. சந்தானம் மற்றும் திரு. ஐ. கணேசன் ஆகியோரும் தீர்மானத்திற்கான அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் மேலான ஒப்புதலுடன் சட்டப் பேரவை விதி 110-ன்கீழ் கோவை மத்திய சிறை தொடர்பாக இன்று வெளியாகியுள்ள செய்தி குறித்து சிறைத் துறை சார்பில் இந்த அறிக்கையை அளிக்கிறேன்.





கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்ற தீவிரவாதிகளின் அறைகளை சிறைத் துறை அதிகாரிகளும் காவல் துறை அதிகாரிகளும் சோதனையிட்டதில் அரிவாள், கத்தி, மரக்கத்தி உள்ளிட்ட 36 வகையான ஆயுதங்களை போலீசார் நேற்று (19-2-1999) கைப்பற்றியதாக செய்தி வெளியாகியுள்ளது.

இச்செய்தி குறித்து கோவை மத்திய சிறையின் கண்காணிப்பாளர், சிறைத் துறையின் துணைத் தலைவர் ஆகியவர்களைத் தொடர்பு கொண்டு உண்மையான விவரங்களைக் கேட்டதில் கீழ்க்கண்ட தகவல்களைத் தந்தனர்:

சிறையில் உள்ள அறைகளைக் குறிப்பாக தீவிரவாதிகள் அடைக்கப்பட்டிருக்கும் அறைகளை அவ்வப்போது சோதனையிடுவதும், சோதனையிடும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பினை முன்னிட்டு சிறைத் துறையே காவல் துறையைக் கேட்டு காவல் துறையின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்வதும் வழக்கமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிர்வாக நடவடிக்கையாகும். இந்த அடிப்படையில்தான் 19-2-1999இல் கோவை மத்திய சிறையில் கைதிகள் அடைக்கப்பட்டிருக்கும் அறைகள், குறிப்பாக தீவிரவாதிகள் அடைக்கப்பட்டிருக்கும் அறைகள், வளாகங்கள் ஆகியவற்றினை சிறைத் துறை சோதனையிட்டது. பத்திரிகையில் செய்தி வெளியாகியிருப்பது போன்று எந்த அறையிலும் எந்த வளாகத்திலும் ஆயுதங்கள் கைப்பற்றப்படவில்லை. 36 வகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்று கூறியிருப்பது முற்றிலும் உண்மைக்கு முரணானது. தீவிரவாதிகள் அடைக்கப்பட்டிருக்கும் அறைகள் மற்றும் வளாகத்தைச் சோதனையிட்டதில் சில ஆணிகளும், நசுக்கப்பட்ட அலுமினிய துண்டுகள் மட்டுமே வளாகத்தில் கிடந்தன. எவ்விதமான ஆயுதங்களும் எந்த அறையிலும் வளாகத்திலும் கிடைக்கவில்லை என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தீவிரவாதிகளிடம் அரசு அனுதாபத்துடன் நடந்து கொள்கிறது என்ற தவறான எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற குறுகிய நோக்கத்துடன் இதுபோன்ற செய்திகள் திட்டமிட்டு விஷமத்தனமாக வெளியிடப்படுகின்றன.

எல்லா சிறைகளிலும் பாதுகாப்பு, கண்காணிப்பு தீவிரமாக்கப்பட்டிருக்கிறது; தினமும் சோதனை நடைபெறுகிறது. பார்வையாளர்கள் முறைப்படி சோதிக்கப்பட்டு அனுமதிக்கப்படுகிறார்கள். சட்டத்திற்கு விரோதமாக யாருக்கும் சலுகை, உதவி கிடையாது.

[திரு. ஆலடி அருணா] [1999 பிப்ரவரி 20

சட்ட விரோதமான பொருட்கள், ஆயுதங்கள் சிறையில் அனுமதிக்கப்பட்டால் அல்லது கடத்தப்பட்டால் சிறைத் துறை அதிகாரிகள் மீதும், சட்டவிரோதமான பொருட்களை, ஆயுதங்களை பதுக்கி வைத்திருக்கும் கைதிகள் மீதும் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

## 5. அரசினர் தனித் தீர்மானம்

**மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையில் மாநில ஒதுக்கீடுகள் மாற்றம் செய்யப்படாமலிருக்க இந்திய அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கோருதல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் தனித் தீர்மானம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு இந்தத் தீர்மானத்தை அவையில் முன்மொழிகிறேன்.

"இந்திய அரசமைப்புச் சட்டம் விதி 81-க்கு 1976 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட நாற்பத்தி இரண்டாவது சட்டத் திருத்தத்தின்படி வருகிற 2000 ஆண்டிற்குப் பிறகு மக்கட்தொகை கணக்கெடுப்பின் நிலவரம் வெளியிடப்படும்வரை, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை மாற்றப்படாமல் இருக்க வேண்டும்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த குடும்ப நலத் திட்டத்தைச் செவ்வனே நடைமுறைப்படுத்தும் மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களுடைய எண்ணிக்கை மக்களவையில் குறைக்கப்படாமல் இருக்க இந்தச் சட்டத் திருத்தம் உறுதிசெய்கிறது.

வருகின்ற 2000 ஆண்டிற்குப் பிறகு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்போது, தமிழகத்தில் ஆண்டு மக்கட்தொகைப் பெருக்க விகிதம் குறைகின்ற காரணத்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றால், மக்களவையில் தமிழகத்தின் பிரதிநிதித்துவம் 6 தொகுதிகள்வரை குறைக்கப்படலாம் என அச்சம் ஏற்படுகிறது. காலப்போக்கில் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் மற்ற



1999 பிப்ரவரி 20] [கலைஞர் மு. கருணாநிதி]

மாநிலங்களிலும் குடும்ப நலத் திட்டம் அமல்படுத்தப்படுவதை இது பெருமளவில் பாதிக்கும்.

எனவே, மக்களவைத் தொகுதிகளில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தற்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகுதிகளின் எண்ணிக்கையில் மேலும் 50 ஆண்டுகள்வரை மாற்றம் ஏதும் செய்யப்படாமல் இருப்பதற்கு ஏதுவாக தேவையான அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என இந்திய அரசைக் கேட்டுக்கொள்ளலாம் என்று இந்தப் பேரவை தீர்மானிக்கிறது."

## 6. அரசினர் தீர்மானம்

**விதி 32-ஐத் தளர்த்தல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க ஏதுவாக வருகின்ற திங்கட்கிழமை -- (குறுக்கீடு) திரு. பழனிசாமி இருங்கள், நான் சொல்லி விடுகிறேன். நீங்கள் பேசும்போது அதைச் சொல்லுங்கள், திருத்தி வேண்டுமானால் படியுங்கள் — வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைத்துவிட்டு எல்லா கட்சி உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு கொடுக்கலாம் என்று கருதுகின்றேன். காரணம் இதை முதலமைச்சர் அவர்களின் பதிலுரைக்கு முன்னாலே வைத்தால்தான் பதிலுரையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூடுதலாக ஏதேனும் சொல்ல வேண்டுமென்றால் அதைச் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, வருகின்ற திங்கட்கிழமை, வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பதற்கான தீர்மானத்தை மாண்புமிகு அவை முன்னவர் அவர்களை இப்போது முன்மொழியுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 22-2-1999 அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

[1999 பிப்ரவரி 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, ஆளுநர் உரையின் மீதான விவாதம். இன்று 12 மணிக்கு மேல்தான் இந்த விவாதம் தொடங்குகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். 7 அல்லது 8 நிமிடங்களுக்கு மேல் ஒருவருக்கும் பேச அனுமதி கொடுக்க முடியாது என்று அறிவித்து, முதலாவதாக திரு. ஆரூண் ரஷீத் அவர்களைப் பேசுமாறு அழைக்கின்றேன்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீதான இந்த விவாதத்திலே பங்குகொள்ள வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆளுநர் உரையில் நல்ல பல திட்டங்கள் மக்களுக்காக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதிலும், குறிப்பாக சென்னை நகரிலே 10 மேம்பாலங்கள் கட்டுகின்ற பணி, வெள்ளத்தில் சேதம் அடைந்த சாலைகளைச் சீரமைக்க ரூ. 33 கோடி செலவிட திட்டம் போன்ற நல்ல பணிகளை அறிவித்ததை உண்மையிலேயே மனதார பாராட்டுகிறேன்.

அடுத்து, பொதுப்பணித் துறையைப் பொறுத்தவரையில், என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற புழல் ஏரியை இரண்டு அடி உயர்த்தியதன் காரணமாக அந்தப் பகுதியிலே உள்ள பானு நகர், ஒரகடம் போன்ற பகுதிகளில் இருக்கும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் பாதிக்கப்படுகின்றன. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்





அவர்களுக்கு இதுபற்றி பலமுறை கடிதங்கள் எழுதியிருக்கிறோம். அவர்கள் நேரில் வந்து அதைப் பார்வையிட்டிருக்கிறார்கள். அங்கே வடிகால் கட்டுவதற்கான ஒரு திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் திட்டம் இதுவரையில் சரியாகச் செயல்படுத்தப்படவில்லை. தூர் வாருகின்ற பணி ஒரு நல்ல பணியாகும். அதன் மூலமாக தண்ணீர் பக்கத்தில் இருக்கின்ற கிணறுகளைச் சென்று அடைகின்றது. அதைப் பாராட்டுகின்ற அதேநேரத்தில் ஒரு ஏரியினுடைய — அணையினுடைய கரையை உயர்த்துகின்றபோது பாதிக்கப் படுகின்றவர்கள் ஏரியின் கரை ஓரத்தில் வாழும் ஏழைகள்தான் என்பதை இந்த அரசு கருத்தில்கொண்டு அவர்களுக்கான நிவாரணப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, ஏறத்தாழ 32 மாதங்களிலே, 48 ஆயிரத்து 497 கோடிக்கான முதலீடுகளுக்கு உறுதி செய்திருப்பதைப் பாராட்டுகின்ற அதேநேரத்தில், என்னுடைய தொகுதியில் நீண்ட நெடுங்காலமாக வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக இருக்கின்ற டன்லப் தொழிற்சாலை மூடப்பட்டிருப்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதனால், நேரடியாகவும், மறைமுகமாகவும், ஏறத்தாழ 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தங்களுடைய வேலைவாய்ப்பை இழந்து தங்களுடைய குழந்தைகளுக்கு பள்ளிகளிலே, கல்லூரிகளிலே 'ஃபீஸ்' கட்ட முடியாமல் திணறுகின்ற நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே, புகழ்வாய்ந்த டன்லப் தொழிற்சாலை — உலகமெங்கும் டன்லப் தொழிற்சாலை எங்கே இருக்கிறது என்று கேட்டால் அம்பத்தூரிலே இருக்கிறது என்று சொல்வார்கள். அந்தத் தொழிற்சாலையை உடனடியாகத் திறப்பதற்கு அரசு முன்வர வேண்டும் அல்லது அரசே ஏற்று நடத்த முன்வர வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 12-05

மேம்பாலங்கள் கட்டுகின்ற பணியை 15 மாதங்களிலே முடித்து விடுவோம் என்ற ஒரு குறிக்கோளை இந்த அரசு வைத்து, மேம்பாலங்கள் கட்டும் பணியைத் துவக்கியிருக்கிறது; பாராட்டுகிறோம். அதேபோன்று, எங்களுடைய பகுதியிலே பல வேலைகள், குறிப்பாக போக்குவரத்துத் துறையின் சார்பாக கோயம்பேடு பகுதியிலே வெளியூர் செல்கின்ற பேருந்து நிலையம் மூன்று மாதங்களுக்குள் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கட்டுமானப் பணியை மூன்று

மாதங்களில் துவக்கி, அடுத்த மூன்று மாதத்திற்குள் முடித்துவிடுவோம் என்ற காலக் குறியீட்டை நிர்ணயிப்பீர்களேயானால், உண்மையிலேயே மிகவும் சந்தோஷப்பட வேண்டிய விஷயமாக இருக்கும்.

தமிழகத்திலே, தமிழக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகம் ஒன்று மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய காலத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த மேம்பாட்டுக் கழகத்திற்கு ஒரு மாவட்டத்தில் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் வங்கிக் கடனுக்காக விண்ணப்பித்திருக்கிறார்கள். ஒரு விண்ணப்பத்தை 35 ரூபாய்க்கு விற்கின்றார்கள். ஆனால், இந்த அரசு பொறுப்பிற்கு வந்த பிறகு இதுவரை எத்தனை பேருக்கு இந்தத் தமிழக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பிலே கடனுதவி அளித்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். V.A.O.-விடம் சான்றிதழ் வாங்கச் சென்றால், அவர்களுக்கு ஐநூறு ரூபாய் கொடுத்தால்தான் சான்றிதழ் தர முடியும் என்று சொல்கிறார்கள். அதேபோன்று, 35 ரூபாய் கொடுத்து, ஒரு இலட்சம் பேர் விண்ணபபம் வாங்கினால், அதிலே வருமானம் 35 இலட்சம் ரூபாய் வருகிறது. விண்ணப்பங்களை வங்கிகளுககு அனுப்புகிறார்கள். வங்கிகளிலே அரசினுடைய பரிந்துரையை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. ஒருவர் புதிய செருப்பு வாங்கிப் போட்டுக்கொண்டு கடன் வாங்குவதற்கு அங்கே சென்று அலைவாரேயானால், அந்தச் செருப்பு முழுவதும் தேய்கின்ற காலம் வரை அவரால் கடனைப் பெற முடியவில்லை. அதனால், மக்கள் ஏமாற்றம்தான் அதிகமாக அடைகிறார்கள். ஆகவே, கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தத் தமிழக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகத்திற்குத் தனியாக ஒரு தலைவரைப்போட்டு, வங்கிகளின் மூலமாக கடன் கொடுக்கின்றபோது, வங்கி அதிகாரிகள் சொல்கின்ற சாக்குப்போக்குகளையெல்லாம் நீக்கி, அங்கே முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று உங்களைப் பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் கர்நாடக மாநிலத்தை எடுத்துக் கொண்டால், இந்த மேம்பாட்டுக் கழகம் நல்லமுறையிலே இயங்குகின்றது. கேரளாவிலே நல்லமுறையிலே இயங்குகின்றது. அதுபோன்ற நிலை தமிழகத்திலேயும் ஏற்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் ஆட்சிக் காலத்திலேதான் முதன்முதலாக குடிசை மாற்று வாரியம் கண்டீர்கள். அதேபோன்று, இப்போது சமத்துவபுரத்தைக்



கண்டு ஒரு நல்ல பெயர் அகில இந்திய அளவிலே உங்களுக்கு இருக்கிறது. ஆனால், அந்த சமத்துவபுரத்தைப் பொறுத்தவரையில், ஒரு சின்ன வேண்டுகோள். தமிழகத்தில் இருக்கின்ற சாதிகளை நான்காகப் பிரிக்கலாம். பெரும்பான்மை சமுதாயமான இந்து சமுதாயம், தாழ்த்தப்பட்டவர்கள், கிருத்தவர்கள், முஸ்லீம்கள் என்றுதான் பிரிக்கமுடியும்; ஆனால், ஒரு முஸ்லீம், ஒரு கிருத்துவருக்கு நீங்கள் தந்தால் அந்த ஒன்றுவீட்டுக்காரனைக் கூப்பிடு என்பார்கள். ஒரு பாய் வீடு இருக்கிறது, அந்த பாயைக் கூப்பிடு என்பார்கள். ஒரு கிருத்துவர் வீடு இருக்கிறது, அந்த கிருத்துவரைக் கூப்பிடு என்பார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உங்களுடைய காலத்திலேயே இட ஒதுக்கீட்டை இதிலே நீங்கள் கடைப்பிடித்து....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எங்கேயாவது ஒரு சமத்துவபுரத்தில் அதிகமான முஸ்லீம்கள் அல்லது அதிகமான கிருத்தவர்கள் கேட்டு, அவர்களுக்குத் தகுதி அடிப்படையிலே கொடுக்கப்படவில்லை என்ற உதாரணம் இருந்தால், அதை மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பாரா?

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இது ஒரு பணிவான வேண்டுகோள்தானே தவிர, வேறு ஒன்றும் இல்லை. நிறைய பேர் வருவார்கள்; அவர்கள் கேட்டால், நீங்கள் கொடுக்சத் தயாராக இருந்தால், நிறையபேர் கேட்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்ல பல திட்டங்கள் அரசு சார்பிலே நடந்து வருகின்றன. நாட்டிலே சூழ்நிலைகளெல்லாம் அமைதியாக இருக்கின்ற நேரத்தில் இங்கொன்றும், அங்கொன்றுமாக ஒருசில பிரச்சினைகளுக்குரிய சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அதிலும் அரசு கவனம் செலுத்தி நல்லமுறையிலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் இல்லத்திலே தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தகவல் சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுக்கிறார்கள். D.G.P.-யிடம் சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுக்க.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கூடலூர் சமத்துவபுரத்தில் ஏறத்தாழ 10 முஸ்லீம்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலை கொறடா தெரிவிக்கிறார்.

பிற்பகல் 12-10

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** தலைவர் அவர்களே, எங்களுடைய சமுதாயத்தின் சார்பிலே உங்களுக்குப் பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், இங்கொன்றும், அங்கொன்றுமாக நடக்கின்ற பிரச்சினைகளுக்குரிய சம்பவங்களையெல்லாம் அரசு கவனத்தில் கொண்டு, நல்ல நடவடிக்கை எடுக்கிறது. உள்துறைச் செயலாளரிடம் உடனடியாக தொலைபேசியிலே சொன்னால்கூட, அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால், இராமநாதபுரத்தில் நடந்த கலவரத்தின்போது, அங்கே சூறையாடப்பட்ட பொருட்களெல்லாம் மண்டபம் பக்கத்திலே விற்கப்படுகின்றன என்று அங்கேயிருக்கின்ற S.P.-க்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கக் கூப்பிட்டால், அவர்கள் தொலைபேசியில்கூட பேச மறுக்கிறார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு முறையான மரியாதைகூட தரமாட்டேன் என்கிறார்கள். ஒரு குட்டி இராஜாவைப்போல ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கும் காவல் துறை அதிகாரிகள் செயல்படுகிறார்கள். ஆனால், ஒரு I.G., D.G.P.-யோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால், அதை attend செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் வீட்டிற்குத் தொலைபேசி மூலம் சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. D.G.P.-க்கு சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. Home Secretary-க்கு சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாவட்டத்திலே இருக்கின்ற S.P., D.I.G. போன்ற அதிகாரிகள் ஒரு சட்டமன்ற உறுப்பினர் தொலைபேசி மூலம் பேசினால் மதிப்பு கொடுத்து பேசவேண்டும் என்ற உத்தரவை நீங்கள் பிறப்பிக்க வேண்டும். நாங்கள் எங்களுடைய சொந்த வேலையாக அவர்களிடம் பேசவேண்டிய சூழ்நிலை இல்லை. மக்கள் நலப் பணிகளுக்காகப் பேசுகிறோம். நாங்கள் சென்னையிலிருந்து தொலைபேசி மூலம் பேசுகிறோம் என்றால் 5 மணித் துளிகள், 10 மணித் துளிகளானாலும் அவர்கள் line-ல் வருவதே இல்லை. எங்களுக்கு உரிய மரியாதை இல்லை என்பதை மனவருத்தத்தோடு இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.



**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் இரண்டு இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று, அந்தச் சவ ஊர்வலத்திலே சென்றவர்கள்மீது திட்டமிட்டு வன்முறைக் கும்பல்களால் கலவரம் ஏற்படுத்தப்பட்டு ஏறத்தாழ இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்மீது வழக்குப் போடுகிற சூழ்நிலை இருக்கிறது. இதில் உடனடியாக முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. நிச்சயமாக அவ்வாறு நடவடிக்கை எடுத்தால்தான் இந்தச் சமுதாயத்திலே இதுபோன்று ஏற்படும் வன்முறைகளை எல்லாம் தடுக்க முடியும். இதுபோன்ற கலவரங்கள் எந்தப் பின்னணியில் நடைபெறுகின்றன என்பதையும் அரசு நிச்சயமாக ஆராயும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

கோயம்புத்தூர் கலவரத்திலே ஏறத்தாழ 20 பேர் காணவில்லை என்று அறிவித்திருக்கிறீர்கள். அவர்களுடைய நிலை என்ன ஆயிற்று? அவர்கள் இந்த நாட்டை விட்டு ஓடிவிட்டார்களா? இல்லை. ஆகையால் அந்த 20 பேர்களையும் இறந்துவிட்டதாக அறிவித்து, அந்த வீடுகளில் வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு தரவேண்டும். அந்த இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நல்ல முறையிலே அரசு செயல்படுகிறது, காமராஜர் ஆட்சிக்குப் பிறகு ஊழலற்ற ஆட்சியாக தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி இருக்கிறது. இதுபோன்ற செயல்களிலும், மக்கள் மத்தியிலே அமைதி ஏற்படுத்துகிற நிலையிலும், அமைதிக் குழுக்களை ஏற்படுத்துகிற விதத்திலும், அந்த அமைதிக் குழுக்கள் அதிகாரத்தோடு இருக்கிற சூழ்நிலையையும் ஏற்படுத்த இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகுவேலு.

***திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது நன்றி தெரிவிக்கிற இந்தத் தீர்மானத்தில் நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேதகு ஆளுநர் அவர்களுடைய உரை வரவிருக்கிற நம்முடைய நிதிநிலை அறிக்கையினுடைய தோரண வாயிலாக இருக்கிற காட்சியை நாம் படிக்கின்ற நேரத்திலே காணமுடிகிறது. 'பாயிரம் இல்லது பனுவல் அன்று'

என்ற நன்மொழிக்கேற்ப பனுவலாக வரக்கூடிய நிதிநிலை அறிக்கைக்கு இது ஒரு பாயிரமாக அமைந்திருக்கிறது. 'நிரல்பட்ட மணிகளை. நேர்பட வைத்தாங்கு' என்ற சங்கத் தமிழ் வரிகளுக்கு எடுத்துக்காட்டாக இந்த மேதகு ஆளுநர் அவர்களுடைய உரை அமைந்திருக்கிறது. இந்த உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்த இந்தப் பேரவையினுடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி சுப்புலட்சுமி செகதீசன் அவர்கள் இந்த அவையிலே கோடிட்டுக் காட்டினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மூலமுழக்கங்களான 'அண்ணா வழியில் அயராது உழைப்போம், ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம்' என்பது போன்ற அந்த 5 மூலமுழக்கத்தினுடைய கரு, அதனுடைய விரிவாக்கம்தான் இந்த மேதகு ஆளுநருடைய உரை என்று அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள்.

*பிற்பகல் 12-15*

இந்த ஆளுநருடைய உரையிலே இதயமாக இருக்கக்கூடிய சில கருத்துக்களை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். 20 ஆம் நூற்றாண்டு முடிந்து 21 ஆம் நூற்றாண்டிற்கு தமிழகத்தை அழைத்துச் செல்கிற நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அண்மையிலே சென்றுவந்த கீழ்த்திசை பயணத்தின் வெற்றிதான் இணையம் '99 மாநாடாகும். கணினியைப் பயன்படுத்தி, 21 ஆம் நூற்றாண்டில் மலரும் தமிழகத்தைக் காண, இணையம் '99 மாநாட்டின் மூலம் எடுத்த முடிவுகளைச் செயலாற்றத் துடிக்கும் திட்டங்களை, இந்த ஆளுநர் உரை கோடிட்டுக் காட்டியிருக்கிறது. இந்த மாநாட்டின் முடிவுகளை உலகமே பாராட்டுகிறது. தமிழ் இணைய மாநாட்டின் முடிவுகள் மூலம் வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்பப் புரட்சிக்கு, அடுத்த தலைமுறையின் வளர்ச்சிக்கு வித்திடுவதாக இந்த உரை இருக்கிறது. தமிழ் பேச மட்டுமே தெரிந்த ஒரு தலைமுறை, தமிழிலே எழுதி மகிழப் போகிறது. வெளிநாட்டில் குடியேறிவிட்ட தமிழர்களின் குழந்தைகள் அங்கிருந்தபடியே, அவர்கள் வீட்டில் அமர்ந்தே, தமிழ் கற்க ஒரு புதிய பல்கலைக்கழகம் உருவாக இருக்கிறது. பொருளாதார மொழியாக வளர இருப்பதன்மூலம், தமிழ் ஓர் உலக மொழியாகப் போகிறது. கணினியில் பயன்படுத்த தமிழிலேயே மென்பொருள்கள் உருவாகப் போகின்றன. இவை எல்லாவற்றிற்கும், அண்மையில் சென்னையில் நடந்த உலக இணையக் கருத்தரங்கு விதை போட்டிருக்கிறது. இந்த விதை நிச்சயம் முளைத்து எழும்; விருட்சமாகும்; பூவாகும்; காய் வரும்; புதிதாக இலை வரும்; புளிப்பில்லா கனிகள்



வரும். ஏனெனில், அது விழுந்த மண் தமிழ் மண். அதற்கு ஈரமும், உரமும், சூரிய வெளிச்சமும் தந்து அரவணைக்கக் காத்திருப்பது, அறிவியல் ஆர்வமும், இலக்கிய மணமும் கொண்ட கலைஞரின் அரசு. 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்று கூறினான் மார்க்ஸ். ஆனால், உலகத் தமிழர்களே ஒன்றுபடுங்கள் என்று உலகத் தமிழர்களை ஒன்று சேர்க்கும் பெரிய சக்தியாக கலைஞர் அவர்கள் திகழ்கிறார்கள் என்பதை இந்த ஆளுநர் உரை சுட்டிக்காட்டுகிறது.

மாவீரன் அலெக்சாண்டர் போர்க்களத்திலே போரிட்டதைப் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் எழுதுகிறார்கள்; 'கிரேக்க மாவீரன் அலெக்சாண்டர் சென்றான்; கண்டான், வென்றான்' என்று குறிப்பிடுவார்கள். ஆனால் நம்முடைய சேரன் செங்குட்டுவனோ சென்றான்; வென்றான் என்பதுதான் தமிழ் இலக்கிய வரிகள். அந்தவகையிலே நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் எட்டுத் திக்கும் முழங்கி, இன்ப முரசு கொட்டி, மட்டில்லாத தமிழை வாரிவாரி கொட்டிய இரசனைக் குயிலாக இருக்கிறார்கள். அவர்களுடைய கீழ்த்திசைப் பயணத்தின் வெற்றியாகத்தான் இந்த இணையம் '99-ஐ அவர்கள் தமிழகத்திற்குத் தந்திருக்கிறார்கள். இதன்மூலம் ஒன்றரை இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, 12 ஆயிரம் இணைய மையங்கள் என்று அடுக்கடுக்கான அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிற அறிக்கைதான் இந்த ஆளுநருடைய உரை.

அதைப்போலவே, தமிழகத்திலே தொழில் புரட்சி. வெண்மைப் புரட்சிகளின் தந்தை கலைஞர், பசுமைப் புரட்சிக்கும் தந்தை அவர்தான். 10 ஆயிரம் ஹெக்டேர் தரிசுநில மேம்பாட்டுத் திட்டம், சாதிவெறி, மதவெறிகளைத் தூண்டுகிற ஊர்வலங்களுக்குத் தடை விதிக்கிற சட்டம், மாநாடுகளுக்கு, பேரணிகளுக்கு இனி அனுமதி இல்லை என்பதோடு, தமிழர்கள் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக, தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ ஆவன செய்யப்பட்டிருக்கின்ற அருமையான திட்டங்கள்.

அதைப் போலவே, 1989 ஆம் ஆண்டு இதே சட்டப் பேரவையில் நான் பேசுகிறபோது ஒரு எளிய கருத்தைத் தெரிவித்தேன். 'நமக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய சிறிய மாநிலமான புதுவையிலே மலத்தைத் தலையிலே தூக்குகின்ற கொடுமையினை அந்தச் சிறிய மாநிலம் ஒழித்துவிட்டது. நம்முடைய மாநிலம் எப்போது ஒழிக்கப் போகிறது' என்று 1989 ஆம் ஆண்டு இதே பேரவையிலே நான் குறிப்பிட்டுப் பேசிய அந்தக் கருத்திற்கு விடை காண்கின்ற வகையிலே,

மனிதர்களுடைய கழிவுப் பொருட்களை, மனிதர்களே தலையில் தூக்குகின்ற கொடுமையை ஒழிப்பதற்காக மனித நேயம் மிக்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தக் கருத்து, வரவேற்கப்பட வேண்டிய ஒரு கருத்தாகும்.

*பிற்பகல் 12-20*

நம்முடைய கலைஞர் அவர்களுடைய பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம், கண்ணொளி வழங்கும் திட்டம், கைரிக்‌ஷாவை ஒழித்து சைக்கிள்ரிக்‌ஷா வழங்கிய திட்டம், ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம், கருணை இல்லங்கள், கைம்பெண் மறுவாழ்வு, ஏழைப்பெண்களுடைய திருமண உதவி, குடிசை ஒழிப்பு, தாழ்த்தப்பட்டோருக்கு வீடுகள், குடிசை மாற்று வாரியம், மீனவர்களுக்கு இலவச வீடு இப்படியெல்லாம் ஆயிரமாயிரம் திட்டங்களை நிறைவேற்றிய கலைஞருடைய எண்ணங்களுக்கு இலக்கியமாக இந்த ஆளுநருடைய உரை அமைந்திருக்கிறது.

அதுபோலவே, 2000-க்குள் அனைவருக்கும் கல்வி, அதுவும் கட்டாய இலவசக் கல்வி, பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள், கழிப்பிடங்கள், நூலகங்கள், குடிநீர் வசதி, இலவச bus pass, நண்பகல் உணவு, இப்படி அடுக்கடுக்கானத் திட்டங்களை இந்த ஆளுநர் உரை அளித்திருக்கிறது.

ஆதிதிராவிடர்களுடைய நலப் பள்ளிகளிலே கல்வி மேம்பாட்டிற்காக அரிய திட்டங்கள், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுரம், ஊரகப் பகுதிகளிலே குடிநீர் இணைப்பு, ஊழலை ஒழிக்க நிர்வாகச் சீரமைப்பு, நீதிபதி இராமானுஜம் குழு, விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்கும் கோலப்பன் குழு அறிக்கை என இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் கொண்டிருக்கின்ற மேதகு ஆளுநர் உரையை வரவேற்று, உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது தமிழ் பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே எனது கருத்துக்களை இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.



ஆளுநர் உரையானது அறிவியல் முன்னேற்றத்தினுடைய அறிமுக உரையாகவும், பொற்காலத் தமிழகத்தினுடைய ஒரு பொழிப்புரையாகவும் அமைந்திருப்பதை முதலிலே நான் பாராட்டி, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மனிதக் கழிவுகளை மனிதனே சுமக்கின்ற இழிவுகளைத் துடைத்தெறிகின்ற வகையிலே சட்டம் இயற்ற இருப்பது பாராட்டுக்குரிய ஒரு செயல் மட்டுமல்ல, இந்த பாரத நாடே பின்பற்றி போற்றத்தக்க ஒரு முன்னோடித் திட்டமாகவும் திகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதையும் அத்தகைய திட்டமானது, பாரதி கண்ட கனவைப் போல,

"ஏழையென்றும் அடிமையென்றும்
எவனுமில்லை சாதியில்
இழிவுகொண்ட மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே"

என்ற அவரது கனவை நனவாக்குகின்ற வகையிலே தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்றத்தாழ்வுகளை நீக்குகின்ற வகையிலே, சமத்துவபுரத் திட்டங்களும், மனிதக் கழிவை சுமக்கின்ற இழிவைத் துடைத்தெறிகின்ற வகையிலே சட்டங்களையும் இயற்ற இருப்பது உண்மையிலேயே அவர் பெரியார், அண்ணாவின் வாரிசாக மட்டுமல்லாமல், சமூக இழிவுகளைத் துடைத்தெறிவதன் மூலமாக அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய வாரிசாகவும் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மனதாரப் பாராட்டி, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது மத்தியிலே ஆளக்கூடிய பா.ஜ.க. கூட்டணி அரசானது, பட்ஜெட் வருவதற்கு முன்னாலேயே, அரிசி, சர்க்கரை, சமையல் எரிவாயு மற்றும் உரம் போன்ற இன்றியமையாப் பொருட்களினுடைய விலையை ஏற்றியிருக்கிறது. தங்களை உயர்ந்தவர்களாக அடிக்கடி காட்டிக்கொண்டிருக்கிற அவர்கள், மக்களுடைய வாழ்க்கைச் சுமையை உயர்த்துவதிலேயும் தங்களை உயர்ந்தவர்களாகவே காட்டியிருப்பது வேதனையளிக்கக்கூடியதாகும்.

அதேநேரத்தில் இந்த அரசைப்பற்றி தாழ்வாகப் பல நேரங்களிலே சிலர் சொன்னாலும்கூட, மக்களுடைய வாழ்க்கை தரத்தைத் தாழ்த்துவதிலே என்றைக்கும் நாங்கள் காரணமாக இருக்கமாட்டோம் என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையிலே, 160 கோடி ரூபாய்

அரசுக்கு நிதிச் சுமையென்றாலும், அந்த விலையேற்றத்தை மக்கள் மீது சுமத்த மாட்டோம் என்று அறிவித்திருப்பதன் மூலம் உண்மையிலேயே இந்த அரசானது ஒரு வழிகாட்டியான, ஏழை நடுத்தர மக்களுக்கான அரசு என்பதை மீண்டும் நிறுவிக்காட்டியிருக்கிறது.

இதிலே மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சராக இருக்கிறவரிடம் சமையல் எரிவாயுவினுடைய விலையைக் குறையுங்கள் என்று மக்கள் கேட்கிறபோது, அவர் சொல்கிறார், 25 ரூபாய் கொடுத்து ஐஸ்கிரீம் வாங்கிச் சாப்பிட முடிகிறபோது 14 ரூபாய் அதிகம் கொடுத்து சமையல் எரிவாயுவை வாங்க முடியாதா என்று கேட்டிருக்கிறார். 25 ரூபாய்க்கு ஐஸ்கிரீம வாங்கிச் சாப்பிடுகிற அளவிற்கு அந்த அமைச்சருடைய வசதி வாய்ப்பு பெருகி இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறோம். ஆனால், 14 ரூபாய் அதிகமாகக் கொடுத்து அதனை வாங்கும் அளவிற்கு மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவில்லையென்பதை பாவம் அவர் மறந்துவிட்டிருக்கிறார். ஆகவேதான், அரசுக்கு நிதிச் சுமை வந்தாலும் பரவாயில்லை, மக்களுக்கு வரிச் சுமை வரக்கூடாது என்ற நல்லெண்ணத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிற இந்த ஆட்சியை நீக்க வேண்டுமென்றுகூடப் பேசியிருக்கிறார்கள். ஆனால், அதேநேரத்திலே, மத்தியிலே, மக்களின் வாழ்க்கை சுமையை அதிகரித்துக் கொண்டே போய்கொண்டிருக்கிற அவர்களுடைய ஆட்சி மட்டும் நீடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி, மக்களுக்கான நல்ல திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிற இந்த ஆட்சியினுடைய சிறப்பியல்புகளை, நல்லாட்சி முறைகளை பாராட்ட மனம் இல்லாதவர்களை மக்கள் "கருத்துக் கருமிகள்" என்றுதான் சொல்வார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-25*

கணினி இணைய வசதிகள் எல்லோரும் எளிதிலே பெறக்கூடிய வகையிலேயும், ஆங்கிலம் அறியாதவர்கள்கூட தமிழிலே மிகச் சிறப்பான வகையிலே, கணினி இணைய வசதிகளைப் பெறக்கூடிய வகையிலேயும் சிறப்பான திட்டங்கள் பல தீட்டியிருப்பதன் மூலம், இந்த அரசானது, தமிழையும் வளர்த்திருக்கிறது, 1½ இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திருப்பதன் மூலமாக தமிழர்களையும் வளர்த்தெடுக்க விரும்புகிறது என்பதையே இந்தத் திட்டமானது எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கிறது.



இயல், இசை, நாடகம் என்று சொல்லக் கூடிய முத்தமிழ், நான்காம் தமிழான அறிவியல் தமிழாகவும், ஐந்தாம் தமிழான, பொருளியல் தமிழாகவும் மலரச் செய்திருக்கிற பெருமை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவரையே சாரும். இத்தகைய செயல்களையெல்லாம் செய்திருப்பதன் மூலமாக தமிழக மக்கள் மட்டுமல்ல, உலக மக்கள் அவரை முத்தமிழ் அறிஞர் என்று மட்டும் பாராட்ட மாட்டார்கள். ஐம்பெரும் தமிழையும் வளர்த்தெடுக்கும் ஆரூர் சோழர் கலைஞர் என்று சொல்லித்தான் உலகம் அவரைப் பாராட்டி வரவேற்கும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நேரத்திலே அறிவியல் வளர்ச்சியானது நமக்கு தொண்டூழியம் செய்யக் கூடிய ஊழியனாக இருக்க வேண்டுமே தவிர, ஆட்டிப் படைக்கின்ற ஆண்டானாக இருக்கக் கூடாது. அதாவது, அறிவியல் சாதனங்கள் வளர்ச்சியினாலே, வேலையில்லாத் திண்டாட்டம் பெருகாத அளவிற்கு அரசு அதைக் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊழலைத் தடுப்பதற்கு நீதிபதி இராமானுஜம் குழுவின் பரிந்துரை செயல்படுத்தப்படும் என்பது ஒரு வகையிலே மகிழ்ச்சி அளிக்கிறது. அதேசமயம், இன்னொருபுறம், ஊழல் செய்தவர்களைக் காப்பாற்ற உலை வைக்கின்ற வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருப்பது வேதனையாக இருக்கிறது. இப்போது வழக்குகள் வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றப்படுவதன் மூலமாக சிலரைக் காப்பாற்றலாம் என்று மத்திய அரசு நினைக்கலாம். ஆனால், அவர்களுக்கு இங்கே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஊழல் செய்தவர்கள் நிச்சயமாக தண்டிக்கப்பட வேண்டும். அப்படி இல்லை என்றால், இந்த நிலைமை இப்படியே தொடரும் என்றால் நீதி தேவதையின் கண்கள் கட்டப்படுகிற நிலைமைகள் தொடருமேயானால், நிச்சயமாக மக்கள் இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். கடைசியிலே, சட்டத்தையே கையிலே எடுத்துக்கொண்டு, கலைஞர் கதை வசனம் தீட்டிய பாலைவன ரோஜாக்கள் என்ற படத்தில் வருவதுபோல், அந்த ஊழல் செய்தவர்களுக்குப் பாடம் புகட்ட மக்கள் தவறமாட்டார்கள் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். உப்பைத் தின்றால் தண்ணீர் குடித்துத்தான் தீரவேண்டும். அதேபோல் ஊழல் செய்தால் தண்டனை பெற்றுத்தான் தீரவேண்டும் என்ற நிலைமையை

இந்த அரசு கொண்டுவர வேண்டும், அதற்கு மக்களும் விழிப்பாக இருக்க வேண்டும், இல்லையென்றால், அந்த மக்களுடைய மடி மீதே மாடி கட்டி வாழ ஆரம்பித்து விடுவார்கள் இந்த மாபாவிகள் என்பதை நான் இந்த நேரத்திலே எச்சரிக்கையாகச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல், யானை இளைத்துப் போனால், எறும்புகூட மாமன் முறை கொண்டாடும் என்று சொல்வார்கள். இப்போது மத்தியிலே இருக்கக் கூடிய ஆட்சியானது நிலையற்ற முறையிலே இருக்கக் கூடிய காரணத்தினாலே—காரணம் இப்போது இந்த ஆட்சியை யார் யாரோ, எப்படி எப்படியோ மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். எது எதற்கோ மிரட்டக் கூடியவர்கள், இப்போது கர்நாடகத்திலே 19 தமிழர்களுடைய பணி மறுக்கப்பட்ட நேரத்திலே அதற்காகத் தங்களுடைய மிரட்டலைப் பயன்படுத்தி இருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை. அந்தத் தலைமைக் கணக்காயர் அலுவலகத்திலே சட்டப்படி பணியமர்த்தப்பட்ட 19 தமிழர்களையும் மீண்டும் அங்கே பணி அமர்த்துவேன் என்று மத்திய அமைச்சர் கடம்பூர் ஜனார்த்தனம் அவர்கள் சொல்லியிருந்தால், உண்மையிலேயே அவரை மறத் தமிழன் என்று பாராட்டியிருக்கலாம். ஆனால், அவர் என்ன சொல்லியிருக்கிறார்? வேதனை தரக்கூடிய ஒரு செய்தி என்னவென்றால், அவர்களை தமிழகத்திலே பணியமர்த்துவோம் என்று சொல்லியிருக்கிறார். ஆக, 19 தமிழர்களையும் கர்நாடகத்திலேயே பணியமர்த்துவேன் என்று சொல்லியிருந்தால், அவரை மறத் தமிழன் என்று பாராட்டியிருக்கலாம், ஆனால், இப்போது அவர் மடிசார் தமிழனாகப் போன காரணத்தினாலேதான் அந்த அடிப்படை உரிமையை அரசமைப்புச் சட்டம் வழங்கிய அடிப்படை உரிமையைக் கூட நிறைவேற்றுவதற்கு தயங்கிக்கொண்டு இருக்கிறார். இப்படியே, ஒவ்வொருவரும், ஒவ்வொரு மாநிலத்தவரும் மிரட்ட ஆரம்பித்தால் இந்திய ஒருமைப்பாடு என்ன ஆகும் என்பதை ஒருகணம் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த நேரத்திலே நான் ஒன்றைத் தெளிவாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருமைப்பாட்டு புத்தகங்களை இப்படியே ஒவ்வொரு மாநிலத்தவரும் கிழிக்க ஆரம்பித்தால், நாளை இந்தியா என்ற புத்தகமே இல்லாமல் போய்விடும் என்ற எச்சரிக்கையையும் நான் இந்த மாமன்றத்தின் மூலமாக விடுக்க ஆசைப்படுகிறேன்.



பிற்பகல் 12-30

அதேபோல், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்காக 10,000 எக்டேர் நிலங்களை அடுத்த ஆண்டிலேயிருந்து ஒதுக்குவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் இந்த நேரத்திலே அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். ரஷியாவைப் போல ஒரு கூட்டுப் பண்ணைத் திட்டமாக, அந்தத் திட்டத்தை இணைத்துச் செயல்படுத்துவோமேயானால், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் நாம் போக்கலாம். அதே நேரத்தில் மலர இருக்கிற தமிழ் சோஷலிச சமுதாயத்திற்கும் ஒரு முன்னோடித் திட்டமாகவும் அது அமைகிற மாதிரி பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு, கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.1,000 என்ற அளவிற்கு உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாப், ஹரியானா, மகாராஷ்டிரா மாநிலங்களிலே விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற கடன் அட்டைகளைப் போல் இந்த மாநிலத்திலேயும் முழுமையாக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜெயங்கொண்டம் நிலக்கரிச் சுரங்கத் திட்டத்திலே சில இடைத் தரகர்கள் புகுந்து, மக்களிடம் என்னிடம் வாருங்கள், ரூ. 10 இலட்சம் பணம் வாங்கித் தருகிறேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அரசு, இடுக்கணணிலே கடுக்கனைக் கழற்றக் கூடிய இத்தகையவர்களைக் கண்காணித்து, அந்த நிலம் தந்தவர்களுக்கு உரிய முறையிலே வேலைவாய்ப்பும், அந்த நிலத்திற்கு உரிய நஷ்டயீடும், அவர்களுக்கு மாற்றாக முந்திரிக் காடுகளில் நிலத்தையும் ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம் - சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு வளர்ச்சி நிதியினை இந்த ஆண்டு நீங்கள் ரூ. 1 கோடியாக உயர்த்தி அறிவிப்பீர்கள் என்று நாங்கள் மிகுந்த ஆவலோடு, நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

என்னுடைய ஆண்டிமடம் தொகுதியிலே இந்த ஆண்டாவது ஒரு முந்திரி தொழிற்சாலையும், ஒரு பொறியியல் கல்லூரி அல்லது தொழில்நுட்பக் கல்லூரியும் தொடங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிங்கள கடற்படையினாலே தொடர்ந்து தாக்கப்படுகின்ற நம்முடைய தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்பு வசதிகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை போன்ற குறைகள் இருந்தாலும்கூட, பொதுவாக இந்த ஆளுநர் உரையானது இந்த நாட்டு மக்களுக்கு ஒரு ஆனந்த உரையாகத் திகழ்கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, ஆளுநர் உரையை வரவேற்று, நன்றிகூறி, அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையின் மீது எம்.ஜி..ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை எடுத்து வைக்கிற வாய்ப்பைத் தந்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே கடந்த ஓராண்டிலே தமிழ்நாட்டிலே நடைபெற்றிருக்கிற வளர்ச்சிப் பணிகள், புதியதாக கணினி வளர்ச்சியிலே இந்த அரசு காட்டியிருக்கிற அக்கறை, நான்காவது தமிழ் என்று சொல்லக் கூடிய அளவிற்கு ஒரு சிறப்பான மாநாட்டினை நடத்தி இளைஞர்கள் மத்தியில் புதிய ஆர்வத்தை உருவாக்குவதற்காக தொழில்நுட்ப அறிவை, கணினி அறிவை தருவதற்காக நடைபெற்றிருக்கிற பணிகள் ஆகியன குறித்து விளக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக இந்த உரையிலே புதுத் திட்டங்கள் ஒன்றும் அதிகமாக அறிவிக்கப்படவில்லை. கடந்த ஆண்டிலே நிகழ்ந்திருக்கிற நிகழ்ச்சிகள்பற்றி மட்டுமே தொகுத்துக் கூறப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், விரைவிலேயே பட்ஜெட் வருகிற காரணத்தினாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட்டிலே பல புதிய திட்டங்களை அறிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். இப்போது சில கருத்துக்களை நாங்கள் சொல்கிறபோது இந்த ஆளுநர் உரையிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளை கடந்த ஆண்டிலே நடைபெற்ற சாதனைகளை மீண்டும் சொல்லிக் காட்டுவதற்குப் பதிலாக சிறிய இடைவெளிக்குப் பின்னாலே மீண்டும் பட்ஜெட் வருகின்றபோது அதிலே இந்த அரசு என்னவெல்லாம் செய்ய வேண்டும், என்னென்ன எதிர்பார்ப்புகள் மக்களிடத்திலே இருக்கின்றன என்பதை நாங்கள் சுட்டிக்காட்டினால் முடிந்த வரை அவற்றை பட்ஜெட்டிலே கொண்டுவர அமைச்சர்கள் எல்லாம் தங்களுடைய இலாக்காக்கள் மூலமாக தங்களுடைய மானியக் கோரிக்கைகள் வருகிறபோது, அவற்றிலே கொண்டுவந்து நிறைவேற்ற உதவியாக இருக்கும் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.



பிற்பகல் 12-35

இதிலே சட்டமன்ற உறுப்பினர்கள் பிரச்சினை என்ற அளவிலே, மாண்புமிகு தீரன் அவர்கள் சொன்னதைப்போல, இப்போது 35 இலட்சம் ரூபாய் தரப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் நன்றி தெரிவிக்கின்றோம். இதற்கு முன்னாலே சட்டமன்ற உறுப்பினர்கள் காலங்காலமாக வெறும் தபால்காரர்களாகத்தான் இருந்தார்கள். தொகுதியிலே போகிறபோது தருகிற மனுக்களை மந்திரிகளுக்குத் தரலாம்; அதிகாரிகளுக்கு அனுப்பலாம்; அவ்வளவுதான் செய்ய முடியும். ஒரு பஞ்சாயத்துத் தலைவருக்கு இருக்கிற அதிகாரம்கூட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிச்சயமாகக் கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் முதன்முறையாக சட்டமன்றத் தொகுதி வளர்ச்சி நிதி என்று அறிவித்து இப்போது அதை 35 இலட்சமாக ஆக்கியிருக்கிறார்கள். நாடாளுமன்றத்திலே நாடாளுமன்ற உறுப்பினருக்கு 2 கோடி என்று அறிவித்திருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களைவிட சட்டமன்ற உறுப்பினர்கள்தான் தொகுதியிலே நேரடியாக மக்களிடத்திலே அதிகமான தொடர்பும், மக்கள் சந்தித்து அடிக்கடி கேள்வி கேட்கக் கூடிய வாய்ப்பும் அதற்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பும் பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள். எனவே, தீரன் அவர்கள் சொன்னதைப் போல 1 கோடி என்று இல்லாவிட்டாலும் குறைந்தபட்சம் ஒரு தொகுதிக்கு 50 இலட்சம் என்கிற அளவிலாவது (குறுக்கீடு) அதிகமாகக் கேட்கவா? தொகுதிக்கு 10 கோடி கொடுங்கள் என்றுகூடக் கேட்கலாம். ஆனால், முடியவேண்டும் அல்லவா? நான் சொல்வது யதார்த்தமாக நடைமுறைச் சாத்தியம் உள்ளது என்கிற அளவிலே குறைந்தபட்சம் 50 இலட்சம் என்கிற அளவுக்காவது இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பட்ஜெட் வருகிறபோது அறிவிக்க வேண்டும் என்று முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நேரம் சுருக்கமாக இருக்கிற காரணத்தினாலே தொகுதி பற்றிய ஒருசில பிரச்சினைகளை முதலிலே சொல்லிவிடுகிறேன். அறந்தாங்கியிலே வர இருக்கிற சர்க்கரை ஆலைக்கு இன்னும் வருவாய்த் துறையிலேயிருந்து ஏறக்குறைய 100 ஏக்கர் புறம்போக்கு நிலம் ஒதுக்கித் தர வேண்டும். அந்தக் கோப்பு வருவாய்த் துறையிலே இருக்கிறது. இது நான்காவது ஆளுநர் உரை; நான்காவது பட்ஜெட். அடுத்த ஆண்டு வருவது ஐந்தாவது ஆளுநர் உரை; ஐந்தாவது பட்ஜெட்.

அதற்கடுத்து தேர்தல் வந்துவிடும். எனவே, இந்த ஆண்டிலாவது அந்த சர்க்கரை ஆலையைத் தொடங்குகின்ற விதத்திலே இட ஒதுக்கீடு தந்து புதுக்கோட்டை மாவட்டத்திலே அந்தச் சர்க்கரை ஆலையைத் தொடங்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, புதுக்கோட்டை மாவட்டத்திலே அறந்தாங்கி Sub-Division தான். அங்கே Sub-Court ஒன்றும், அதற்கு புதிய கட்டடமும் கட்டுவதற்கான கோப்புகள் இங்கே அனுப்பப்பட்டுள்ளன. அவற்றின் மீதும் அரசு பரிவோடு கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்திலே ஆலங்குடி தொகுதி என்பது பெரிய தொகுதியாக இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டிலே பல தாலுகாக்களை புதிதாக நீங்கள் தந்திருக்கிறீர்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே, குளத்தூர் தொகுதியிலே எல்லாம் தந்திருக்கிறீர்கள். ஆலங்குடி தாலுகா என்பது ஒரே தாலுகாவாக இருக்கிறது. அதற்காக முதல்வர் அவர்களைச் சந்திக்க வருகின்றபோது, புதுக்கோட்டை மன்னருடைய மைத்துனர், அவர் 10 ஆண்டுகள் Chairman-ஆக இருந்தவர், பல்லவராயன் என்று பெயர், மாண்புமிகு முதலமைச்சருக்குக்கூடத் தெரியும். அவர் வருகிறபோது உளுந்தூர்பேட்டை பக்கத்திலே ஒரு கார் விபத்திலே சிக்கி மரணம் அடைந்தார். எல்லா கட்சிகளின் சார்பிலேயும் - தி.மு.க.-விலிருந்து - இரங்கல் கூட்டம் நடந்தது. அவர் எதற்காக வந்தார் என்றால், அந்த கரம்பக்குடியைத் தனித் தாலுகாவாக ஆக்க வேண்டும் என்பதற்காகத்தான் சர்வ கட்சி குழுவோடு வந்து இடையிலேயே விபத்திலே சிக்கி மரணம் அடைந்தார். எனவே, எல்லாக் கட்சிகளின் சார்பிலேயும் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றோம். முதலமைச்சருக்கும் அவர் தெரிந்தவர்தான். நண்பர். எனவே, எல்லோருடைய கோரிக்கையையும் ஏற்று இந்த கரம்பக்குடியை தனித் தாலுகாவாக ஆக்கித்தர வேண்டும். பெரிய தாலுகாவை பிரித்து புதுத் தாலுகா, கரம்பக்குடியை தலைநகராகக் கொண்டு ஆக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, புதுக்கோட்டை மாவட்டம் மானாவாரி மாவட்டம். மழையை நம்பி விவசாயம் நடக்கிற மாவட்டம். இந்த மாவட்டத்திலே காவிரியிலே வருகிற உபரி நீரை கொள்ளிடத்திலேயிருந்து பிரித்து



புதுக்கோட்டை மாவட்டத்திற்குக் கொண்டு செல்வதற்கு, எல்லா தொகுதிகளும் பயன்படுத்துவதற்கான திட்டம் ஒன்று, ஏறக்குறைய 125 கோடி ரூபாயிலே பொதுப்பணித் துறையிலே அதிகாரிகளாலே அனுப்பப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 12-40*

இந்தத் திட்டத்தை, தஞ்சை மாவட்டத்திலே ஏறக்குறைய பல ஆண்டுகளுக்குப் பின்னாலே தூர் வாரி மிகச் சிறந்த பணியினை ஆற்றியிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பக்கத்து வறட்சி மாவட்டமான புதுக்கோட்டை மாவட்டத்திலே இந்த உபரி நீரை — மழை, வெள்ளக் காலத்திலே அதிகமான தண்ணீர் வருகிறபோதுதான் அங்கே போகம் போகிறது — பல இலட்சம் ஏக்கர் பயிரிடுவதற்கு வசதியாக இந்தக் காவிரி உபரி நீர்த் திட்டத்தை, கொள்ளிடத்திலிருந்து புதுக்கோட்டை மாவட்டத்திற்குக் கொண்டு செல்லும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதுபோல, உங்களுக்குத் தெரியும், வெளியே உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், போராட்டம், மறியல் இப்படியெல்லாம் சில காரியங்கள் நடக்கின்றன. நாங்கள் எதிர்க்கட்சியிலே இருக்கிற காரணத்தினாலே எங்களை வந்து கூப்பிடுகிறார்கள், நாங்களும் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கே செல்கிறபோது அங்கேயும்கூட நாங்கள் சொல்வது உண்டு. என்ன சொல்கிறோம் என்றால், 'நிச்சயமாக கடந்த 5 ஆண்டுகளில் நடைபெற்ற ஆட்சியைவிட நல்ல ஆட்சி இப்போது நடைபெறுகிறது' என்பதிலே எந்தச் சந்தேகமும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் — இங்கே நீங்கள் இருப்பதனால் மட்டும் அல்ல, நாங்கள் வெளியிலேயும் சொல்வது உண்டு — அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போகப்பட்டு, அது நியாயம் என்று தெரிந்தால் அது நிச்சயமாக யார் சொன்னாலும் முதலமைச்சர் அவர்கள் செய்து தருவார்கள். அதிலே எந்தவிதமான சந்தேகமும் கிடையாது என்று நாங்கள் சொல்வதுண்டு. இதனை அங்கேயும் நாங்கள் அவர்களிடத்திலே சொல்கிறோம். அவர்களும்கூட, இவையெல்லாம் உங்களுடைய கவனத்திற்கு வர வேண்டும் என்பதற்காகத்தான் போராட்டங்களை நடத்துகிறார்களே தவிர, வேறொன்றும் அல்ல. இந்த அரசுக்கு எதிராக அல்ல.

இன்னும்கூட, மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் கோபித்துக் கொள்ளக் கூடாது, அல்லது வருத்தப்படக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காட்டுகிற வேகத்தை மற்ற அமைச்சர்களும் காட்ட வேண்டும். சிலபேர் வேகமாகத்தான் இருக்கிறீர்கள். இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், இந்த 76 வயதிலும்கூட, 2 நாட்கள் சுற்றுப்பயணம் சென்றுவிட்டுவந்து காலையிலே 10 மணிக்கு அலுவலகத்திலே வந்து உட்காருகிறார். சில அதிகாரிகள் எல்லாம், ஞாயிற்றுக்கிழமைகளிலும் வருகிறார், காலையிலேயும் வருகிறார், மாலையிலேயும் வருகிறார் என்று சொல்லக் கூடிய அளவிற்கு முதலமைச்சர் அவர்கள் பணியாற்றுகிறபோது மற்ற அமைச்சர்களும் அந்தந்தத் துறைகளின் சார்பிலே பிரச்சினைகள் வருகிறபோது சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, அந்த வகையிலே முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு சிலவற்றை நான் கொண்டுவர விரும்புகிறேன்.

ஒன்று, தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்கள் 15,000 பேர் சமீபகாலத்திலே போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் என்ன பிரச்சினையைச் சொல்கிறார்கள் என்று சொன்னால், ஏற்கெனவே, U.G.C. என்கிற மத்திய குழுவின் ஆணையின்படி, மத்திய அரசு போட்ட உத்தரவின்படி 300 கோடி ரூபாய் அளவுக்கு மாநில அரசு அவர்களுக்குப் பாக்கி தரவேண்டும் என்றால், 1996 ஆம் ஆண்டிலேயிருந்து, அதிலே மூன்றில் இரண்டு பங்கு மத்திய அரசே தந்து விடுகிறது. அதுவும் முன்கூட்டியே தந்து விடுகிறது. முன்பெல்லாம் கொடுத்த பிறகு, ஆண்டுக் கணக்கிலே திருப்பித் தருவார்களாம். ஆனால், இப்போது முன்கூட்டியே தர உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதிலே மீதமுள்ள ஒரு பகுதிதான், ஏறக்குறைய 90 கோடி, 100 கோடி ரூபாய் தான் மாநில அரசுக்குச் செலவாகும் என்றும், அதுகூட அவர்களுக்குத் தருகிற இந்த 300 கோடி ரூபாய் இருக்கிறதே, அதுவும் அவர்கள் வருமான வரியாகத் திருப்பிக் கொடுக்கிறபோது இந்த மாநில அரசு தருகிற பணம் அப்படியே மீண்டும் மாநில அரசுக்குத் திருப்பிக் கிடைத்துவிடும். எனவே, monetary aspect-லே எந்தவிதமான நஷ்டமும் மாநில அரசுக்கு வராது. இதை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்றுதான் இந்த உண்ணாவிரதம் நடந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதித் துறையினுடைய



அதிகாரிகளை அழைத்துப் பேசி, இது உண்மைதானா? மாநில அரசுக்கு இதனாலே எந்தவிதமான பொருளாதார நஷ்டமும் ஏற்படாதா என்பதைத் தெரிந்துகொண்டு, இதற்கு உரிய நடவடிக்கை எடுத்து, ஆணை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் சார்பிலே அவர்களும் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் எல்லாம் நடத்தி, கைது செய்யப்பட்டு பின்னாலே விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்களுக்கும் ஊதியத்திலே வேறுபாடு இருக்கிறது. அவர்கள் மத்திய அரசுப் பணியிலே சேருகிறபோது அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 8,000 ரூபாயிலே ஆரம்பிக்கிறது. ஆனால், இங்கே 6,000 ரூபாயிலே ஆரம்பிக்கிறது என்று சொல்லி சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவர்களையும் பொதுப்பணித் துறை அமைச்சர் அழைத்துப் பேசி — பொறியாளர்கள் எல்லா துறைகளிலும் இருக்கிறார்கள், அரசுத் துறைகள், Corporation-கள், இப்படி எல்லா துறைகளிலும் இருக்கிறார்கள் — அவர்களை எல்லாம் அழைத்துப் பேசி அவர்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, ஒரு பழைய பிரச்சினை. இன்று நான் இங்கே வரவிருக்கும்போதுகூட. 70, 80 பேர் வந்திருந்தார்கள். அவர்களைப் பார்ப்பதற்குப பாவமாக இருந்தது. ஏற்கெனவே நாங்களெல்லாம் இங்கே பேசியிருக்கிறோம், 1994 ஆம் ஆண்டிலே காவல துறை உதவி ஆய்வாளர் பணியிடங்களுக்கு எடுக்கப்பட்டு—முதலமைச்சர் அவர்கள்கூட, நான் கனிவோடு பார்க்கிறேன் என்று சொன்னார்கள் — என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, 74 நபர்கள். அவர்கள் தேர்வு செய்யப்பட்டதற்குப் பின்னாலேயும் நியமன ஆணை வழங்கப்படாமல் இன்னும் சுற்றிக்கொண்டே இருக்கிறார்கள். ஒன்று, கிடைக்கும் அல்லது கிடைக்காது அல்லது நடக்கும் அல்லது நடக்காது என்று சொல்லிவிடலாம். இதிலே ஏன் சுணக்கம்? ஏன் காலதாமதம்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சட்டமன்றத்தில் அறிவித்தற்குப் பின்னாலும் ஏன் நடக்கவில்லை என்பதைக் கேட்டறிந்து, 'இல்லப்பா, வேலை இல்லை, நீங்கள் போய் வேறு வேலையைப் பாருங்கள்' என்று சொல்லி அனுப்பிவிடலாம். சட்டமன்றம் கூடுகிறபோது எல்லாம் அவர்கள் போராட வேண்டிய அவசியமோ அல்லது உறுப்பினர்களைப் பார்த்துக் கொண்டே திரியவேண்டியதோ இல்லை.

பிற்பகல் 12-45

அதைப்போலவே College Students Graduate Association-லேயிருந்து பார்வையற்றோர் சங்கங்களின் சார்பிலே வந்தார்கள். சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களேகூட அவர்களோடு பேசியிருக்கிறார்கள். அவர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பார்வையற்றவர்கள், பாவம் அனாதைகள், அவர்களை கைது செய்து உள்ளே போட்டு பிரயோசனம் கிடையாது. அவர்கள் சின்னச் சின்னப் பிரச்சினைகள், கோரிக்கைகளைத்தான் வைக்கிறார்கள். (குறுக்கீடு) ஆமாம், விட்டுவிட்டார்கள். கைது செய்து பின்பு வெளியே விட்டுவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர், அவர்கள் பின்பு அழைத்துப் பேசுகிறேன் என்று அளித்த உத்தரவாதத்தின் பேரிலே போராட்டத்தை நிறுத்திவைத்திருப்பதாகவும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இப்போது இல்லையென்றாலும், சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பின்னாலே அவர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாடு மக்கள் நலப் பணியாளர்கள். இந்த ஆட்சியிலே ஏற்கெனவே எடுக்கப்பட்டு, அதற்குப் பின்னாலே 5 ஆண்டுகாலம் நிறுத்திவைக்கப்பட்டு இப்போது அவர்கள் மீண்டும் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய சம்பளம் வெறும் 500 ரூபாய்தான். மாதத்திற்குச் சம்பளம் 500 ரூபாய்தான். அந்தச் சம்பளத்தை அதிகரித்துத் தர வேண்டும் என்ற அவர்களுடைய கோரிக்கையை நிச்சயமாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களை நிரந்தரப்படுத்துவது வேறு விஷயம். அவர்களை நிரந்தரமும் செய்யலாம். இல்லையென்றாலும்கூட, தற்போதைக்கு அவர்களுடைய சம்பளத்தைக் கொஞ்சம் அதிகரித்துத் தரலாம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலே பணிபுரிகிற தொழில்நுட்ப உதவியாளர்கள். அவர்களுடைய பிரச்சினைகளையும் அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கபெற்றது) ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். மேயர் அவர்களுடைய கவனத்திற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்



கவனத்திற்கும் கொண்டு வர விரும்புவது, சென்னையிலே North Madras-லே 10,000 பேர் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் என்று வண்டிக்காரர்கள் எல்லாம் சேர்ந்து நடத்துகிறார்கள். அவர்களால் சில இடைஞ்சல்கள் இருப்பது உண்மைதான்; இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், உடனடியாக ஓர் உத்தரவின் மூலமாக எல்லாவற்றையும் அகற்ற முயற்சி செய்கின்றபோது, அதனாலே அதை நம்பியிருப்பவர்கள் மத்தியிலே கஷ்டம் வருகிறது. இதிலே என்ன செய்யலாம் என்றால், இனிமேல் புதியதாக மாட்டு வண்டி வராமலோ அல்லது அவர்களுக்கு என்று ஒரு area-வை ஒதுக்கியோ, இல்லையென்றால் இந்தந்தப் பகுதிகளிலே போகக்கூடாது என்று சொல்லியோ அல்லது இந்த நேரத்திலேதான் போகலாம் என்று உத்தரவிட்டோ, இப்படி regulate பண்ணி கொஞ்சம் கொஞ்சமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சி செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். 26 ஆம் தேதிக்குப் பிறகு மாடுகளை எல்லாம் பிடித்துக்கொண்டு போவார்கள் என்று சொல்கிறார்கள். அங்கே பார்த்தீர்கள் என்றால், 10,000 15,000 பேர் இருப்பார்கள். S.B. C.I.D.-யிலேயிருந்து சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். இது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்குமென்று நினைக்கிறேன். அவர்கள் இதையே நம்பிப் பிழைத்துக் கொண்டிருப்பவர்கள். இது தீர்வுகாணப்படவேண்டிய ஒன்றுதான். இருந்தாலும், அவர்களுடைய குடும்பத்தாரைப் பாதிக்காத வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மேயர் அவர்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பு விலையைப் பொறுத்தவரையிலே, ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் தருகிறேன் என்று சொன்னது உண்மைதான். ஆனால், ஐந்து ஆண்டுகளில் தருகிறேன் என்று சொன்னதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அடுத்த ஆண்டோடு ஐந்தாவது ஆண்டு வரப்போகிறது. எனவே, இந்த ஆண்டே, அந்த ஆயிரம் ரூபாய்க்கும் இப்போது இருப்பதற்கும் இடையிலே ஒரு தொகையைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் ஆயிரம் ரூபாய் கேட்கிறார்கள். இல்லையென்றாலும், அடுத்த ஆண்டு ஆயிரம் ரூபாயை எட்டும் விதத்திலே இந்த ஆண்டே ஓரளவிற்கு உயர்த்தி அவர்களுடைய பிரச்சினைக்கும் தீர்வுகாண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கரூர், திருச்சி மாவட்டங்களிலே சிலந்தி நோயால் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று பல பேர் தொலைபேசி மூலமாகவும் மனுக்கள் மூலமாகவும் எனக்குத் தகவல் தந்திருக்கிறார்கள். அதனாலே தேங்காய் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இதுகுறித்தும் அரசு விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன். ஆளுநர் உரையின் மீது இரண்டு நிமிடங்கள் பேசிவிடுகிறேன்.

வரும் இரண்டு ஆண்டுகளிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே வேண்டி விரும்பித தெரிவிக்க விரும்புவது, பட்ஜெட் வருகிறபோது இரண்டு விஷயங்களிலே நீங்கள் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். தேர்தலுக்கு முன்னாலே இதிலே கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்று, கிராமப்புறங்களிலே இருக்கிற, பஞ்சாயத்துகளிலே இருக்கிற சாலைகள். 13,000 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்திலேயும் 5,6 கிராமங்கள் இருக்கும். அந்தக் கிராமங்களுக்கு இணைப்புச் சாலை இல்லாமல் - சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் ஆனதற்குப் பின்னாலேயும் - இருக்கிறது. இன்னமும், ஒரு கிராமத்திலேயிருந்து பக்கத்துக் கிராமத்திற்குப் போக முடியாமல் வண்டிப்பாதை இல்லாமல் பல கிராமங்கள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன. இன்னும் இரண்டு ஆண்டுகள் கழித்து தேர்தல் வருகின்றபோது பிரச்சினை வரும். சென்றமுறையே பல இடங்களிலே பிரச்சினை வந்தது. நேற்றுகூட, பல பேர் சொன்னார்கள். ஆளுங்கட்சியிலே இருக்கிற பல நண்பர்களுக்குக்கூடத் தெரியும், ஊர்களுக்குப் போகும்போது, அடுத்த தேர்தல் வந்தால், இந்தக் கட்சிக்கு என்று இல்லை, எந்தக் கட்சிக்கும், யாருக்கும் ஓட்டு போட நாங்கள் தயாராக இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்குக் கிராமங்களிலே தேர்தலைப் புறக்கணிக்கக்கூடிய அளவிற்கு, பிரச்சினை இருக்கிறது. தேர்தல் நேரங்களிலே notice அச்சடித்து ஒட்டுவது, தேர்தலைப் புறக்கணிக்கிறோம் என்று சொல்லும் நிலை ஆகியவை இருக்கின்றன. அதிலே என்ன பிரச்சினை என்று சொன்னால், பஞ்சாயத்து யூனியன் fund-லேயிருந்து road போடும்போது, அதிலே என்ன செய்கிறோம் என்றால், metal road, gravel road போடுவதற்குத்தான் அனுமதி இருக்கிறது. அல்லது புதியதாக ரோடு formation என்று சொன்னால், மண் சாலையிலேயிருந்து ஆரம்பித்தீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். metal வரைக்கும் போய் தார்ச் சாலை வரைக்கும் நிறுத்தினால்தான் அனுமதி கொடுக்கிறார்கள். புதியதாக . . .



**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தமாதிரி ஏற்கெனவே, தார்ச்சாலை போடக்கூடாது என்று ஓர் உத்தரவு இருந்தது உண்மை. ஆனால், நம்முடைய ஆட்சி வந்த பிறகு அந்த உத்தரவை இரத்து செய்து இப்போது தார்ச் சாலை போடலாம் என்று உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இதைத்தான் நானும் சொல்கிறேன்; தார்ச் சாலை போடலாம் என்று உத்தரவு இருக்கிறது என்று. ஆனால், நான் மண் சாலை போடச் சொல்கிறேன்; gravel road போடச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தார்ச் சாலையே போடலாம் என்று சொல்லும்போது மண் சாலை போடக்கூடாது என்று சொல்வதற்கு வழியே இல்லை. formation செய்ய வேண்டும் என்றால் நீங்கள் மண்ணிலேதான் செய்ய முடியும். அதற்குப் பிறகு இரண்டு layer, ஒரு layer என்று போட்டு, அது strengthen-ஆன பிறகு தாரும் போடலாம் என்றுதான் உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-50

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது, மண் சாலை என்றால், ஒரு கிலோமீட்டருக்கு 50,000 ரூபாய் வரை ஆகும். மண் road plus gravel என்றால் 80,000 ரூபாய் ஆகும். இதுவே metal போட்டு, தார் போட்டீர்கள் என்றால் பஞ்சாயத்து யூனியனிலிருந்து போடுவது ஏறக்குறைய ரூபாய் 3 இலட்சத்து 30 ஆயிரமோ, என்னவோ estimate போடுகிறார்கள். இதே NABARD-லேயிருந்து போடுகிறார்கள் இல்லையா, இப்போது 750 கிலோமீட்டர் எடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஏழரை இலட்சம் ரூபாய், எட்டு இலட்சம் ரூபாய் ஆகிறது அதிலே. எனவே, இதிலே நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், நீங்கள் போட்டிருக்கிற உத்தரவு என்னவென்றால், புதிதாக மண் road, gravel road இருந்தாலே சில கிராமங்களுக்குப் போகும். வண்டிப் பாதையே இல்லாமல், நடக்க முடியாமல் இருக்கிற ஊரிலே மண் road-ஐப் போட்டு இரண்டு கிலோமீட்டர், ஒரு கிலோமீட்டர் gravel வரைக்கும் நிறுத்தலாம். என்ன உத்தரவு இருக்கிறது என்றால், போட்டால் metal வரைக்கும் போய், தார் வரைக்கும் போக வேண்டுமென்றுதான் இருக்கிறது. gravel-லோடு நிறுத்த முடியாது என்று இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மறுபடியும் சொல்லிக்கொள்ளுகிறேன். தார்ச் சாலைதான் போட வேண்டும், மண் சாலை போடக்கூடாது என்று அந்த உத்தரவில் இல்லை. மண் சாலை போடுகிற சூழ்நிலை இருந்தால் போடலாம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய புதிய அரசாங்கம் என்ன உத்தரவு போட்டிருக்கிறது என்று சொன்னால் ஏற்கெனவே Metal Road-ஆக இருப்பதைத் தார் road ஆகப் போட வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆனால், பழைய அரசாங்கத்தில் metal போடாமலே bill வாங்கி விட்டதாலே road metal-ம் கிடையாது; gravel-ம் கிடையாது. அதிலே போய்த் தார் போடப் போகிறார்கள். இதுதான் இப்பொழுது பிரச்சினை. அதைத்தான் நம்முடைய மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதுமாதிரியான சாலைகள் போடுகிற சூழ்நிலை வந்து யாராவது போட ஆரம்பித்தால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக நடவடிக்கையெடுத்து இரத்து செய்து, உரியவர்களின்மீது நடவடிக்கையெடுக்கப்படும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நேற்றைக்குக்கூட, உங்களுக்கும் தெரிந்தவர், நீங்கள் யூனியனிலே கேளுங்கள், ஆவுடையார் கோவில் Chairman துரைமாணிக்கம் வந்திருந்தார். அவர்கிட்டே பேசினேன். உங்களுக்கும் வேண்டியவர். எனக்கும் வேண்டியவர். என்னுடைய தொகுதி இல்லை. அவரே இதுமாதிரிதான் உத்தரவு இருக்கிறது, இதனாலே பஞ்சாயத்து சாலையே நாங்கள் போட முடியவில்லை என்கிறார். பஞ்சாயத்து சாலை பஞ்சாயத்து யூனியனிலே போட முடியாத சூழ்நிலை இருக்கிறது. metal gravel . . . .

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, காலை 8 மணிக்கு அவருடன் நான் பேசிக்கொண்டு தான் இருந்தேன். அவர் சாலை போடுவதற்கு அதிகமாக நிதி வேண்டுமென்று கேட்டாரே தவிர, இப்படி விதிகளை மாற்றிக் கொடுங்கள் என்று என்னிடத்தில் கேட்கவேயில்லை.



**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இல்லை. இதிலே பெரிய பிரச்சினை இருக்கிறது மாதிரி ஒன்றும் இல்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், நடைமுறையிலே இருக்கின்ற சிக்கலைச் சொல்லுகின்றேன். நீங்கள் யூனியனிலே கேளுங்கள். இருந்தால் மாற்றிப் போடுங்கள், அவ்வளவுதான். எனக்குத் தெரிந்தவரைக்கும் (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிஷத்திலே பேசி முடித்து விடுகிறேன். ஏனென்றால், அந்தக் கிராம மட்டத்திலே, பஞ்சாயத்துக்களில் நமக்குச் சில திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று வைத்துக் கொள்ளுங்கள், நல்ல திட்டம். என்னுடைய வேண்டுகோள், முதலமைச்சரவர்களிடத்தில் என்ன கேட்டுக்கொள்கிறேன் என்றால், முன்பு செய்யவில்லை, நீங்கள் செய்திருக்கிறீர்கள், செய்ததால்தான் திருப்பித் திருப்பிக் கேட்கிறோம், அது வேறே விஷயம். இருந்தாலும்கூட, தொகுதிக்கு ஒரு இடம் என்கிறபோது என்ன ஆயிற்று என்றால், இரண்டு வருடங்களிலே ஏறக்குறைய 400 பஞ்சாயத்துக்களிலேதான் அது நடக்கிறது. 13 ஆயிரம் பஞ்சாயத்துக்களிலேயும் இப்பொழுது இந்த நிலையிலேயே தன்னிறைவுத் திட்டம் - அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தமிழ்நாடு பூராவும் வர வேண்டுமென்று வைத்துக்கொள்ளுங்கள், ஏறக்குறைய 60 வருடங்கள் ஆகும். என்னுடைய வேண்டுகோள், ஓர் ஒன்றியத்திற்கு ஒரு பஞ்சாயத்து. பல கோடி ரூபாய்கூட நீங்கள் செலவு செய்ய வேண்டாமென்று நான் சொல்லுவேன். ஒரு பஞ்சாயத்திலே போய் 1 கோடி, 1½ கோடி செலவு பண்ணுவதற்குப் பதிலாக அடிப்படை தேவைகள், சாலை, குடிதண்ணீர் வசதி, பள்ளிக் கட்டடம் இதுமாதிரி அங்கே என்ன வேண்டுமோ ஒரு கிராமத்திற்கு வேண்டிய குறைந்த தேவைகளைச் செய்தால்கூடப் போதும். அங்கே போய் 2 கோடி, 3 கோடி என்று ஒரே பஞ்சாயத்திலே பண்ணுவதற்குப் பதிலாக restrict பண்ணிக்கொள்ளுங்கள் என்கிறேன். Number of Panchayat-களை அதிகப்படுத்துங்கள் தயவு செய்து. நான் என்ன கேட்கிறேன் என்றால், ஒரு யூனியனுக்கு ஓர் இடத்திலே, ஒரு தொகுதிக்கு ஓர் இடம் என்பதற்குப் பதிலாக ஓர் ஒன்றியத்தில் ஓரிடத்திலே செய்வது மாதிரி நீங்கள் எடுத்துச் செய்ய வேண்டும். அதன் மூலமாகப் பணி . . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதிக நேரம் எடுத்துக் கொண்டு விட்டீர்கள், சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** சில விஷயங்கள். இரண்டு நிமிடங்களிலே முடித்து விடுகிறேன். ஏனென்றால், M.L.A. இருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு தொகுதியிலே, ஒரு பஞ்சாயத்திலே நடக்கிற வேலையைப் போய்த் தொகுதி பூரா. அண்ணா மறுமலர்ச்சி, அண்ணா மறுமலர்ச்சி என்று பேசிக்கொண்டு வந்தால் அவர்கள், 'என்னய்யா, எங்கேயோ ஓர் ஊரில் நடக்கின்றதை ஊர் ஊராகச் சொல்லிக்கொண்டிருக்கிறாய்' என்று சொல்லுவார்கள். அதுலே நான்கைந்து இடங்களிலே நடந்தது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த 'impact' அந்தத் தொகுதியிலேயிருக்கும் அந்த மக்கள் மத்தியிலே இருக்கும் அதனால் ஓர் ஒன்றியத்திற்கு ஒன்று என்று செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. இந்த நமக்கு நாமே திட்டம் இருக்கிறது அல்லவா? அது பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது என்று நீங்கள் போட்டிருக்கிறீர்கள். உண்மையிலேயே அப்படிக் கிடையாது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. எல்லா ஊர்களுக்கும் கேட்கிறார்கள். இந்த நமக்கு நாமே திட்டம் இருக்கிறது அல்லவா. நீங்களே பார்த்தீர்கள் என்றால் இரண்டு வருடங்களிலே ஏறக்குறைய 42 கோடிதான் ஆகியிருக்கிறது. அப்படியென்றால் வருடத்திற்கு 21 கோடி. மொத்தம் ஏழாயிரம் வேலைகள்தான் நடந்திருக்கின்றன. ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு வேலை நடந்தால்கூட இரண்டு வருடங்களிலேயும் ஏறக்குறைய 26 ஆயிரம், 27 ஆயிரம் இடங்களிலே வேலைகள் நடந்திருக்க வேண்டும். ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு இடத்திலே வேலை நடந்தால்கூட 13 ஆயிரம் பஞ்சாயத்துக்களுக்கும் 2 வருடங்களிலே பார்த்தீர்கள் என்றால் 27 ஆயிரம் இடங்களிலே வேலை நடந்திருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் அறிவித்தது, மக்களுக்கும் இந்தப் பணியில் தொடர்பு இருக்க வேண்டும்; அவர்களும் அதைப் பாதுகாப்பாகக் கண்காணிப்பார்கள் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டது. எங்கே நிதி வசதி செய்து கொடுக்கிறார்களோ அங்கே செய்ய வேண்டுமென்று உத்தரவு இருக்கிறது. அதன் அடிப்படையில் எங்கெங்கே அப்படியெல்லாம் கிடைக்கிறதோ அதைச் செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இதற்காகத் தனியாக ஓர் ஆய்வு நடத்தி எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தலைமைச்



செயலாளரிடத்திலேயிருந்து கடிதம் எழுதப்பட்டு, எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் சந்தித்து, நாங்கள் இதுவரை ஏறத்தாழ 18 மாவட்ட ஆட்சித் தலைவர்களைச் சந்தித்து, இதற்காகத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்வதற்கான வாய்ப்புகளை அவர்கள் தேடித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அநேகமாக இந்தச் சட்டமன்றக் கூட்டம் முடிந்த பிறகுகூட இன்னும் எட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களை நேரடியாகச் சந்தித்து, ஆய்வு நடத்தி அதை அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

பிற்பகல் 12-55

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நான் சொல்ல வந்தது அதுதான். இந்த இரண்டு வருடத்தில் பார்த்தால் 42 கோடி ரூபாய்தான் செலவாகியிருக்கிறது. வருடத்திற்கு 21 கோடி ரூபாய். வருடத்திற்கு 3000 இடத்தில்தான் திட்டம் செயல்பட்டிருக்கிறது. 'நமக்கு நாமே' திட்டத்தில் என்ன பண்ணுகிறார்கள் என்றால் சாலைதான் போடுகிறார்கள். பெரிய வேலை ஒன்றும் பார்க்க முடியாது. ஜனங்களுடைய மனோபாவம் எப்படியிருக்கிறது என்றால், அவர்கள் பணம் செலவு செய்யவோ உடல் உழைப்பை அளிக்கவோ கிராமங்களில் தயாராக இல்லை. இதற்கு என்ன செய்ய வேண்டும் என்றால், அரசு இதற்குச் செலவு செய்யும் தொகையை அதிகரிக்கலாம். அதன் மூலமாக மக்கள் போடுகின்ற பணத்தின் அளவைக் குறைக்கச் செய்யலாம். இரண்டாவது, இதை ஒரு இயக்கமாக மாற்றி, கிராமங்களில் அறிமுகப்படுத்தச் செய்யலாம். அதில் ஒன்றும் தப்பு கிடையாது. ஏனென்றால், இதற்கு பெரிய அளவில் வரவேற்பு கிடையாது என்பதால் இதைச் சொல்ல வந்தேன். நாம் போய்ப் பார்த்தால், 3,000 அல்லது 4,000 இடங்களில்தான் இந்த வேலைகள் நடக்கின்றன. மக்கள் யாரும் பணம் கட்ட முன்வரவில்லை. நாங்கள் கொஞ்சம் போடுகிறோம், அரசாங்கம் பாக்கியைப் போட்டுச் செய்யுங்கள் என்று யாரும் சொல்லவோ, அதன் காரணமாக வேலை நடப்பதோ இல்லை. அப்படிப் பணிகள் நடைபெறவில்லை என்பதை நீங்கள் கவனத்தில் கொண்டு, இந்த 'நமக்கு நாமே' திட்டத்தை எப்படி முன்னேற்றம் அடையச் செய்வது என்பதையும், மக்களுடைய ஈடுபாட்டையும், முதலீட்டையும் இதிலே அதிகரிக்கிற வகையில் அதை எப்படி அதிகப்படுத்தலாம் என்பதையும் கவனத்தில் கொண்டு அரசு அதற்காக முயற்சிக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில் நான் முதலமைச்சரைக் கேட்டுக்கொள்வது எல்லாம், தயவுசெய்து வருகின்ற நிதிநிலை அறிக்கையிலாவது பரீட்சார்த்தமாக 100 கோடி ரூபாயில் 'சுயவேலைவாய்ப்புத் திட்டத்திற்கான நிதி உதவிக் கழகம்' என்ற பெயரில் ஒரு கழகத்தை ஆரம்பித்துச் செயல்படவேண்டும். ஏற்கெனவே இருக்கிறது. 'TIIC' நிறுவனம் மூலம் செயல்படுகிறது. அதுபோல, ஒவ்வொரு நிறுவனத்திலும் இருக்கிறது. இதையெல்லாம் ஒன்றாக்கி, ஒரேயொரு Corporation மூலமாகச் செய்யலாம். ஏனென்றால், வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக 40 லட்சம், 30 லட்சம் என்று ஏராளமானவர்கள் வேலைவாய்ப்புக்காகப் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம் மட்டுமல்ல, எந்த அரசாங்கம் வந்தாலும் இவர்களுக்கு எல்லாம் வேலை கொடுக்கவே முடியாது. பல பேர் வேலை கிடைக்காமலேயே ஓய்வு பெறுகின்ற வயதைக் கூட அடைந்துவிட்டார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்றால், சுயவேலைவாய்ப்பை அதிகமாக உருவாக்குவதன்மூலம்தான் முடியும். அதில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். அவரவர்களுக்கு என்ன தொழில் தெரியுமோ அதற்கு அரசாங்கமே சான்று அளித்து, அதாவது, சைக்கிள் கடை வைப்பது, பெட்டிக் கடை வைப்பது என்பதுபோல அவர்களுக்கு என்ன தெரியுமோ அதில் அவர்களை ஈடுபடுத்தலாம். அதற்கான சான்றிதழை அவர்களுக்குக் கொடுக்கலாம். அதில் சிலர் வெற்றி பெறலாம், சிலர் தோல்வியுறலாம். இருந்தாலும், பரீட்சார்த்தமாக ரூ.100 கோடி இல்லையென்றால், 50 கோடி ரூபாயிலாவது ஒரு Corporation-ஐ ஆரம்பித்து, அதில் 2, 3 I.A.S. அதிகாரிகளை நியமனம் செய்து பாருங்கள். நிச்சயமாக அது வெற்றி பெறும். ஒரு ஆண்டுக்கு 3 லட்சம், 4 லட்சம், 5 லட்சம் பேருக்கு வேலை கிடைத்தாலும் கூட, நான்கைந்து ஆண்டுகளில் பெரும்பாலான இளைஞர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ம. சண்முகம். (குறுக்கீடு) அதிக நேரம் எடுத்துக் கொண்டு விட்டீர்கள். இன்னும் ஏழெட்டு பேர் பேசவேண்டும். (குறுக்கீடு) சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** முக்கியமான பிரச்சினை. நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டது, ஆட்சியைக் கலைக்கவேண்டும் என்று மீண்டும் இப்போது சொல்கிறார்கள். மத்தியில் இருக்கிற அரசாங்கம் கடந்த ஓராண்டில் என்ன செய்திருக்கிறது என்பதைப்



பார்க்க வேண்டும். (குறுக்கீடு) இதையும் ஆளுநர் உரையில் தெரிவிக்க வேண்டும். இது இந்த அரசாங்கத்தின் உரையாக இருந்தாலும், ஆளுநர் மூலமாக வாசிக்கப்பட்டிருக்கின்ற உரை. ஆளுநர் மத்திய அரசின் பிரதிநிதி. ஆகவேதான், நான் அன்றைக்குக் கூட வெளிநடப்புச் செய்தேன். கேரளாவில் விலைவாசி உயர்வு அண்மையில் ஏற்பட்டபோது, சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தைப் போட்டார்கள். இங்கேகூட நாம் இந்த விலைவாசி உயர்வைக் கண்டித்து நமது சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றலாம் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு வந்ததற்குப் பின்னாலே அத்தியாவசியப் பண்டங்களின் விலை உயர்வு, சிறுபான்மை மக்கள் படுகொலை, கிறிஸ்தவ மக்கள் படுகொலையிலிருந்து நீதித்துறை படுகொலையிலிருந்து, வரிசையாக புதிய மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொண்டபின்னாலே மக்கள் விரோத ஆட்சியாக அந்த அரசு செயல்பட்டு வருகிறது. அந்த அரசாங்கத்தை மிரட்டிக் கொண்டு காரியங்களைச் செய்துகொண்டிருக்கின்ற சில பேர், இங்கேயிருக்கிற அக்கா தங்கச்சி போதாது என்று இன்னொரு தங்கச்சி கல்கத்தாவிலிருந்து வந்து பேசியிருக்கிறார்கள். மேற்கு வங்கத்திலிருந்து மதுரைக்கு வந்த அந்த அம்மா, முதல் நாள் மதுரையில் நிருபர்களிடம் பேட்டி கொடுக்கிறபோது, நான் இப்போதுதான் வந்திருக்கிறேன், எனக்குத் தமிழ்நாட்டைப்பற்றி எதுவும் தெரியாது என்று சொல்கிறார். தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமை பற்றித் தெரியாது என்கிறார். அடுத்த நாள், அக்கா வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்ட உடனே, அதற்குப் பிறகு பத்திரிகையாளர்கள் கேட்கிறார்கள், எப்படியிருக்கிறது என்று. இல்லையில்லை, அக்கா சொல்வது சரிதான், கலைத்துவிடவேண்டியதுதான் என்று சொல்லக்கூடிய அளவுக்கு தமிழ்நாட்டின் கிழக்கு மேற்கோ, தமிழ்நாட்டின் சீதோஷ்ண நிலையோ, அல்லது தமிழ்நாட்டின் மக்களுடைய பிரச்சினையோ இப்படி எதுவும் தெரியாத நிலையில் இப்படி ஒரு பேட்டியைக் கொடுத்திருக்கிறார். அந்த அம்மாவுக்கு மேற்கு வங்கத்தின் பிரச்சினையே சரியாகத் தெரியுமோ தெரியாதோ என்ற நிலையில், இங்கே வந்து இப்போது அந்த அம்மா ஆரம்பித்திருக்கிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இங்கே விருந்தினராக வட மாநிலத்திலிருந்து வருகிற ஒரு கட்சியின் தலைவியாக இருக்கிற ஒருவர், ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிற அந்தப் பெண்மணி இங்கே வந்து சொல்லியிருக்கிற அந்தக் கருத்துக்கள் நிச்சயமாக கண்டனத்திற்குரியவை என்பதை இந்த நேரத்தில் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் சில சில பிரச்சினைகள் இருக்கலாம். சட்டம் ஒழுங்குப் பிரச்சினை சில இடங்களில் இருக்கலாம். அப்படிப்பட்ட குற்றங்களை, கொலைகளை, வன்முறைகளைத் தடுக்க இன்னும் கொஞ்சம் தீவிரமாக அரசாங்கமும் முதலமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால், மற்ற மாநிலங்களோடு தமிழ்நாட்டை ஒப்பிடுகிறபோது, பீகார் போன்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது இங்கே குற்றங்கள் ரொம்பக் குறைவு. அங்கே, பீகாரில்கூட சட்டம் ஒழுங்கைக் காரணமாகக் காட்டி அந்த மாநில அரசைக் கலைத்தது கூடத் தவறு என்றுதான் நான் சொல்வேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மை கொண்ட அரசை நீக்க வேண்டுமா இல்லையா என்பதை அந்தப் பெரும்பான்மை மக்கள்தான் தீர்மானிக்கவேண்டுமே தவிர, அக்காக்களோ தங்கச்சிகளோ சேர்ந்து செய்கிற முடிவாக நிச்சயமாக இருக்கமுடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

***திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது எனது கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதல்வரவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநில அரசின் நிதி ஆதாரங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், சிக்கனம், செயல்திறன், மதிநுட்பம் வாய்ந்த நிதி நிருவாகம் ஆகியவை இந்த அரசின் கோட்பாடுகளாகத் தொடர்ந்து இருக்கும் என்று அறிவித்திருப்பதன் மூலம், இந்த அரசுக்கு மாநிலத்தினுடைய வளர்ச்சியிலே இருக்கின்ற அக்கறையை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள், ஆளுநர் உரை பற்றித் தெரிவிக்கின்றபோது "வெறும் வெற்றுக் காகிதம், வேதனையைத் தீர்க்காது'' என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தமட்டிலே, வெற்றுக் காகிதம் வேதனையைத் தீர்க்காது என்ற அடிப்படையிலேதான் அவர்கள் ஆட்சிக் காலத்திலே கட்டுக் கட்டாக



Currency Note-களைச் சேர்த்து வைத்தார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. நாட்டு மக்கள் இதையெல்லாம் உணர்ந்திருக்கிறார்கள். அந்த வகையிலே யார் எப்படி எடுத்துரைத்தாலும், இந்த ஆளுநர் உரையானது மக்கள் மத்தியிலே ஒரு மகத்தான வரவேற்பைப் பெற்றிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. மேலும், இந்த அவையிலே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள், இதிலே விவசாயிகளுக்கு நலன் தருகின்ற திட்டங்கள் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தமட்டிலே, நானும் ஒரு நடுத்தர விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற வகையிலே இந்த அறிக்கையைப் பார்க்கின்றபோது, இதிலே இருக்கின்ற பெரும்பாலான திட்டங்கள் விவசாயிகளுக்குத்தான் அறிவிக்கப்பட்டுள்ளன என்பதை என்னால் உணர முடிகிறது.

1989 ஆம் ஆண்டில் இலவச மின்சாரத்தைத் தந்து, விவசாயிகளுடைய வாழ்வில் ஒளியேற்றிய மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள், இந்த ஆளுநர் உரையிலேகூட விவசாயிகளுக்கு நேரடியாகப் பயனளிக்கக்கூடிய பாசனக் குளம், குட்டைகளை எல்லாம் தூர் எடுக்கின்ற திட்டங்களும், வறட்சியும், வெள்ளமும் பாதிக்கப்பட்ட நேரத்திலே துயர் துடைக்கின்ற பணிகளும், நில வரியை இரத்து செய்கின்ற அறிவிப்பும், விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள அபராத வட்டியைத் தள்ளுபடி செய்கின்ற அறிவிப்பும் ஆகிய இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது கண்டிப்பாக இந்த அரசு விவசாயிகளுக்கு என்றென்றும் உற்ற துணையாக இருக்கிறது என்பதிலே எந்தவித மாறுபட்ட கருத்தும் இருக்கமுடியாது.

ஆளுநர் உரையிலே மிகச் சிறப்பான திட்டங்களை, குறிப்பாக இந்தியாவிலே முதன்முதலாக தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருப்பதை அனைவரும் வியந்து பாராட்டுகிறார்கள். தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக ஏழை விவசாயிகளுடைய வருமானம் பெருகும் என்பது மட்டுமல்லாமல், ஊரகப் பகுதிகளிலே இருக்கின்ற ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பும் பெருகுவதற்கு வாய்ப்பும் இருக்கிறது. உற்பத்தி அதிகரிக்கவும், வருமானத்தைப் பெருக்கவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சிந்தையில் உதித்த இந்த நல்ல திட்டம் வருங்காலத்திலே புள்ளிவிவரப்படி, கிட்டத்தட்ட 3 மில்லியன் எக்டேர் அளவுக்குத் தமிழகத்திலே தரிசு நில மேம்பாட்டிற்கு வழி வகுத்திருக்கிறது. அந்த வகையிலே தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை வருகின்ற ஆண்டுகளில் தமிழகத்திலே குறிப்பாக,

வறட்சியால் பாதிக்கப்படுகின்ற இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் விரிவுபடுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே என்னுடைய கருத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எத்தனையோ திட்டங்கள் இதிலே இருக்கின்றன. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது, நமக்கு நாமே திட்டத்தைப் பொறுத்தமட்டில் மக்கள் மத்தியிலே மகத்தான வரவேற்பு இல்லை என்று சொன்னார்கள். இந்தத் திட்டம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டதன் காரணமாக, எங்களுடைய பகுதியில் மக்கள் தாமாகவே 25 சதவிகிதம் தொகையைச் செலுத்துவதற்கு முன்வந்து செலுத்திக்கொண்டிருக்கிறார்கள்; ஆனால், அரசு ஒதுக்கும் நிதி போதாது என்றுதான் சொல்லுகிறார்கள் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, வருகின்ற ஆண்டுகளிலே நமக்கு நாமே திட்டத்திற்கு இன்னும் அதிகமான நிதியை ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே, இந்த உரையிலே கூறப்பட்ட கருத்துக்களின் மீது உரையாற்றிய எங்களுடைய ஆளுங்கட்சி உறுப்பினர்களுடைய கருத்துக்களை நான் வழிமொழிவதிலே பெருமைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில், ஓரிரு கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கிணத்துக்கடவு பகுதியிலே தென்னை நார் தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆகவே, வரும் ஆண்டில் கிணத்துக்கடவு பகுதியிலே ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

அடுத்து, கிணத்துக்கடவிலே உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக வருகின்ற ஆண்டிலே நிலை உயர்த்தி, வடசித்தூர் பகுதியிலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சொட்டுநீர்ப் பாசனத்தைப் பொறுத்தவரையில், தற்போதிருக்கிற 4 சதவிகித விற்பனை வரியை இரத்து செய்து, சொட்டுநீர்ப் பாசன விவசாயிகளுக்கு நன்மை அளிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப் பாசனப் பகுதி விவசாயிகள் பயன்பெறத்தக்க நல்ல திட்டத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை



அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை விரைவிலே செயல்படுத்தி ஒரு மடை விட்டு ஒரு மடை பாய்கின்ற பாசன முறையை அமலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆளுநர் உரையில் அறிவித்துள்ள எண்ணற்ற திட்டங்களையெல்லாம் வரவேற்று எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது புதிய தமிழகத்தினுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு கொடுத்திருக்கக்கூடிய உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைக்கூறி, சில கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த ஆளுநர் உரையில் நான் சில முக்கியமான அறிவிப்புகளை எதிர்பார்த்தேன். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அரசு மற்றும் பொது நிறுவனங்களில் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய வேலைவாய்ப்பைப்பற்றிய வெள்ளை அறிக்கையினைப் பற்றி இதிலே அறிவிப்பு வரும் என்று எதிர்பார்த்தேன்; ஆனால், அந்த அறிவிப்பு வரவில்லை.

இங்கே, சமூக நீதிக்கான இட ஒதுக்கீட்டினை முடிவு செய்யும் அதிகாரம் மாநிலங்களுக்கே அளிக்கும் வகையில் அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு இந்த அரசு வேண்டுகோள் விடுத்திருக்கிறது. ஒட்டுமொத்தமாக, தாழ்த்தப்பட்ட மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டினை முடிவு செய்யும் அதிகாரம், மாநிலங்களுக்கே வேண்டுமென்று கேட்கக்கூடிய அரசு, கடந்த 50 ஆண்டுகாலமாக தாழ்த்தப்பட்ட மக்களுடைய இட ஒதுக்கீடு முறையாக அமலாக்கப்படாதபோது, இன்னும் சொல்லப்போனால், நான்கிலிருந்து, ஐந்து, ஆறு சதங்கள்கூட நிரப்பப்படாத பல துறைகள் எத்தனையோ இருக்கின்றன. ஆசிரியர் பணியிடங்கள், வங்கிகள் மற்றும் பிற உயர் பதவிகளிலே மிகக் குறைவான எண்ணிக்கையே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது; மத்திய அரசிடத்திலே ஒட்டுமொத்தமான அதிகாரங்களைக் கேட்கக்கூடிய அரசு, இப்போது மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏன் இட ஒதுக்கீட்டு முறையை முழுமையாக அமலாக்கவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டில், திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலை, தேனி மாவட்டம் Highway S.S. Estate, அதேபோல கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை, முடிஸ், நீலகிரி மாவட்டம் கூடலூர், குன்னூர், கோத்தகிரி ஆகிய பகுதிகளிலே பல இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் கொத்தடிமையிலும் கொத்தடிமைகளாக நடத்தப்படுகிறார்கள். சுதந்திரம் பெற்று, 50 ஆண்டுகாலத்திற்குப் பிறகும் இந்தியச் சுதந்திரத் திருநாட்டில் வாழ்ந்து கொண்டிருப்பதான ஒரு சூழ்நிலையே அவர்களுக்கு உருவாகவில்லை. 300, 400 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட Company ஆட்சிதான் அங்கே நடந்து கொண்டிருக்கிறது. எனவே, அவர்களை முழுமையாக விடுதலை செய்வதற்கு, இந்த நாட்டிலே தோட்டத் தொழிலாளர்களுக்காகக் கொண்டு வரப்பட்ட சட்டங்களை முழுமையாக அமலாக்குவதற்கு அரசு ஒரு Commission நியமிக்க வேண்டுமென்று நான் பலமுறை கேட்டிருக்கின்றேன்; அதைப்பற்றி இங்கே எந்தக் கருத்தும் சொல்லப்படவில்லை.

அதைப்போல, பல ஆலைகள் திறக்கப்பட்டுள்ளன என்று சொல்லப்பட்டு இருக்கின்றது. ஆனால், கோயம்புத்தூரில் 20-க்கும் மேற்பட்ட ஆலைகள் மூடிக் கிடக்கின்றன. அந்த ஆலைகளைத் திறப்பது பற்றியும் எந்தக் கருத்தும் இங்கே சொல்லப்படவில்லை.

பிற்பகல் 1-10

வியாசர்பாடியில் சமீபத்திலே தீ விபத்து ஏற்பட்டது. ஆனால், அந்தத் தீ விபத்து ஏதோ, தானாகவே நிகழ்ந்த நிகழ்ச்சியைப் போன்று எனக்குத் தோன்றவில்லை. அது ஒரு சிலருடைய சதியின் காரணமாக ஏற்பட்டதாகவே நான் கருதுகிறேன். ஒரு கல்லூரி மாணவி சில மாணவர்களால் கிண்டல், கேலி செய்யப்பட்டு இறந்தபோது, அவருடைய குடும்பத்திற்கு இந்த அரசு 5 இலட்ச ரூபாய் வழங்கியது. ஒரு சேட்டினுடைய பெண் இறந்ததற்கு 5 இலட்ச ரூபாய் வழங்கிய அரசு, வியாசர்பாடி தீ விபத்திலே இறந்த 15 சேரிப் பெண்களுக்கு வெறும் 15,000 ரூபாய் மட்டும் வழங்குவது எந்தவிதத்திலே நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

அதைப்போல, மிக முக்கியமான ஒரு பிரச்சினை இந்த ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் வரலாற்றில் நீண்டகாலமாகவே சாதி மோதல்கள் இருந்து வந்துள்ளன. சாதி மோதல்களின் பின்னணியில் உள்ள காரணங்களைக் கண்டறிவதற்கும்,



இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறுவதைக் குறைக்க நீண்டகாலத் தீர்வுகளைக் காண்பதற்கும் அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. சாதிக் கலவரங்களைத் தவிர்ப்பது குறித்து விவாதிக்க 22-10-1998 மற்றும் 26-10-1998 ஆகிய நாட்களில் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் உருவான ஒருமித்த கருத்தின் அடிப்படையில் கொள்கை முடிவெடுத்து அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மத நல்லிணக்கத்திற்கும் சமூக ஒற்றுமைக்கும் குந்தகம் விளைவிக்கக்கூடிய, வன்முறையைத் தூண்டக்கூடிய ஊர்வலங்கள், பேரணிகள், கூட்டங்கள் முதலியவற்றிற்கு அனுமதியளிக்க வேண்டாம் என்று மாவட்ட நிர்வாகங்களுக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கேதான் என்னுடைய கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இங்கே இந்த ஆட்சியில் இருக்கக்கூடிய அரசு எப்படிப்பட்ட கொள்கையை வெளியே மக்களுக்குச் சொல்லியிருக்கக்கூடிய அரசு என்பது உங்களுக்குத் தெரியாதது அல்ல. 2000 ஆண்டுகாலம் வர்ணாசிரமத்தினுடைய அடிப்படையிலே இந்த மண்ணில், இந்த நாட்டினுடைய மக்கள் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி பிளவுபட்டிருக்கக்கூடிய மக்கள் இந்த நாட்டிலே இன்னும் உயர் ஜாதி மக்களாக சில பேரும், தாழ்ந்தவர்களாக பல கோடிக்கணக்கான பேரும் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டிலே 1957-லே முதுகுளத்தூர் கலவரம் வந்தது; 1968-லே கீழவெண்மணியில் அரைப்படி நெல் உயர்த்திக் கேட்டதற்கு 43 பேர் பட்டப்பகலில் தீயிட்டுக் கொளுத்தப்பட்டார்கள். 1978-லே விழுப்புரத்தில் 12 பேர் கொல்லப்பட்டார்கள், 1979-லே ஊஞ்சணியில் புரவி எடுக்கும் பிரச்சினையில் சிலர் கொல்லப்பட்டார்கள். இந்தப் பாதிப்புக்கு ஆளானவர்களையும், இந்தப் பாதிப்பை உண்டாக்கியவர்களையும் ஒரே தட்டில் இந்த அரசு எப்படி வைத்துப் பார்க்கும்? தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுடைய உரிமைகளுக்கு, தங்களுடைய கோரிக்கைகளுக்கு நியாயங்களைக் கேட்டு அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக்கூடிய பேரணிகள், கூட்டங்கள், ஊர்வலங்கள் போன்றவற்றைத் தடை செய்வதற்கு இந்த அரசு எப்படி முன்வந்திருக்கிறது என்று நான் இந்தக் கூட்டத் தொடரில் வினவக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு இதே மன்றத்தில் சுட்டிக்காட்டினேன். தமிழ்நாட்டில் 2000-க்கும் மேற்பட்ட கிராமங்களில் இரட்டை டம்ளர் முறை இருக்கிறது என்று சுட்டிக்காட்டினேன்.

சுட்டிக்காட்டியவுடன், தமிழக முதல்வர் அவர்களும் அதை ஒத்துக்கொண்டார்கள். 2000 கிராமங்களில் இரட்டை டம்ளர் முறை இருப்பது உண்மைதான் என்று சொன்னார்கள். உடனடியாக உள் துறையின் மூலமாக ஓர் அறிவிப்பு வந்தது. இரட்டை டம்ளர் முறையை ஒழிப்பதற்காக, எந்தெந்தக் கிராமங்களில் எந்தெந்தக் கடைகளில் இரட்டை டம்ளர் முறை இருக்கிறது என்று காவல் துறைக்குச் சுட்டிக்காட்டி, நாங்கள் காவல் துறையை அழைத்துக் கொண்டு அங்கே அகற்ற வேண்டுமென்று சொன்னதற்கு, அந்தக் கடைகளின் உள்ளே, இதைச் சுட்டிக்காட்டியவர்கள் போகக் கூடாது என்று சொன்னார்கள்.

அதேபோலத்தான், தேவகோட்டை அருகில் உள்ள கண்டதேவி கிராமத்தில் தேர் வடம் பிடித்து இழுப்பதற்கு, அனைத்து ஜாதி, அனைத்து மக்களுக்கும் சம உரிமை இருக்கிறது என்று உயர் நீதிமன்றத்திலே ஆணை பெற்று, நான் வடம் பிடிக்க தாழ்த்தப்பட்ட மக்களோடு செல்வதற்கு முயன்றபோது, அரசு 144 தடை உத்தரவு போட்டுத் தடுத்தது. நான் கேட்கிறேன், தாழ்த்தப்பட்ட மக்கள் எப்போதெல்லாம் உரிமைக்காகப் போராடுகிறார்களோ, அப்போதெல்லாம் நீங்கள் தடை போட்டுத் தடுப்பது என்பதுதான் சமூக நீதியா? அரசியல் சாசனத்தில் கொடுக்கப்பட்ட உரிமைகளை மறுப்பதற்காகவா அனைத்துக் கட்சிக் கூட்டம் போடப்பட்டது. இதை எந்த அடிப்படையில் நீங்கள் போடுகிறீர்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். நாளை ஒரு சலவைத் தொழிலாளி ஊர்வலம் போனால், பேரணி நடத்தினால், ஒரு சவரத் தொழிலாளி ஊர்வலம் போனால், பேரணி நடத்தினால், நாளை தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் 50 ஆண்டுகாலமாக இடஒதுக்கீடு கொடுக்கப்படவில்லை என்று ஊர்வலம் நடத்தினால், பேரணி நடத்தினால் அதற்கும் தடையா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். இதற்கு ஒரு தீர்க்கமான பதில் தெரிந்தாக வேண்டும்.

*பிற்பகல் 1-15*

பீகாரிலே சமீபத்தில் 22 தலித்துகள் கொல்லப்பட்டார்கள் என்பதற்காக புதிய தமிழகம் சார்பாகத் தமிழகம் முழுவதும் 16 ஆம் தேதி மத்திய அரசு அலுவலகங்கள் முன்னாலே ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அனுமதி கேட்டிருந்தோம். சென்னையிலேயும் அதேமாதிரி அனுமதி கேட்டோம், ஆளுநரிடத்திலே மனு கொடுக்க வேண்டுமென்று. பீகாரிலே நடந்த படுகொலையை, இங்கு இருக்கக்கூடிய ஆளும் கட்சி



உட்பட இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய அத்தனை பேரும் கண்டித்திருக்கிறார்கள். புதிய தமிழகத்தின் சார்பாக ஒரு பேரணி நடத்தி, ஆளுநரிடத்திலே மனு கொடுத்தால், இந்த நாட்டிலே என்ன சட்டம் ஒழுங்கு கெட்டுவிடும்? (மணியடிக்கப்பெற்றது) நீங்கள் இதை ஏதோ ஓர் அரசியல் உள்நோக்கத்தோடு செய்வதுபோலத்தான் தோன்றுகிறதே தவிர, உண்மையாக சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்காக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை போலத் தோன்றவில்லை. எப்படி அடக்கக்கூடியவர்களையும், ஒடுக்கக் கூடியவர்களையும், அடக்கப்படக்கூடியவர்களையும் இரண்டு பேரையும் ஒரே தட்டிலே வைத்துப் பார்ப்பது? சிலபேர் ஜாதி ஊர்வலம் நடத்துகிறார்கள். எதற்காக என்றால், கொள்ளை அடிப்பதற்காக நடத்துகிறார்கள். வழிப்பறி செய்வதற்காக நடத்துகிறார்கள். ஆனால், வர்ணாஸ்ரமத்தின் அடிப்படையிலே இரண்டாயிரம் ஆண்டுகாலமாக வஞ்சிக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் ஊர்வலம் போவதை நீங்கள் எப்படித் தடை செய்ய முடியும்? இரண்டு நாட்களுக்கு முன்பு, 19 தமிழர்களுக்கு கர்நாடகத்திலே வேலை மறுக்கப்படுவது குறித்து இதே சட்டமன்றத்தில் குரல் எழுப்பப்பட்டது. இன்றைக்குக்கூட இந்த நாட்டிலே, இந்திய மண்ணிலே, மொழியினுடைய அடிப்படையில், இனத்தினுடைய அடிப்படையில், ஜாதியினுடைய அடிப்படையில் கொடுமைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதற்கு இதே மாமன்றத்தில் அனைவரும் கண்டனம் தெரிவிக்கவில்லையா? அப்படியென்றால், இங்கே இருக்கக்கூடிய ஆளும் கட்சி தி.மு.க.-வை இனவிரோதம் பாராட்டக்கூடிய, இனவிரோதக் கட்சி என்று ஒதுக்கிவிட முடியுமா? தடை செய்துவிட முடியுமா? (மணியடிக்கப்பெற்றது) இதற்கு என்ன காரணம்? ஏன் இந்த பாரபட்சம்? இந்த ஓரவஞ்சனை எதற்காக?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இன்றைக்கு இந்த மன்றத்தின் மூலமாகத் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியேதீர வேண்டும். நாங்கள் இந்த நாட்டிலே ஊர்வலங்கள் எடுத்தால் என்ன தவறு? வள்ளுவர் கோட்டத்திலேயிருந்து ஆளுநர் மாளிகை நோக்கி மனுக் கொடுக்கப் போவதற்கு இந்த நாட்டிலே சுதந்திரம் கிடையாதா?

பீகாரிலே படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு ஆதரவு கொடுப்பதற்கு எங்களுக்கு இந்த நாட்டிலே அனுமதி கிடையாதா? அப்படியென்றால் நாட்டில் நடக்கக்கூடிய கொடுமைகளையெல்லாம் எப்படித்தான் வெளியே கொண்டு வருவது?

சமீபத்திலே புதுக்கோட்டை மாவட்டத்தில் தென்னூர் என்ற கிராமத்திலே கலப்புத் திருமணம் செய்து கொண்டதற்கு மொட்டை அடித்து கழுதையிலே ஏற்றி ஊர்வலம் சென்றார்கள். அதற்காக, இனிமேல் கலப்புத் திருமணத்திற்கே தடை செய்து விடுவீர்களா? கலப்புத் திருமணமே கூடாது என்று கூறுவீர்களா?

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி உட்காருங்கள். திரு. லா. சந்தானம். (குறுக்கீடு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஒருவரை ஒருவர் பார்த்து பேசுகிறீர்கள். திரு. சந்தானம் உட்காருங்கள். டாக்டர் கிருஷ்ணசாமி ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இதுபோன்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டபோதே இதைக் கண்டித்து நான் மட்டும் வெளியேறவில்லை, குடியாசுக் கட்சி வெளியேறியது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய அனைத்துப் பிரதிநிதிகளும் இதைக் கண்டித்திருக்கிறார்கள். அதே கருத்தைத்தான் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உரிமை, பண்ணையார்களுக்கும், உயர்ந்த ஜாதிக்கும் மட்டும்தான் இருக்கிறதா? தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடையாதா? ஒடுக்கப்பட்டவர்களுக்கு இல்லையா? இதுபோல சட்டங்களைப் போட்டு எங்களுடைய உரிமைகளைப் பறிப்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. இதைத் தமிழ்நாடு அரசு மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும். யார் கொடுமை செய்கிறார்களோ, யார் தவறு செய்கிறார்களோ அவர்களைத் தண்டியுங்கள். அதை விட்டுவிட்டு உரிமைகளுக்காகப் போராடுகிறவர்களை .....



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசியது போதும், உட்காருங்கள். உங்களுக்கு ஒதுக்கிய நேரத்தைவிட அதிகமாகிவிட்டது. திரு. சந்தானம். (குறுக்கீடு) அவர் பேசுவதற்கு நீங்கள் அனுமதி கொடுக்க முடியாது, முதலில், நீங்கள் உட்காருங்கள். திரு. சந்தானம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். அப்படி ஒருவேளை ஜனநாயக உரிமைகளைப் பறிக்கக்கூடிய நடவடிக்கையில் நீங்கள் ஈடுபட்டால், நாங்கள் அந்தத் தடைகளை மீற வேண்டியிருக்கும். தடைகளை உடைத்தெறிய வேண்டியிருக்கும். ஏனென்றால், போலீஸ்காரர்களை வைத்துக்கூட எங்களுடைய கொடிகளைப் பறிக்கிறார்கள். இந்தத் தவறான ஜனநாயக விரோத நடவடிக்கை இருக்கக் கூடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம். உங்கள் Point of Order என்ன? டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காரலாம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிடுகின்றபோது ஏதோ தாழ்த்தப்பட்ட மக்களுக்கெல்லாம் மிகுந்த கொடுமை விளைவிக்கப்படுவதாகவும், அதற்கு இந்த அரசு பாராமுகமாக இருப்பதாகவும் குறிப்பிடுவது முறையற்ற செயல்.

பிற்பகல் 1-20

ஜாதிய ஊர்வலங்களுக்குத் தடை விதித்தது அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே. அந்தக் கூட்டத்திலே மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்களும் கலந்துகொண்டிருக்கிறார்கள். என்னைப் போன்றவர்களும் கலந்துகொண்டிருந்தோம். அதில் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய ஒட்டுமொத்தமான கருத்தை உருவாக்கி அவர்கள் முன்னிலையிலே எடுக்கப்பட்ட முடிவுதான் ஜாதிய ஊர்வலங்களுக்கு, வன்முறையைத் தூண்டுகின்ற ஊர்வலங்களுக்குத் தடை விதிக்க வேண்டுமென்கிற முடிவு. அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டிருந்த அவரும் அதை ஒப்புக்கொண்டார். (குறுக்கீடு) அது தவறு என்று சொல்லி அவர் அந்தக் கூட்டத்தைவிட்டு வெளிநடப்புச் செய்யவில்லை. அந்தக் கூட்டத்திலே அதற்கு மறுப்பும் தெரிவிக்கவில்லை என்பதை இந்த மன்றத்திற்கு நான் சொல்வதற்குக் கடமைப்பட்டவன் என்கின்ற முறையிலே அதைச் சொல்லிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** Point of order.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . . .

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு பேரும் உட்காருங்கள். நேரம் இல்லை; இன்னும் 10 நிமிடங்கள்தான் இருக்கின்றன. திரு. சுந்தரம் பேசி முடிக்க வேண்டும், நீங்கள் உட்காருங்கள். உங்கள் இரண்டு பேர் பிரச்சினையை நீங்கள் அங்கே போய் பேசிக்கொள்ளுங்கள், இப்போது உட்காருங்கள். திரு. பி.ஆர். சுந்தரம் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . . . . .

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை. திரு. சுந்தரம் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது கவர்னர் ஆற்றியுள்ள உரையானது சென்ற ஆண்டு இந்த மாமன்றத்தில் கவர்னர் ஆற்றிய உரையினுடைய மறு பதிப்பாகவே தோன்றுகின்றது. அரைத்த மாவையே திரும்பத் திரும்ப அரைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்த கவர்னர் உரையிலே எந்த விதமான புதிய திட்டங்களும் அறிவிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன். (குறுக்கீடு) இந்த கவர்னர் உரையில் முதல் பக்கத்தில் தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சி மேலும் அதிகரிப்பதோடு தமிழக மக்களின் வாழ்க்கைத்தரமும் உயரும் என்று குறிப்பிட்டு இருக்கிறீர்கள். இது அப்பட்டமான (குறுக்கீடு) உண்மைக்குப் புறம்பானது என்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பார்கள். உங்களுடைய ஆட்சியை என்றைக்கு அமைத்தீர்களோ அன்றைக்கே தனி மனிதனுடைய வாழ்க்கைத்தரம் குறைக்கப்பட்டு, பிழைப்பதற்கு வழியில்லாமல் அன்றாடச் சாப்பாட்டிற்கே இன்று மக்கள் தவித்துக்



கொண்டு இருக்கிறார்கள் (குறுக்கீடு) என்ற சூழ்நிலைதான் இன்று உங்களுடைய ஆட்சியிலே இருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தி.மு.க., உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே என்ன கூறினீர்கள்? சற்று முரசொலி பத்திரிகையைப் புரட்டிப் பாருங்கள். அதிலே என்ன கூறினீர்கள்? கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்று உங்கள் தேர்தல் வாக்குறுதியில் சொல்லப்பட்டது. இதுவரை அதைக் கொடுத்து இருக்கிறீர்களா? (குறுக்கீடு) அதுபோல ஒவ்வொரு வட்டத்திலும் கிராம வளர்ச்சி வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படும்; குறைந்த வட்டியிலே கடன் கொடுக்கப்படும் என்று கூறினீர்கள். கொடுத்தீர்களா? (குறுக்கீடு) தலித் மக்களுக்காக . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கும்போது இடையூறு செய்வது சபைக்கு நல்லது அல்ல. டாக்டர் கிருஷ்ணசாமி, தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒரு நிமிடம், ஒரு நிமிடம் என்று கேட்டு எவ்வளவு நேரம் பேசினீர்கள் என்று உங்களுக்குத் தெரியும், உட்காருங்கள். திரு. சுந்தரம் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலித் மக்களுக்கு உதவுகின்ற வகையில் பஞ்சமி நிலங்களை எல்லாம் மீட்டுத் தருவோம் என்று தேர்தல் வாக்குறுதியில் கூறினீர்கள். அந்தப் பஞ்சமி நிலங்களை எல்லாம் மீட்டுத் தந்தீர்களா?

அடுத்தது, ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு தொழிற் பயிற்சி மையம் (I.T.I) ஆரம்பிக்கப்படும் என்று தேர்தல் வாக்குறுதியில் கூறினீர்கள். அது கவர்னர் உரையில் சென்ற ஆண்டும் இல்லை; இந்த ஆண்டும் இல்லை.

அதேபோல, சென்ற ஆண்டு கவர்னர் உரையிலே பக்கம் 14-ல் புதிய வீராணம் திட்டம் பற்றியெல்லாம் குறிப்பிட்டு இருந்தீர்கள். அந்தப் புதிய வீராணம் திட்டம் என்ன ஆயிற்று என்பதை நான் கேட்கக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

அதுபோல முதல்வர் அவர்கள் குறிப்பிடும்போது என்ன கூறினார்கள்? தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் என்னுடைய தொகுதியைப் போல; அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதியை என்னுடைய சொந்தத்

தொகுதியைப் போலப் பாவிப்பேன் என்று சட்டமன்றத்திலே கூறி இருக்கிறார்; வெளியிலேயும் கூறி இருக்கின்றார். ஆனால், சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்று கூறுகின்ற அரசு என்ன செய்தது?

என்னுடைய இராசிபுரம் தொகுதியைப்பற்றி 3 வருடங்களாகப் பேசிக்கொண்டு இருக்கிறேன். 3 வருடங்களாக இந்தச் சட்டசபையிலே முதல்வர் பதில் கூறிக்கொண்டு இருக்கின்றார். நான் என்னுடைய தொகுதியைப் பற்றி அதிக நேரம் பேசி என்னுடைய நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. (குறுக்கீடு) ஏனென்றால் நான் பேசினால் நீங்கள் அதுகுறித்து எதுவும் செய்வதே இல்லை. (குறுக்கீடு) நான் வேடிக்கைக்காக இதைக் குறிப்பிடவில்லை; விளையாட்டாகக் குறிப்பிடவில்லை. நான் பேசுவதை சற்று கவனமாகக் கேட்டுவிட்டு நீங்கள் சிரியுங்கள். நான் பேசி என்ன பிரயோஜனம்? நீங்கள் என்னை எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், என்னுடைய தொகுதியைப் புறக்கணிக்கிறீர்கள். ஏன் என்னுடைய நேரத்தை வீணாக்க வேண்டும்? சென்ற 10 ஆம் தேதி முதல்வர் அவர்கள் நாமக்கல்லுக்கு வந்தார். தொகுதியைப்பற்றி ஒவ்வொன்றாக நான் எடுத்துக் கூறினேன். 10 அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்தேன். முதல்வர் ஏதாவது பதில் கூறினாரா? ஒரு சட்டமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலேதான்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அச்சடித்த Notice-லே 2, 3 கோரிக்கைகளைக் குறிப்பிட்டிருந்தார். அதில் சம்பந்தப்பட்டவன் நான் என்பதால் விளக்கம் தருகிறேன். 'கோ.சி. மணி by pass road-க்கு அனுமதி அளிக்கிறேன் என்று சொன்னார். இதுவரை அளிக்கவில்லை; அதற்காக உண்ணாவிரதம் இருக்கிறேன். இராசிபுரத்திற்குக் குடிநீர் வரவில்லை, ஆகையினால் உண்ணாவிரதம் இருக்கிறேன்' என்றார். இந்த இரண்டு point-களும் என் சம்பந்தப்பட்டவை. அதற்காகக் குறிப்பிடுகிறேன். இராசிபுரத்தில் அவர்கள் உண்ணாவிரதம் இருப்போம் என்று சொன்னபோது வெள்ளோட்டம் நடந்து கொண்டிருந்தது. Trial



பார்த்துக் கொண்டிருக்கிறோம். 6 நாட்களுக்குப் பிறகு தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர் உண்ணாவிரதத்தில் உட்காருகிறார். (குறுக்கீடு) வரப்போகிறது எனத் தெரிந்தே இவர் உண்ணாவிரதத்தில் உட்காருகிறார். இவரால் வந்ததுமாதிரி சொல்லிக்கொள்ளலாம் என்று உட்காருகிறார். இது என்ன நியாயம்? இதைப்போய் இப்படிச் சொல்லலாமா?

அடுத்து இன்னொரு பிரச்சினை. அவர் ஒரு வழி சாலை செய்து கொடுக்க வேண்டுமென்று என்னிடத்தில் வந்தார். நான் சொன்னேன், அவசரமாக, குறிப்பிட்ட நேரத்தில் செய்ய வேண்டுமென்று சொன்னால், 3 பேர்கள்தான் அங்கே இருக்கிறார்கள். அவர்களிடத்திலே நிலத்தினை ஒப்படை செய்ய ஒப்புதல் வாங்கி வாருங்கள்; ஒப்புதல் பெற்று வந்தால் வெகு வேகமாகச் செய்யலாம்; அரசுக்குப் போய் அனுமதி பெற்று acquire பண்ண வேண்டுமென்றால் காலதாமதம் ஆகும். அவர்களுக்குக் கூட உங்களுடைய நிதியிலிருந்தே பணத்தைக் கொடுப்பதாக இருந்தால் நானும் நடவடிக்கை எடுக்கிறேன் என்றேன். நீங்கள் அவர்களைப் போய்ப் பார்த்து consent letter வாங்கி வாருங்கள் என்று சொன்னேன். வருகிறேன் என்று போனவர் திரும்பி இதுவரை வரவேயில்லை. பிறகு இந்தப் பணி எப்படி முடியும்?

**திரு. பி.ஆர். சுந்தரம்**: வீணாக, உண்மைக்கு மாறான செய்திகளை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசக் கூடாது. நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கூட மார்ச் 15 ஆம் தேதிக்குள் பூலாம்பட்டி குடிநீர் வருமென்று கூறினார்களே! நீங்கள் எப்படி கிருஷ்ணா நதி நீர்....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** உண்மைக்குப் புறம்பான செய்தியை இந்த அவையில் சொல்ல வேண்டிய அவசியத்தில் நிச்சயமாக நானும் இல்லை; இந்த அரசும் இல்லை; முதலமைச்சரும் இல்லை. எதையெதையோ நினைத்துக் கொண்டு, அவலை நினைத்துக்கொண்டு உரலை இடித்தால் உருப்படுமா அது?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எப்படி கிருஷ்ணா நதி நீர் வந்துவிட்டது என்று கூறினீர்களோ, அதேபோல பூலாம்பட்டி குடிநீர் வருகிறது என்று சொன்னீர்கள். வேண்டுமென்றே நீங்கள்....

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எதையாவது புரிந்து கொண்டு பேச வேண்டும். கிருஷ்ணா நீர் வரவில்லையா? சொல்லுங்கள். (குறுக்கீடு) ஆம், வந்துவிட்டது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதேபோன்று ஒவ்வொன்றாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். by pass திட்டத்திற்காக உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் மனு கொடுத்தேன். அந்த நிலங்களைக் கையகப்படுத்தி, பணத்தை அளிப்பதற்கு அரசாங்க விதிகளிலே வழியில்லை என்று கூறினீர்கள். அதற்குப் பிறகு நான் அதிகாரிகளையெல்லாம் சந்தித்துக் கேட்டேன் . . . .

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இதில் யார் உண்மைக்குப் புறம்பாகப் பேசுகிறார்கள் என்று இப்போது தெரியவரும். நிலத்தை acquire பண்ணுவதற்கு ஓராண்டு காலமாவது ஆகும். விரைவாகச் செய்து முடிக்க வேண்டுமென்று சொன்னால் உங்களுக்கு ஒதுக்கியிருக்கிற மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்குரிய தொகையைக் கொடுத்து, அவர்களிடமிருந்து ஒப்புதல் கடிதம் வாங்கிக் கொண்டு வந்தால் அந்தப் பணியை முடித்துத் தருகிறேன் என்று நான் சொன்னது உண்மை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மேம்பாட்டு நிதியிலிருந்து நிலத்தினைக் கையகப்படுத்துவதற்கான தொகையைச் செலுத்துவதற்கு விதிகளில் இடம் இருக்கிறதா? இல்லையா? இதிலிருந்து செலவழிக்கலாம் என்று விதி இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நானே சொல்லி இருக்கிறேன் என்றால் விதி இல்லாமல் எப்படிச் சொல்ல முடியும்? அதுவும் பொது நலனுக்குத் தேவையான பணி. சாலைப் பணிக்காகக் கையகப்படுத்தப்படுகின்ற நிலம். அதற்குக் கொடுக்க முடியாது என்று யார் சொல்வார்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதேபோல மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூன்று முறை இந்தச் சட்டமன்றத்திலே உறுதியளித்திருக்கிறார்கள். இராசிபுரத்தில் ஒரு பெரிய தொழிற்சாலை அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். முட்டை பவுடர் தொழிற்சாலை அமைக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். இதுவரை அதுகுறித்து எந்தவிதமான அறிவிப்பும் இல்லை. ஏன்? என்ன காரணம்? எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்பதால் புறக்கணிக்கிறீர்களா? (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** முதலமைச்சர் அறிவித்தார், அது செயல்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். நான் அவரை ஒன்று கேட்க விரும்புகிறேன்.



எதிர்க்கட்சியிலே உள்ள உறுப்பினர்களும் அல்லது தோழமைக் கட்சியிலே உள்ள உறுப்பினர்களும் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு முதலமைச்சர் வரும்போது, அந்த உறுப்பினருடைய பெயர் அங்கே கட்டாயம் போடப்பட வேண்டுமென்று நானே அங்கேயுள்ள அதிகாரிகளிடத்திலே அறிவுறுத்தி மாண்புமிகு உறுப்பினருடைய பெயர் அழைப்பிதழிலே போடப்பட்டும் நான் கலந்து கொண்ட எந்த நிகழ்ச்சிக்கும் வராமல் அவர் புறக்கணித்தார், மறுப்பறிக்கைகள் வெளியிட்டார். அது ஒரு முறை. இரண்டாவது முறை செல்லும்போது முதலமைச்சருடைய வருகையைக் கண்டித்து உண்ணாவிரதம் மேற்கொண்டார். இவ்வளவுக்கும் பிறகு என்னுடைய தொகுதிக்கு ஒன்றும் செய்யவில்லை, ஒன்றும் செய்யவில்லை என்று கேட்கிறவர் ஒரு முறையாவது முதலமைச்சர் வரும்போது வந்து பார்த்துப் பேசலாமே? அப்படிப் புறக்கணிக்கிற அளவிற்குக்கூட ஒரு முதலமைச்சர் இருந்தால், அந்த முதலமைச்சர் எப்படி சட்டமன்றத் தொகுதியை புறக்கணிக்காமல் இருக்க முடியும்? ஆனால் புறக்கணிக்கவில்லை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல தண்ணீர்ப் பிரச்சினை, சாலைப் பிரச்சினை, இவையெல்லாவற்றிற்கும் போதிய அக்கறை அந்தத் தொகுதியில் காட்டப்பட்டிருக்கிறது. ஏனென்றால், அடுத்த முறை நீங்களே அங்கு நின்று ஜெயிக்கப் போகிறீர்கள் என்று இல்லை. நாங்களும் ஜெயிக்கக் கூடும் அல்லவா? ஆகவே, எல்லாத் தொகுதிகளையும் இந்த அரசு ஒன்று போலத்தான் கருதிச் செயல்படும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு அதைத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகத்தான் உண்ணாவிரதம் இருந்தோம். அவர் இதற்கு அறிக்கை கொடுப்பார் என்று நினைத்தோம். ஆனால் என்னுடைய உயிரைப்பற்றிக்கூட முதல்வர் அவர்களுக்குக் கவலையில்லை. சாகும்வரை உண்ணாவிரதம் என்று கூறினோம். அதைப்பற்றி அவர் கவலைப்படவில்லை.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, உண்ணாவிரத வரலாற்றில் இந்த உலகத்திலேயே காந்தியடிகளுடைய உயிரைப்பற்றி அம்பேத்கர் கவலைப்பட்டார். அதேபோல, நான் சுந்தரத்தினுடைய உயிரைப்பற்றி, அந்த உண்ணாவிரதம் உண்மையிலேயே இருந்திருந்தால் கவலைப்பட்டிருப்பேன்.

[1999 பிப்ரவரி 20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (22-2-1999) காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

42. 1987ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக சோயா பீன்ஸ் (அனைத்து வடிவங்களிலும்), பொறுத்தமட்டில் தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 2-9-1998 ஆம் நாளிட்ட 338 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (c) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

43. 1997ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்ட கிராம ஊராட்சிகள் குழு எழுத்தர் வரி வசூலிப்பவர் (நியமனம், ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு, மேல்முறையீடு) விதிகள் வெளியிடுவது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 11-09-1997 ஆம் நாளிட்ட 278 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

44. 1979-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியம் (கடன் பிடித்தம்) விதிகளில் திருத்தம் ஒன்று செய்தது குறித்து எரி சக்தித் துறையின் 07-09-1998 ஆம் நாளிட்ட 130 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியச் (கடன் பிடித்தம்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1978) 7(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

45. பரிமாற்ற அடிப்படையில் 26-08-1998 முதல் 24-09-1998 வரையிலான கால அளவில் ஓசூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், திருச்சி, தஞ்சாவூர், விழுப்புரம், பெங்களூருக்கும் வேளாங்கன்னிக்குமிடையே

D
V2I1,S1:1999 N99.63.3



தற்காலிக அனுமதிகளின் பேரில் இயக்கிய கர்நாடக மாநில சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் ஆறு பயணிகள் பேருந்துகளுக்குச் செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்கு அளிப்பது குறித்து உள் (போக்குவரத்து-VI) துறையின் 27-08-1998 ஆம் நாளிட்ட 530 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

46. 1994-95 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பண்ணைகள் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)].

47. 1995-96 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பண்ணைகள் கழகத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)].

48. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பண்ணைகள் கழகத்தின் இருபத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)].

49. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பண்ணைகள் கழகத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)].

50. 1996-97 ஆம் ஆண்டிற்கான சதர்ன் ஸ்ட்ரக்சுரல் நிறுவனத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் (மத்தியச் சட்டம் 1/1956) வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

6. 1997-98 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

—0—

22088

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.